Duplicate
218/3-51
19F2n

PRAISE THE LORD

JESUS

Saviour | **Baptizer**
Healer | **Coming King**

THE LIGHT OF THE WORLD

இயேசு

இரட்சகர் | ஸ்நானகர்
வைத்தியர் | வரப்போகிற ராஜா

உலகத்தின் ஒளி

CHRISTIAN REVIVAL HYMNS

கிறிஸ்தவ எழுப்புதல் கீதங்கள்

"உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன்
பாடி .... ஸ்தோத்திரியுங்கள்"

கோலோ 3 : 16, 17.

... ம்போது என் உதடுகளும் நீர் மீட்டுக்கொண்ட
... ாவும் கெம்பீரித்து மகிழும்" சங் 71 : 23

... ்தத்தை உயர்த்தி சந்தோஷம் உண்டாகப்
பாடும்படி நிறுத்த வேண்டும்" 1 நாளா 15 : 16

KIRUSTAVA ELUPPUTAL KITANKAL
13 AUG 1956
MADRAS

PRAISE THE LORD

JESUS

Saviour — Baptizer
Healer — Coming King

THE LIGHT OF THE WORLD

இயேசு

இரட்சகர் — ஸ்நானகர்
வைத்தியர் — வரப்போகிற ராஜா

உலகத்தின் ஒளி

CHRISTIAN REVIVAL HYMNS

கிறிஸ்தவ எழுப்புதல் கீதங்கள்

"உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன்
பாடி .... ஸ்தோத்திரியுங்கள்"
கொலோ 3 : 16, 17.

"நான் பாடும்போது என் உதடுகளும் நீர் மீட்டுக்கொண்ட
என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்" சங் 71 : 23

"தங்கள் சத்தத்தை உயர்த்தி சந்தோஷம் உண்டாகப்
பாடும்படி நிறுத்த வேண்டும்" 1 நாளா 15 : 16

... PUBLIC LIBRARY
13 AUG 1956

அட்டவணை.

அ

அதிகாலையில் விழித்தெழும்பி	...	57
ஆசேவருவீர் எங்கள் மனது	...	91
அருணோதயம் எழுந்திடுவோம்	...	29
அருளின் மாமழை பெய்யும்	(E. 45)	128
அல்லேலூயா... இயேசு நாதனுக்கே	...	98
அன்பாம் இயேசுவைப் பார்த்து	...	116
அன்பரின் நேசம் அளவிடலாகுமா	...	72
அன்பர்கள் ஆ! ஆனந்தம்	...	112
அன்பரே உமக்கென்றும் துதி	...	168
அன்பே அன்பே அன்பே	...	107
அன்பனே மகா அன்பனே	...	66
அன்புள்ள நேசர் இயேசு	(E. 46)	129

ஆ

ஆ எந்தன் பாக்யத்தை எண்ணிட	...	158
ஆண்டவனே உமது எண்ணம்	...	45
ஆதிச்சபையின் ஆவியின் எழுப்புதல்	...	126
ஆராய்ந்து பாரும் கர்த்தரே	(E. 52)	138
ஆரிவராரோ காவினில்	...	73
ஆவியின் அருள் தரவா	...	150
ஆழத்தில் நின்று அருள் மகிமை	...	93
ஆனந்தக் கண்ணீர் பொழியும்	...	3
ஆனந்தப்பாடல்கள் பாடிடுவேன்	...	143
ஆனந்தமே பரமானந்தமே	...	21
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே	...	33
ஆனந்தம் கொண்டுள்ளாந்தான்	...	41
ஆனந்தம் கொண்டு அகமகிழ்வுடனே	...	62

இ

இ[illegible]ன் அன்புபாரம்	...	8
இயேசு தான் கதியே	...	161

இயேசு நாதனைப் போற்றிடுவோம் ... 88
இயேசு நாதர் ஐங்காயத்தை (E. 50) 136
இயேசு மணவாளனே ... 101
இயேசு ரட்சகர் சிலுவை ... 50
இயேசு ராஜன் வாரார் ... 153
இயேசுவண்டை சேரவும் ... 10
இயேசுவரும் நாளதினில் ... 23
இயேசுவின் பின்னாலே ... 11
இயேசுவின் முகம் என்று ... 32
இயேசுவின் சிந்தையை ... 103
இயேசுவின் சித்த மிதே ... 176
இயேசுவே நானும் முடன் ... 31
இயேசுவே என் நம்பிக்கை ... 36
இயேசுவே கருணாகரா ... 87
இயேசுவை முழுமனதாலே ... 92
இயே சென்னும் நாமம் ... 89
இராஜாதி இராஜாவாக ... 140
இன்ப துன்ப நேரத்திலும் ... 18
இன்பக் கானானுக்குள் ஏழை ... 26

ஈ

ஈயுமையா உம்மேலான அன்பு ... 48

உ

உமக்கேன் பாடோ ... 120
உமை நம்பினோர் மாண்டதில்லை ... 83
உலகமாய் கையிலே ... 159
உன் தேவனைச் சந்திக்க ... 25
உன்னத வீட்டை சீக்கிரம் ... 27

எ

எந்தன் இயேசு உன்னதத்தில் ... 19
எந்தன் சேயே ... 163
எந்நாளுமே துதிப்பேன் ... 39
எப்போதும் இயேசு நாதா ... 15
எழுந்திடுவீர் நீர் வாலிபரே ... 12
எழும்பு சீயோனே ... 64
என்றும் புகழ்வேனே ... 148

என் அருமை ரட்சகா (E. 17) 172
என் ஆயுள் முழுதும் ... 102
என் இயேசுவே உம்மையே ... 14
என்ன சிங்காரமையா ... 51
என்ன சுகம் ஆஹா ... 28
என்னையுமக் கொப்புவித்தேன் ... 2
என்மேலுள்ள நின் சர்வ ... 124

ஏ

ஏழையை மீட்ட இயேசுவே ... 122

ஒ

ஒப்பில்லாத சிநேகத்தால் (E. 21) 173

க

கருணையின் தேவா ... 82
கருணையுள்ள தேவ சுதன் ... 162
கரை ஏறி உமதண்டை (E. 47) 130
கர்த்தன் சத்துவத்தில் ... 20
கர்த்தா திருத்துவ ... 165
கல்வாரி மலையில் ... 46

கா

காணாமற்போன என்னை ... 13
காப்பார் உன்னைக் காப்பார் ... 85
காலை ஒளி தோன்றவே ... 7

கி

கிருபை வேண்டும் நாதா ... 38
கிருபை காலம் ஓடியே போகுது ... 43

கீ

கீதம் கீதம் ஜெய ஜெய கீதம் ... 139

கு

குருசின்மேல் குருசின்மேல் ... 9

கோ

கோடா கோடி ஸ்தோத்திரம் ... 79

ச

சத்தியமும் ஜீவனுமாய் ... 6

சா

சாலேயின் நகராதிபதி வருகை ... 54

சீ

சீயோனின் சிகர மீதினிலே ... 94
சீயோனே நீ விழித்தெழும்பு ... 117
சீயோன் மலையதிலே ... 86

சு

சுத்தர் துதிக்கும் வீடே ... 34

செ

செல்வோம் செல்வோம் ... 77

சொ

சொந்தகுமாரன் ... 141

த

தன் ஜீவனை தந்தென்னை ... 68

தி

தியாக மெனக்கோ நாதா ... 121
திவ்ய அன்பின் சத்தத்தை (E. 14) 171

து

துதி அல்லேலூயா துதி ... 154
துதிப்பேன் இயேசுவின் பாதம் ... 58
துதிப்பேன் துதிப்பேன் ... 164
துதிப்போம் துதிப்போம் ... 40
துதியில் தேவா வருவாய் ... 65
துன்பம் உன்னை சூழ்ந்தலைக்கழித்தாலும் ... 166

தூ

தூதர்கள் பாடுவதேனோ ... 104
தூயா தூயர்வே ஸ்தோத்திரம் ... 111

தே

தேவதயா பரனை துதிப்பதில் ... 123
தேவனை துதியுங்கள் ... 132
தேவனை உயர்த்தி துதியுங்கள் ... 134

தேவன் பின் ஜீவியமே ... 160
தேவா இவ்வேளை இன்றே ... 76
தேவாட்டின் திரு ரத்தத்தால் ... 30
தேவாதி தேவனே மகத்வா ... 78
தேவாதி தேவனின் நேசகுமாரன் ... 80
தேவாதி தேவ திருச்சுதனே ... 174
தேவா ஜீவனுள்ளோர் தேடும் ... 56

நா

நாதனேசுவே இங்கு வருவீர் ... 95
நான் செய்த பாதகம் எப்படி ... 37
நான் ப்ரமித்து நின்று ... 114

நி

நித்ம் தோத்திரம் செய்குவேன் ... 167

நே

நேற்றும் இன்றும் என்றும் ... 100

ப

பரம ராஜன் தங்கும் மகிமை ... 60
பரலோக நாடெந்தன் ... 118
பரனின் சுதனை பாரினில் உதித்த ... 156
பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா (E. 51) 137
பரிசுத்தர் கூட்டம் ... 24
பரிசுத்தர் பரிசுத்தரே பரன் ... 109
பரிசுத்தர் பரிசுத்தரே உமை ... 145
பல மனித்தேதமை புதுவழி ... 96

பா

பாடிடுவோம் ஒன்றாய் கூடி ... 81
பார்ப்பேனோ என் நேசரை ... 106
பாலகன் போல் தன்னை ... 67
பாவ சஞ்சலத்தை நீக்க (E. 49) 135
பாவத்தின் பலன் நரகம் ... 44
பாவியை மீட்கப் பாரினில் ... 84

பி

பிரதான தூதன் தொனிக்க ... 70

பு

புண்ணியர் புதுமையைத் தேடி ... 133

பூ

பூதலத்தில் புண்ணியனை புகழ்வோம் ... 99
பூவினில் வந்தவிண்தேனே ... 55
பூவின் நற்கந்தம் வீசும் (E. 44) 127

பெ

பெலமுள்ள நகரமாம் இயேசு ... 5

போ

போற்றுவோம் இயேசுவுக்கே ... 74

ம

மகிமையுள்ள பரம ராஜா ... 47
மகிழ்வோம் இயேசுவில் ... 75
மறப்பேனோ நான் ... 149
மற்றோர்க்காய் வைக்கவையா ... 59
மனுக்கோலமேனோ ... 71
மன்னன் கிறிஸ்து ... 115

யோ

மாமகத்வம் தேவனுக்கே ... 113
மாலை மயங்கும் போது ... 170
மாற்கு பதினாறு பதினாறின் படி ... 169

யோ

யோர்தான் நதியோரம் ... 61

வ

வந்தாளும் இயேசுவே ... 4
வந்திடுமே இயேசு வண்டை ... 69
வந்திடும் வேளை ... 157
வந்து ஆளையா ஆவிதந்து ... 17
வரவேணும் பரனாவியே ... 16
வருகிறார் கார்த்தையை சேர்த்திட ... 52
வருவீர் மன மகிழ ... 175

வா

வாரும் தேவா வானவ ராஜா ... 63
வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி ... 42

வாரூர் இயேசு ராஜன் ... 152
வானத்தில் தூதர்கள் ... 97
வானலோக ராஜா ... 53
வானிலோர் திருநாள் ... 108

வீ

வீர தீரமாய் நேரும் சிறுமாய் (E. 48) 131

வெ

வேகம் இயேசு வானில் ... 155

வை

வையகந்தனை நடுத்தீர்ப்பு ... 49

ஜீ

ஜீவ ஞான இயேசு ... 90
ஜீவ பாதையில் வீசும் ... 35
ஜீவனுள்ள தேவனே ... 144

ஜெ

ஜெகமதில் உதித்த ஜெய ... 119
ஜெபம் கேளுமே ... 146
ஜெய கீதம் பாடிடுவோம் ... 22

ஜோ

ஜோதி தோன்றுமோர் தேசம் ... 115

ஸ்

ஸ்தோத்திரம் இயேசு நாதா ... 1
ஸ்தோத்திரம் செய்குவேனே ... 147
ஸ்தோத்திரம் துதி பாத்திரா ... 105
ஸ்தோத்திரம் தேவா ... 142
ஸ்தோத்திர பலியதை ... 125
ஸ்தோத்திரம் பாடி போற்றுவேன் ... 110

CONNEMARA PUBLIC LIBRARY
13 AUG 1956

கிறிஸ்தவ எழுப்புதல் கீதங்கள்

---

1 இயேசு நாதா ஸ்தோத்திரம்

சரணங்கள்

1 ஸ்தோத்திரம் யேசுநாதா, உமக்கென்றும் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார் [யேசுநாதா
திருநாமத்தினாதரவில்.

2 வானதூதர் சேனைகள் மனோகர கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடித்துதிக்கப் பெறும்
மன்னவனே உமக்கு.

3 இத்தனை மகத்துவமுள்ள பதவி, இப்புழுக்களாம் எங்களுக்கு
எத்தனை மா தயவு, நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்!

4 நின் உதிரமதினால், திறந்த நின் ஜீவப் புது வழியாய்
நின்னடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்.

5 இன்றைத்தின மிதிலும் ஒருமித்துக்கூட உம் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காக உமக்கென்றும்
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரமே!

6 நீரல்லால் எங்களுக்குப் பரலோகில் யாருண்டு ஜீவநாதா
நீரேயன்றி இகத்தில், வேறே ஒரு
தேட்டமில்லை பரனே.

---

2 உம் சித்தம் ஆகக்கடவது.

பல்லவி.

என்னையுமக் கொப்புவித்தேன் நின் மனம் போல் நடத்தையா

சரணங்கள்.

1 இன்பமுள்ள ஜீவியந்தான் ஏழை யான் விரும்பவில்லை
துன்பமில்லா சொகுசுகளும் தொல்லுலகில் தேவையில்லை—எ

2 ஜீவனோ சாவினோ தேவநாமம் சீரிலங்க
பாவியெனக் காவியீந்து பாரில் வைத்தால் போதுமையா—எ

3 நேர்மையுறும் பாதையிலோ நெடுகவே முட்காடதிலோ
நீடிய பொறுமையிலோ சித்தம் சித்தம் சாவினிலோ —என்

4 பஞ்சமதோ பட்டினியோ மிஞ்சிய கொடும் விபத்தோ
சஞ்சலமோ வந்திடினும் ஸ்வாமி என்னைக் கைவிடரே —என்

5 மூத்தமக்கள் போல என்மேல் மூர்க்கவெறி கொண்டபோதும்
மௌனமாய் எல்லாம் சகிக்க மன்னவா எனக்கருள்செய் —எ

6 சொந்த ஜனம் மோசம்பல சூழ்ந்து என்மேல் செய்திடினும்
சுந்தர மைந்தனுனைப்போல் சோர்ந்திடாதெனக்கருள் கூர்-என்

3 என் கண்கள் அவரைக் காணும்.

பல்லவி

ஆனந்தக் கண்ணீர் பொழியுந் தேசமதில்
நான் அன்பர் இயேசுவின் பொன்முகம் காணுவேன்.

அனுபல்லவி

சந்தோஷமே அதி சந்தோஷமே எனக்
கானந்தமே பரமானந்தமே யேசு.

சரணங்கள்

1 முன்னொருநாளில் என் கண்ணீரைக் கண்டவர்
என்னிலிருந்து துயரை எடுத்தவர்
இந்நிலந்தன்னில் இவர்க்கு நிகரெவர்
என்னுள்ளில் தங்கிடு மேசு மாராஜன்போல்.

2 யுத்தக்களத்தில் என் சேனைத்தலைவரும்
யுத்தத்தில் யாதுமே தோல்வி வர விடார்.
ஆதி இடைகடை தோல்விபோற் தோன்றுகில்
ஆத்திரமாயன்பர் தாங்கி நடத்துவார்.

3 ஒவ்வொரு நாளிலும் இயேசு என்னுடனே
ஒவ்வொரு சோதனை தன்னிலு மிருப்பார்
சார்ந்து இளைப்பாற இயேசுவின் மார்புபோல்
பாரில் நினைத்திடில் வேறொன்றெனக்கில்லை.

4 தாயை மறந்து என் தந்தை மறந்து என்
வேலை இனம் ஜனம் யாவும் மறந்தேன் நான்
என்னுடன் தங்கிடும் இன்ப மஹா ராஜன்
தன் பாதம் சரணம் எல்லாம் எனக்கவர்.

5 என்னை மறவாத காருண்ய பூமானே
உம்மை மறந்து யான் என்ன செய்வேன் ஐயா
என்றும் எனக்குள்ள தெல்லாம் மறந்து நான்
இன்றும் என்றும் உமக்கூழியம் செய்குவேன்.

---

4 வந்தாளும் இயேசுவே.

பல்லவி

வந்தாளும் யேசுவே வாருமிதில்—தேவ
மைந்தர்கள் கூடு மிந்நேரமிதில்.

சரணங்கள்

1 பத்முதீவில் பரிசுத்த நாளில் வந்த வண்ணமே
சத்துருக்கள் கூட்டமெல்லாம் சக்திபற்றுச்சோரவே
இத்தினத்தில் இங்கு வந்திடும்—தேவா —வந்தா

2 நல் வழியை நாடிடாமல் ஓடும் நரர் யாவர்க்கும்
கல்வாரியின் அன்பை யின்று கர்த்தனே நீர் காட்டியே
நற்குணம் அவர்க்கு நல்கிடும்—தேவா —வந்தா

3 சக்தியில்லை எங்களுக்குச் சாம்பலும் தூசியும்
கர்த்தனே கருணை கூர்ந்து தந்திடும் சர்வாயுதம்
புத்தியாக யுத்தம் செய்திட—தேவா —வந்தா

4 என்னை நோக்கிக்கூப்பிடில் அளித்திடுவேன் உத்தரம்
பின்னும் நீ அறிந்திடாத வல்லமைகள் காட்டுவேன்
என்றவா இந்நேரம் வாருமேன்—தேவா —வந்தா

5 சதாகாலங்களிலும் இருப்பேனுங்கள் கூடவே
சத்துருவின் ஆயுதங்கள் ஒன்று மணுகாதென்றீர்
ஆதலாலனந்தம் ஸ்தோத்திரம்—தேவா —வந்தா

---

5 விசுவாசக் கப்பல்.

சரணங்கள்

1 பெலமுள்ள நகரமாம் யேசுவண்டை
பயமின்றி ஓடி நீ வந்திடுவாய்
சஞ்சலத்திற் கொரு வழியில்லையே
சந்ததம் அவர் நம்மைக்—காத்துக் கொள்வார்.

2 நிலையில்லா வுலகத்தின் அலைகளாலே
அலைந்திடும் பயனென்ன புதல்வனே நீ
விசுவாசக் கப்பலில் க்ஷேமமாக
யாத்திரை செய்பவர்க்கு—லோகம் வேண்டாம்.

3 கழுகு போல் பறந்து நீ உன்னதத்தில்
வாழ்கின்ற ஜீவியம் வாஞ்சித்துக்கொள்
காத்திருந்திடுகில் ஈந்திடுவார்
பெருக்கமுள்ள பெலன்—மக்களுக்கு.

4 மரணம் தான் வருகிலும் பயப்படாதே
விரைந்துன்னை கர்த்தர் தான் காத்திடுவார்
யாதொன்று முன்னைப் பயப்படுத்த
எங்குமில்லை யென்று—விசுவாசிப்பாய்.

5 ஆறுதலடையு மந்நாடு சென்று
யேசுவின் மார்பில் நாமானந்திப்போம்
பரம சுகம் தரும் ஊற்றுகளில்
பரனோடு நித்தியம்—பானம் செய்வோம்.

---

6 சுத்திகரித்து அபிஷேகியும்.

சரணங்கள்

1 சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்
கர்த்தனே எங்கட்குக் கரம் தந்து என்றும் தாங்கிடும்
சுத்தமாய் நடப்பதற்கும் சுத்த ஆவி தந்திடும்
சித்தமோடு இந்தவேளை வந்து இறங்கிடும்.

பல்லவி

வானந்திறந்தருளும் பல தானங்களையிந்நேரமதில்
வானவனே ஞானமுள்ள வல்ல குருநாதனே
தேனிலும் மதுரம் திவ்ய ஆசீர்வாதங்கள்

2 என்னை முற்றும் மாற்றிட உன்னத பெலனூற்றிடும்
இன்னும் இன்னும் ஈசனேயும் நல்வரங்களீந்திடும்
கண்ணிகளிற் சிக்கிடாமற் கண்மணிபோற் காத்திடும்
நன்மையும் மீட்பருமென் காவலும் நீரே. —வான

3 சுய ஆடம்பரம் முற்றும் சுட்டெரிக்க வேணுமே
தயவு தாழ்மையிலுவி தந்தருளவேணுமே
மாயமான யாவினின்றும் மனமதைப் பேணுமே
ஆயனே அடியார்களின் அடைக்கலமே. —வான

4 அதிக மதிக அன்பில் அமிழ்ந்து அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்தும்மைப் போற்றிட
அதிசயமே அகத்தின் குறைகளகற்றியே
இதுசமய முன்னத பெலனீந்திடும். —வான

---

7 கர்த்தர் கண்ணீரைத் துடைப்பார். (E. 7)

சரணங்கள்

1 காலை ஒளி தோன்றவே
காரிருளும் நீங்கவே
கர்த்தன் வந்து கன்னியை, வீடுசேர்ப்பார்
தேவ வாசம் நம்முடன்
புது எருசலேமிலே
கண்ணீர் யாவும் துடைப்பார், காலை வேளை.

பல்லவி

அல்லேலூயா, அல்லேலூயா
முகா முகமாய்க் காணலாம்
பூவில் ஓடி முடிந்தபின்
அல்லேலூயா, அல்லேலூயா
காண்போம் அவர் கிருபையால், அல்லேலூயா. — அல்

2 கண்ணிமைப் பொழுதிலே
காசினிவிட்டேகுவோம்
காகளம் தொனிக்குமே, அல்லேலூயா
கரை சேர்வோம் கடைசியாய்
பயம் துக்கம் போகுமே
ஆளுவோம் யேசுவுடன், அல்லேலூயா. —அல்

3 ஆட்டுக் குட்டி சீயோனில்
கூட்டர் பரி சுத்தர் தான்
நெற்றியி லிருப்பது தேவ நாமம்
கூட்டமாகச் சேர்ந்தவர்
புதுப் பாட்டுப் பாடுவார்
முதற் பலனிவர்களே, அல்லேலூயா. —அல்

4 சந்தோஷக் கீதங்களோடு
சந்தோஷிப்போம் நாமெல்லோரும்
மைந்தன் மண நாளதில், அல்லேலூயா
மகிமை ராஜ்ஜியங்களில்
தரித்து வெண்மை வஸ்திரம்
போரில் வென்றோர் வாழுவோம், அல்லேலூயா. —அல்

8 இயேசுவில் முசிப்பாறுதல்.

சரணங்கள்

1 இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே
நேசமுசிப் பாறுதல் இயேசுவில் கண்டேன் யானும்.

2 என்ன மதுரம் அவர் நன்னய நாமச்சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே.

3 பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இவைகளை என் தஞ்சம் யேசிருக்கையில்.

4 வியாதியால் எந்தனது காயங் கெட்டுப் போயினும்
மாயத தோற்றத்தை யேசு நாயகன் மாற்றிடுவார்.

5 லோகம் என்னை எதிர்த்து போவென்று சொல்லிடினும்
சோகம் அடையேனே என் ஏகன் எனக்கிருக்க.

6 என்னென்ன மாய லோகக் கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமாய் யேசு என்னை நடத்திடுவார்

7 பாவத்தால் என்னில் வந்த சாபக் கறைகள் மாற்றி
சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார்.

8 ஆசை யென் மணவாட்டி ஆக்குவேன் உன்னை என்னும்
நேச உறுதியுரை இயேசு எனக் களித்தார்.

---

9 சிலுவையைச் சிந்திப்பேன்.

சரணங்கள்

1 குருசின்மேல் குருசின்மேல் காண்கின்றதாரிவர்
பிராணநாதன் பிராணநாதன் என் பேர்க்காய்ச் சாகின்றார்.

2 பாவத்தின் காட்சியை ஆத்மாவே பார்த்திடாய்
தேவகுமாரன் மா சாபத்திலாயினார்.

3 இந்த மா நேசத்தை நிந்தையாய்த் தள்ளினேன்
இம்மகா பாவத்தை எந்தையே மன்னிப்பீர்.

4 பாவத்தை நேசிக்க நான் இனிச் செல்வேனோ
தேவனின் பிள்ளையாய் ஜீவிப்பேன் நானிதோ.

5 கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் நேர்ந்தாலும்
குருசினின் காட்சியைத் தரிசித்துத் தேறுவேன்.

6 சத்ருக்கள் தூஷணம் பேசியே நிந்தித்தால்
நித்தமும் குருசினின் நேசத்தைச் சிந்திப்பேன்.

7 பாவத்தின் சோதனை கோரமாய் வந்திடில்
ஆவலாய்க் குருசினின் காட்சியைச் சிந்திப்பேன்.

8 சூறாவளியைப்போல் சூழ்ந்திடும் ஆபத்தில்
சிலுவையின் நேசத்தைச் சாதி நான் நோக்குவேன்.

9 சத்ருக்கள் கூட்டமாய்ச் சண்டைக்குச் சூழ்கையில்
சிலுவையில் காண்கின்ற நேசத்தைச் சிந்திப்பேன்.

10 இம்மகா நேசத்தை ஆத்மமே சிந்திப்பாய்
இம்மானுவேலே நீர் என்னையும் நேசித்தீர்.

---

10 நல்நேரமிதில் இரட்சிப்படைந்து கொள்.

சரணங்கள்

1 யேசுவண்டை சேரவும் நல் நேரமிதுவே
மோசமான பாவிகட்கும் நேசரவரே
மோசமணு காதுகாத்து மோட்சம் ஈவாரே
நேசரண்டை ஓடி வா.

பல்லவி

சுத்தம் சுத்தம் செய்யும் ரத்தத்தால்
சுத்த மாக்கி உன்னைச் சேர்த்துக் கொள்வாரே
மோட்ச லோகம் போகலாம்.

2 வாழ் நாளெல்லாம் வீணாகக் கழிந்து போகுதே
நாளை நாளை என்று நீ நரகம் போகாதே
ஏழையாயினு மவர் தள்ளி விடாரே
வேளையிதில் வந்து சேர் —சுத்தம்

3 வலது புறக் கள்வனுக்கு வரமொன் றளித்தார்
பாவியான ஸ்திரியின் பாவம் மன்னித்தார்
பாவ மன்னிப் பெங்கும் பிரசங்கியுமென்றார்
வா வா யேசுவண்டையில் —சுத்தம்

4 சிலுவை யண்டை சேர் நித்திய ஜீவனுண்டதில்
காலங்களும் வீணாகக் கழிந்து போகுமுன்
பாழுலகும் பஞ்சுபோற் பறந்து போகுமே
வாரும் யேசுவண்டையில் —சுத்தம்

11 இயேசுவின் பின்னாலே போவோம்

சரணங்கள்

1 இயேசுவின் பின்னாலே மண்ணாசைகளும் மாய்த்தூ
நேசமுடன்—போவோம்

பல்லவி

சோதி மய நாதனுடன்
நீதியுடன் நின்றிடலாம்—போவோம்

2 பரலோகம் விட்டுப் பாவிகள் மீதன் புற்றார்
நரர் பரம் செல்ல நல்வழி திறந்திட்டார்
பரா பரன். —சோதி

3 பாவங்களை நீக்கிப் பரிகரிக்க என்னை
பாவக் கோல மாக்கிப் பரனின் சுதன் தன்னை
மாய்த்தனரே —சோதி

4 பரிசுத்த ராகப் பாரிலும் ஒன்றாகூடி
பரலோகம் செல்லப் பரிசுத்தாவி தந்தார்
மா அன்புதான். —சோதி

5 பொய்யுலகம் வேண்டாம் யேசையன்னைக் கெல்லாம்
தூயலோகம் செல்வோம் யேசையனடி சென்றால்
ஐய மின்றி. —சோதி

6 மனம் மாறிடாதோர் மரண மடைவாரே
தினந்தோறும் தீயிற்றியங்கி அழுவாரே
திரும் புவீர். —சோதி

7 இருதய சுத்தம் இருந்திடில் நித்தம்
வரும் நாளில் யேசு நாம் வானிலொன்று கூடி
வாழ்ந் திடலாம். —சோதி

———

12 இயேசுவின் நாமத்தை உயர்த்துவோம்

சரணங்கள்

1 எழுந்திடுவீர் நீர் வாலிபரே நாமும்
ஏசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
இன்னும் கொஞ்சம் நேரம் ஏசு வரும் போது
நித்திரை செய்யாமல் விழித்திருப்போம்.

பல்லவி

எழுந்திடுவோம் நாம் எழுந்திடுவோம்,
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்.

2 விழித்திடுங்கள் நீர் சகோதரிகளே
விளக்குகள் எரிய எண்ணெய் ஊற்றுவீர்
மணவாளன் வரும் சத்தம் கேட்பதாலே
கன்னியர்கள் நாமும் எழுந்திடுவோம்

3 அப்பம் ஐந்து மீன்கள் இரண்டுமே யானாலும்
ஐயாயிரம் அருந்த அன்பர் பகிர்ந்தார்
கைப் பொருளை யளித்த அச்சிறுவன்போல
எப்பொருளும் இயேசுவுக்கீயும் பாலரே —எழுந்

4 நித்திரைகள் வேண்டாம் முதியோரே நீரும்
நேரம் வேளை தன்னை நிதானிப்பீரே
தீர்க்கர் முற்பிதாக்கள் செப்பியவுரைகள்
தினம் நிறை வேறக் கண்டதில்லையோ —எழுந்

5 சஞ்சலங்கள் வேண்டாம் தாய்மாரே நீரும்
தைலாபி ஷேகம் செய்ய வருவீர்
புதையல்கள் போன்ற புத்திரராம் பரணி
பொன்னேசர் பாதம் உடைத்திடுவீர் —எழுந்

6 போதகப் பிதாக்களே புதுப் பெலன் அடைவீர்
புறம்பான வேஷம் போய் ஒழியுமே
ஆதித் திருச் சபையின் அனல் வேண்டுமானால்
ஆத்திரமாய் உழைப்பீர் அன்பர் பெலத்தால் —எழுந்

7 இந்தியா தேசம் வெல்ல யாவரும் முயல்வோம்
இயேசு முன்னே செல்வார் இனி என் பயம்
என்ன தடை வரினும் இயேசு நாமம் ஜெயிக்கும்
இன்று முதல் யாவரும் எழுந்திடுவோம். —எழுந்

---

13 என்னைத்தேடின அன்பு (E. 38)

சரணங்கள்

1 காணமற்போன என்னை
நல் மேய்ப்பர் தேடினார்
தன் தோளின் மேலில் போட்டுக்
கொண்டன்பாய் ரட்சித்தார்
மேலோக தூதர் கூடினார்
ஆனந்தம் பொங்கிப் பாடினார்.

பல்லவி

நேசர் தேடி வந்தார்
ரத்தம் சிந்தி மீட்டார்
என்னைச் சொந்தமாகக் கொண்டனர்
பேரன்போடு சேர்த்துக் கொண்டனர்

2 என் பாவக் காயங் கட்டி
வீண் பயம் நீக்கினார்
என் சொந்தமாக உன்னைக்
கொண்டேனே பார் என்றார்
அவ்வின்ப சத்தங் கேட்கவே
என் உள்ளம் பூரிப்பாயிற்றே. —நேசர்

3 பேரன்பராகத் தோன்றி
ஐங்காயம் காட்டினார்
முட் கிரீடம் சூடினோராய்
என்னோடு பேசினார்
இப்பாவியினிமித்தமே
படாத பாடு பட்டாரே. —நேசர்

4 இப்போது இன்பமாக
என் மீட்பர் பாதத்தில்
ஒப்பற்ற திவ்ய அன்பைத்
தியானஞ் செய்கையில்
ஆனந்தம் பொங்கிப் பூரிப்பேன்
மென்மேலும் பாடிப் போற்றுவேன். —நேசர்

5 ஆட்கொண்ட நாதர் பின்பு
பிரசன்ன மாகுவார்
தம் ஞான மணவாட்டி
சேர்த்தென்றும் வாழ்விப்பார்
எம் மாசும் தீங்கும் நீங்கிப்போம்
பேரின்பம் பெற்று வாழுவோம். —நேசர்

---

14 இயேசுவே உம்மை நேசிக்கிறேன். (E. 2)

சரணங்கள்

1 என் யேசுவே உம்மையே நான் நேசிக்கிறேன்
வேறந்த வீண் வாழ்வையும் நாடாதிருப்பேன்
உம்மாலே மா நன்மையை நான் கண்டடைந்தேன்
என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

2 இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்
நீர் பிராணத் தியாகஞ் செய்து மீட்டுக்கொண்டீர்
முட்கிரீடம் ஐங்காயமும் தியானிக்கிறேன்
என் நாதா மென்மேலும் உம்மை நேசிககிறேன்.

3 பேரன்பின் சொரூபி உம்மைப் போற்றுகிறேன்
எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்
என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்
என் நாதா மென்மெலும் உம்மை நேசிக்கிறேன்.

4 பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங்கொள்வேன்
நீடூழி உம்முகங் கண்டு ஸ்தோத்திரிப்பேன்
எப்பாவ மில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

15 பெலன் தாரும், பின்பற்றுவேன்

சரணங்கள்

1 எப்போதும் யேசு நாதா
உம்மைப் பின் பற்றுவேன்
என்றே தீர்மான மாக
நான் வாக் களித்தேன்
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர்
அப்போது அஞ்சிடேன்
முன் சென்று பாதை காட்டும்
நான் வழி தவறேன்
பாதை காட்டும், பாதை காட்டும், பாதை காட்டும்
நான் தவறேன்.

2 பூலோக இன்பம் செல்வம்
வீண் ஆசா பாசத்தால்
என் ஆத்மா மயங்காமல்
தெய்வீக பலத்தால்
நீர் துணை நின்று தாங்கும்
என் அருள் நாயகா
தீங் கணுகாமல் காரும்
மாவல்ல இரட்சகா
நின்று தாங்கும், நின்று தாங்கும், நின்று தாங்கும்.
அருள் நாதா.

3 ஆங்காரம் சுய சித்தம்
தகாத சிந்தையால்
மா கலக்கம் உண்டாகி
நான் தடுமாறினல்
நீர் பேசும் அருள் நாதா
கொந்தளிப் படங்கும்
உம் நேச சப்தம் கேட்டு
என் ஆவி மகிழும்
நீர் பேசும், நீர் பேசும், நீர் பேசும
என் யேசுவே.

4 பின் பற்றினால் விண் வீட்டில்
பேரின்பம் பெறுவீர்
என்றுந்தன் சீஷர் நோக்கி
நீர் வாக்களித்தீர்
அவ்வருள் வாக்கை நம்பி
இவ்வேழை அடியேன்
முற்றுமாய் என்னைத் தத்தம்
இவ்வேளை அளிப்பேன்
வாக்கை நம்பி, வாக்கை நம்பி, வாக்கை நம்பிப்
பின் செல்லுவேன்.

5 ஓயாமல் பெலன் தாரும்
உம்மடிச் சுவட்டில்
கால் வைத்து நடந் தேகி
பின் பற்றுகையில்
நீர் வழி காட்டி என்னைக்
கை தாங்கி வருவீர்
அப்பாலே மோட்ச வீட்டில்
பேர் வாழ்வை அருள்வீர்
மோட்ச வீட்டில், மோட்ச வீட்டில், மோட்ச வீட்டில்
வாழ் வருள்வீர்.

---

16 பரிசுத்த அக்கினி.

பல்லவி

வரவேணும் பரனாவியே! இறங்கும் தணலாய்த் தாவியே.

அனுபல்லவி

மருளாம் பாவம் மருவிய என்னை
வானக்கினியால் ஞான ஸ்நானம் செய்ய —வர

சரணங்கள்

பலமான எப்பாவமும், பாழாக்கும் மா நோய்களும்
வலிய கொடும் ரோகமும், மாம்ச சிந்தையோடுமே,
பலிபீடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்;
எலியாவின் ஜெபத்துக்கு இறங்கிய வண்ணமே ---வர

2 எந்தன் பாவம் யாவையும் எரிக்கும் வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காண்கிலேன்,
எந்தன் செயலால் யாதொன்றும் முடியா
இன்றே வானுக்கினி வரவேணுமே ---வர

3 குடிகொள் எந்தப் பாவமும் அடியோடே தொலைத்திடும்,
தடுத்தாட்கொள்ளும் தோஷமும் சாம்பலாகச் செய்திடும்
படி மிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல் போல்
அடியேன் யேசுவுக்காய் ஓடி எங்கும் தொண்டு செய்ய---வர

4 புறம்பான எப்பாவமும், மறைவான எப்பாவமும்,
சிறிதான எப்பாவமும், பெரிதான எப்பாவமும்,
அறவே முற்றிலும் வரவேணும் ஆவியே,
அக்கினி மயமாய் அமர்ந்திடும் என்மேல் ----வர

---

17 பின்மாரி தாரும்.

சரணங்கள்

1 வந்து ஆளையா ஆவி தந்து ஆளையா
வந்து உதிரம் சிந்தி மீட்ட வல்ல யேசு நாதனே
வல்லமையாய் வாக்குத்தத்த
ஆவி ஊற்றிடும் நாதனே.

2 பெந்தெகொஸ்தே நாளில் உமதப்போஸ்தலர் மேல்
பலத்த காற்று முழக்கம்போல வல்லமையாய் வந்தோனே
பெல வீனர் யாவர்க்கும்
பெல னளித்திடும் வல்லோனே.

3 ஆதிச் சபையில் வல்ல ஆவி அளித்தோனே
அற்புதங்கள் அடையாளங்கள் யேசு நாமத்தில் வழங்கிட
உந்தனாவி காத்திருக்கும்
தாசர்கள் மேல் ஊற்றுமேன்.

4 இன்றும் உந்தன் வாக்கை நம்பி வந்தோரை
இன்றும் என்றும் மாறாதென்று வாக்குத்தத்த மீந்தோனே
இன்பமாய் ஆவி ஊற்றிடும்
காத்திருக்கும் அடியார் மேல்.

5 பின் மாரியின் ஆவி வேண்டச் சொன்னேனே
ஆவியின் மழை இல்லாததினால் ஆத்துமாக்கள் அலையுதே
பின் மாரியும் முன் மாரியும்
செழிப்பாய்ப் பெய்திட அருளுமேன்

18 துன்பத்தில் இயேசு

பல்லவி

இன்ப துன்ப நேரத்திலும்
உன் அன்புள்ள இயேசுவைப்பார்

சரணங்கள்

1 இன்பத்தினால் அக மகிழ்ந்து
கிலேசத்தினால் துக்கித்து
சிற்றின்பப் பேருலகில்
சிக்கிக் கொண்டிருக்கும் போதும் —இன்

2 சோதனையால் பிடிபட்டு
இடுக்கணில் இருக்கும் போதும்
சாத்தான் உன்னை மேற்கொள்ளும் போதும்
அக்கினி அஸ்திரம் எறியும்போதும் —இன்

3 தோழரால் பகைக்கப்பட்டு
மனக்கிலேசம் அடையும்போதும்
உலகம் உன்னை இகழ்ச்சி செய்து
தங்கள் இடத்தை விட்டோட்டும் போதும் —இன்

4 அவர் தாமே சோதிக்கப்பட்டு
பாடு நமக்காய்ப் பட்டதினால்
அவர் சோதிக்கப்படும் நமக்கு
உதவி செய்ய வல்லவராம் —இன்

5 வறுமையினால் யாசித்து
பாடு மிகப் படும் போதும்
சாத்தான் உன்னைப் பகடி பண்ணி
உன் விசுவாசத்தைக் குறைக்கும்போதும் —இன்

6 கடு நோயால் பெலன் குன்றி
பெல வீனத்தால் தள்ளாடி
ஜீவன் உனக்குச் கசப்பாகி
சாவை நீ விரும்பும் போதும் —இன்

7 பகைஞரால் கல் லெறி யுண்டு
மரண நேரம் கிட்டும் போதும்
பக்தன் ஸ்தேவானைப் போல
தைரியமாய் உன் யேசுவைப் பார் —இன்

8 நான் என் யேசுவின் தரிசனத்தை
நிமிஷந் தோறும் காண்கிறதால்
நான் தான் பயப்படா திருங்கள்
என்றவர் என்னைத் தேற்றுகிறார் —இன்

---

19 இயேசு எனக்குண்டு, கலங்கேன்

சரணங்கள்.

1 எந்தன் யேசு உன்னதத்தில் அன்புள்ளோனாய் வாழும்போது
ஏழையேன் கலங்கிறேன் இப்பூமியில்—அதால்
என்றும் அவர் கிருபை மட்டும் போதுமே

2 இன்னல்களாம் குன்றுதனிற் பின்னிடாமல் ஏறுதற்கு
இயேசு என்கால் தன்னை மான்கால் போலாக்கி—என்னை
இன்பமாய் என் பாதை யோடச் செய்குவார்

3 யாரும் துணையில்லையென்றோ ஏகனாய்நான் ஆனேன்என்றோ
என் மனதில் எண்ணிடேன் ஓர் நாளுமே—யேசு
என்னுடன் இல்லாமல் எங்கு போயினார் ?

4 என்னருமைத் தோழரன்றோ தெய்வதூதர் சங்கமெல்லாம்
இப்போதவர் என் பிதா முன் நிற்கிறார்—பின்னால்
என்னையும் தம் ஊழியத்தால் தேற்றுவார்

5 வியாகுலம் என்வீட்டைவிட்டுக்காட்டிலோடப்பண்ணிடினும்
அங்கேயொரு தூதன் என்னைச் சந்தித்து—சுடாம்
அப்பமும் ஜலமும் தந்து தேற்றுவான்

6 வரும்நாளுக்காக வீணாய் என் மனம்நொந்தென்ன புண்யம்
என்னைத்தினம் போஷிப்பவர் இல்லையோ—இன்னும்
ஏழை யான் அவரை யட்டும் நம்புவேன்

7 கவனிப்பாய் காகத்தை நீ விதைப்புண்டோ?அறுப்புண்டோ?
விலை யின்றிப் போற்றவில்லையோ நாதன்—லீலிப்
புஷ்பங்களில் வண்மையைத்தான் வைத்தார்?

8 பத்முதீவில் ஏகனாய் நான் தங்கிடினும் பயப்படேன்
வானம் திறந் தேசுநாதர் ஜோதியாய்—என்னைப்
பரதீசில் ஆவிக்குள் எடுப்பரே

9 ஹா! மஹேஸா கருணேஸா பொன்னுநாதா நீரெனக்காய்
வேண்டியதெல்லாம் தயவாய்த் தந்தால்—நான் என்
வாணாளெல்லாம் உம்மைப் போற்றிப்பாடுவேன்

---

20 விசுவாசப் போராட்டம்

பல்லவி.

கர்த்தன் சத்துவத்தில் நித்தம் வளரும்
யுத்தம செய்திடும் கிறிஸ்து வீரரே

அநுபல்லவி

மாய்சம் இரத்தம் மட்டுமல்ல
மண்ணின் பொல்லா ஆவிகளும்
வான லோக சேனைகளும்
வளைந்தும்மைச் சூழ்வதாலே

சரணங்கள்.

1 தீங்குநாளில் உன்னைத் தீயோன் எதிர்ப்பான்
பாங்காய் யாவையும் முடித்து நின்றிடும்
எந்தன் ஆயுதங்களெல்லாம்
ஒன்றுக்கும் உதவாதது
ஓங்கி அன்பர் தந்திடும் சர்
வாயுத வர்க்க மணிந்து —கர்த்

2 கச்சை ஒன் றரையிற் கட்டிட வேணும்
கர்த்தர் உரைப்படி நின்றிடவேணும்
மனதின் அரையைக் கட்டு
மங்களமாம் சத்தியத்தால்
தினம் அது உந்தனுக்குத்
தேவ பெல னுயிருக்கும்
—கர்த்

3 வாளால் உந்தன் நெஞ்சை வாட்ட வருவான்
வல்ல மார்க் கவசம் வாங்கித் தரிப்பாய்
அடியாரின் சுய நீதி
அத்தியிலே போற் கிழியும்
அன்பர் நீதியாடை யுடை
ஆத்திரமாய் அணிந்து நீ
—கர்த்

4 எப்போ உந்தனுக்கெதிரி வருவான்
இரவிலோ பகலிலோ என்பதறியாய்
தப்பித மெல்லாம் களைவாய்
சாமியேசின் சமாதானம்
ஒப்பில்லாத ஆயத்தமாம்
பாத ரட்சை ஆக்கிடுவாய்
—கர்த்

5 அம்புன் மேற் பறக்கும் அணிபணியாய்
ஆகாதோன் நினைவு அதிகரிக்க
வெள்ள மதில் வீழும் கொள்ளி
விக்கினம் தொல்லை தருமோ
விசுவாசப் பரிசையின்மேல்
வினை வந்து பற்றிடுமோ ?
—கர்த்

6 சத்துரு தாக்குவான் எப்போதும் தலைமேல்
தழல் மேனின்று வீழும் தாரகத்தோர் மேல்
காருண்ய மென்னும் தயவால்
கர்த்த னளித்த இரட்சிப்பை
கருத்துடன் அநுதினம்
தலைச் சீரா வாக்கிடுவாய்
—கர்த்

7 ஐந்தும் அணிந்திட்ட பின்னால் மட்டுமே
ஆறும் ஆயுதமாய் வாளை எடுப்பீர்
சந்ததம் வேதவசனம்
சரிவர ருசித்த பின்
புத்தியைத் தெளிவ தாக்கிப்
போர் புரியச் சென்றிடுவீர் —கர்த்

---

21 துக்கத்தில் ஆறுதல்

பல்லவி

ஆனந்தமே பரமானந்தமே—இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே.

சரணங்கள்

1 இந்தப் புவி ஒரு சொந்தமல்ல வென்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டும் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும் —ஆன

2 கர்த்தாவே நீர் எந்தன் காருண்யக் கோட்டையே
காரணமின்றிக் கலங்கேனே யான்
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே —ஆன

3 என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்க்
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெய கீதம் பாடி மகிழ்ந்திடலாம் —ஆன

4 கூடார வாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ
கை வேலையல்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ —ஆன

5 துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையைத்
துன்பத்தினூடே அனுப்பிடுவார் —ஆன

6 இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேன்
என் நேசர் தம் முக ஜோதி யதேயல்லால்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை —ஆன

---

22 கிறிஸ்து சபையே! துன்பத்தில் பாடு

சரணங்கள்

1 ஜெய கீதம் பாடிடுவோம்
மீட்பின் நாள் இதோ வருவதால்
துன்பத்தைச் சகிக்கும் சபை
இன்ப வீட்டில் சேர்க்க மணாளன் வாரார்

பல்லவி

ஆனந்தம் கொள் இயேசு சபையே
அதி வேகம் வாரார் மணவாளன்

2 அதிக துன்பம் அனுபவிப்பாய்
சீக்கிரம் உன் துன்பம் ஒழிந்திடுமே
சோர்ந்திடாய் அவர் சபையே
மேகமதில் அவர் உயர்த்திடுவார் —ஆனந்

3 அதிகக் கஷ்டம் உண்டுனக்கு
இருதய வேதனை உன் பங்கு
அன்புள்ள அவர் கரத்தால்
உன் கண்ணீர் யாவையும் அவர் துடைப்பார் - ஆனந்

4 நேச மீட்பர் அவர் வருவார்,
அந்நாளில் நம் முள்ளம் பொங்குமே,
அழகுள்ள அவர் முகத்தை
ஆனந்தக் களிப்புடன் தரிசிப் போம் —ஆனந்

5 வா என்று அவர் அழைப்பார்
அவருடன் செல்ல நீ ஆயத்தமா?
ஆவியும் மண வாட்டியும்
வாரும் வாரும் என்றழைப்பார். —ஆனந்

6 அல்லேலூயா அல்லேலூயா
திருத்துவ மூவரையும் வாழ்த்துவோமே
அல்லேலூயா அல்லேலூயா
சதா காலமும் பாடிடுவோம் —ஆனந்

---

23 இயேசு வரும் நாள்

கண்ணிகள்

இயேசு வரும் நாளதனில் என் உள்ளம் பொங்கிடுமே
எந்நேரம் வந்திடினும் இருப்பேன் நான் ஆயத்தம் —இயே

வருவாரே மன்னர் தாம் மகிமையுள்ள தூதரோடும்
வான மண்டலமசைய வானோர் எக்காளமுடன் —இயே

அன்பின் கயிறற்றுவிழ அலகை நெஞ்சம் துடிதுடிக்க
எம்பெருமான் இயேசுவுடன் ஏழையேன் சேர்ந்திடவே —இயே

தாதன் தன் வலப்புறத்தில் நாதன் யேசிருந்திடினும்
பாதம் சேராதோரை இடபுறமாய்ச் சேர்த்திடவே —இயே

ஜென்மதிரேக மதுவும் மண்ணுடன் மண்ணாகிடவே
ஆன்மச் சரீரமது அதனின்று தோன்றிடவே —இயே

ஜீவனைக் கண்டடைந்தோர் ஜெகமதில் மீந்திருந்து
தேவ சுதன் திரு வருளால் திரு உருவாய் மாறுவரே —இயே

மணவாளன் வருகையினில் மகிழ்ந்திடுவார் கன்னியரே
மனம்போலே நடப்பவரும் மகிழ்வாரோ அந்நாளில் —இயே

தம்பதிகள் மகிழ்வது போல் அன்பருடன் மகிழ்வேன் நான்
இன்பமதைச் சாற்றிடவே என் நாவுக் கேலாதே —இயே

---

24 நீ அங்கிருப்பாயா ?

கண்ணிகள்

1 பரிசுத்தர் கூட்டம் யேசுவைப் போற்றிப்
பாடி மகிழ்ந்தோடி அங்கே கூடிடப்
பரமானந்த கீதமங் கெழும்ப
நீ அங்கிருப்பாயோ ?—சொல் என் மனமே

2 ஆட்டுக்குட்டியும் அரசாட்சி செய்ய
அண்டினோர் எவரும் அவரைச் சேர
அன்பர் அன்றெல்லார் கண்ணீரும் துடைக்க
நீ அங்கிருப்பாயோ ?—சொல் என் மனமே

3 பேதுரு, பவுலும், யோவனும் அங்கே
பின்னும் மூற்பிதாக்கள் அப்போஸ்தலரும்
இரத்தச் சாட்சிகளும் திரளாய்க் கூட
நீ அங்கிருப்பாயோ ?—சொல் என் மனமே

4 ஜெகத்தில் சிலுவை சுமந்தோரெல்லாம்
திருமுடி யணிந் திலங்கிடவும்
தேவ சேயர்களாய் எல்லாரும் மாற
நீ அங்கிருப்பாயோ ?—சொல் என் மனமே

5 சோதனைகளை வென்றவர் எவரும்
துன்பம் தொல்லைகளைச் சகித்தவரும்
ஜோதி ரூபமாய்ச் சொர்லோகில் ஜொலிக்க
நீ அங்கிருப்பாயோ ?—சொல் என் மனமே

6 கன்னிகையைப்போல கர்த்தர் சபை அன்று
மன்னர் மணாளன் ஏசுவை மணந்து
பின்னும் சொல்லரிதாம் நிலை ருசிக்க
நீ அங்கிருப்பாயோ?—சொல் என் மனமே

25 நீ ஆயத்தமா?

பல்லவி

உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?
சீக்கிரமாய் வருவாரே—உன்

சரணங்கள்

1 பூவில் யேசு வரும்போது பொல்லாரோடிடுவார்
அந்த விதம் நீயிருந்தால் என்ன செய்திடுவாய்? —உன்

2 மேகங்களுடன் வருவேன் என்று சொன்னவர்
மேகந்தனில் வரும் நேரம் கிட்டிச் சேருதே —உன்

3 தேவ தூதரோடும் பெரும் எக்காளத்தோடும்
தம் பக்தரைச் சந்திக்கும் நேரம் கிட்டிச் சேருதே —உன்

4 அவபக்தர் அக்காலத்தில் அழுதிடுவார்
அவர் வரும்போது ரட்சிப்படைய மாட்டார் —உன்

5 பாவங்களில் ஜீவிப்பவர் பதுங்கிடுவார்
பரிசுத்த மாக்கப்பட்டோர் பறந்திடுவார் —உன்

6 இரக்கமுள்ள இந்நாளில் மனந்திரும்பு
இந்நிமிஷம் ஏற்றுக்கொள்ளு மன்னிப்புப்பெற —உன்

7 உனக்காய் மரித்தயேசு காத்து நிற்கிறார்
யேசு உன்னைப் பட்சமாக ஏற்றுக்கொள்ளுவார் —உன்

8 பரனை ஏற்றுக் கொள்ளாதோர் அந்த நாளிலே
பதுங்கி நித்தியமாகப் பரிதபிப்பார் —உன்

---

26 பரம கானான்

கண்ணிகள்

1 இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்.

2 பரம சுகங்களின் இனிய ரசம்
பரனேசுவோடு யான் பானம் செய்வேன்.

3 பாம பிதா வேந்தன் கண்ணி னின்று
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்.

4 சத்துரு சேனைகள் அங்கே யில்லை
இயேசுவின் புத்திரர் மாத்திரமே.

5 தேவாட்டுக் குட்டியின் திரு மனைவி
சிறப்புட னிலங்கிடும் தேச மது.

6 கேரூபின் சேராபீன்கள் பாடிடவே
மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே.

7 சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாத
சொர்க்கீக நாட்டுக் கோர் இணையில்லையே.

8 பரிசுத்த ஆவியின் பளிங்கு நதி
பளபளென் றொழுகிடும் தேசமது.

9 ஜீவ விருட்ச மங் காற்றருகில்
மாதந் தோறும் புதுக் கனி தருமே.

10 நவ ரத்ன நிர்மிதப் பட்டணத்தில்
இராப் பகல் சூரியன் இயேசு தாமே.

---

27 உன்னத வீடு.

கண்ணிகள்

1

உன்னத வீட்டை சீக்கிரம் சென்று அன்பரைச் சேர்ந்திடுவேன்
என்யேசு ரட்சகர் ஏழையின் வாஞ்சை யாவையும்தீர்த்துவிட்டார்.

2

தூதரின் மத்தியில் மகிழ்கொண்டாடிட தேவனைப்போற்றிடுவேன்
கமழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில் இன்பமாய் அயர்ந்திடு
[வேன்.

3

வானோர்கள் பலபலஊழியம்செய்ய ஏழையும் சேர்ந்துகொள்வேன்
என் யேசுவின் துதியை நாவினால் பாடி நேசரால் அகமகிழ்வேன்.

4

பளிங்கு நதியின் ஓரங்களில் நான் ஓடியுலாவிடுவேன்
பொன்வீதியில் நாளும் அன்பருடனே கவியுடன் அடியெடுப்பேன்

5

பேதுரு, யோவான், பவுலும் கூட அங்கே ஓய்ந்திருப்பார்
என் நேசரின் வீட்டில் மகா பெருமின்பம் ஆ—ஆ—ஆனந்தமே.

---

28 என்னசுகம்! இயேசுவின் சமுகம்.

பல்லவி

என்ன சுகம்! ஆஹா! என்ன சுகம்! என்
இரட்சகரின் சமுகம் பேரானந்தம்
பரமானந்தம் மோட்ச சுகானந்தம்
அதைப் பெற்று அனுபவித்தால் என்ன சுகம்!

சரணங்கள்

1 பொன்னகர் மேடையில் எந்நேரம் பாடலாம்
கின்னரம் தம்பூர்வீணை இன்னிசைக் கொட்டலாம்—என்ன

2 ஜீவ நதியில் குடித்துக் களிக்கலாம்
ஜீவ விருட்சக் கனியும் புசிக்கலாம் —என்ன

3 தங்கக் கிரீடம் தலையில் தரிக்கலாம்
இங்கிதக் காபரோடு சங்கீதம் பாடலாம் —என்ன

4 பக்தர்கள் கூட்டத்தில் பாடிக் களிக்கலாம்
பரம பிதாவின் பணிவிடை செய்யலாம் —என்ன

5 பட்டினி பசி தாகம் சாவு வாட்ட மில்லை
கேட்டின் மக்களோடு கூட்டி னுறவு மில்லை —என்ன

6 துன்பம் ஒழிந்துமே இன்ப மடையலாம்
தூயரின் சமுகத்தில் துதி கொண்டாடலாம் —என்ன

7 இயேசுவின் ரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள்
சிங்காசனத்தினின்று ஜெய கீதம் பாடலாம் —என்ன

---

29 அருணோதய தியானம்

கண்ணிகள்

1 அருணோதயம் எழுந்திடுவோம்
பரனேசுவை ஸ்துதிப்போம்
அருணோதயம் பரமானந்தம்
பரனோடுற வாடவும்

2 இதைப் போன்றொரு அருணோதயம்
எமைச் சந்திக்கும் மனமே
ஆ! என்னானந்தம் ஜோதி சூர்யனும்
எந்தன் நேசரெழும்பும் நாள்

3 நன்றி யாலுள்ளம் பூரித்திடுதே
அன்னையா மேசு காருண்யம்
ஒவ்வொன்றுயிதைத் தியானஞ் செய்யவும்
எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்

4 போன ராவினில் ஜீவித்தோர் பலர்
பூமி விட்டுமே போய் விட்டார்
என்றாலும் நமக் கிந்த நாளையும்
தந்த நேசரை ஸ்துதிப்போம்

5 நான் நிர்வாணியாய் வந்த வண்ணமே
நிர்வாணியாகப் போகின்றேன்
கூடச் செல்லவும் பூவி லொன்றுண்டோ
நாடிப் போமந்த நாட்டிற்கே

6 ஆ! என் நேசரின் அன்பை யெண்ணவும்
ஆனந்தம் பரமானந்தம்
ஆ! என் நேசரோர் நவ வான் புவி
தானஞ் செய்ததே ஆனந்தம்

7 பார் தன் நேசரின் மார்பில் சாய்ந் தேகும்
யாரிவள் கானகந் தனில்
எந்தன் நேசரின் கூடச் செல்கிறேன்
சொந்த ராஜ்யத்தில் சேரவும்

8 கொண்டல் மோதும் வறண்ட நாடிதில்
நண்பரே என்னை விடாதேயும்!
ஆசையோடு நான் வாரே னென் துக்கம்
பாசயா யங்கு தீர்த்திடும்

---

30 சீயோன் யாத்திரையில் பாடுவேன்

கண்ணிகள்

1 தேவாட்டின் திரு ரத்தத்தால்—நான் சுத்தமாகினேன்
அவரின் சுத்த ரத்தத்தால்—நான் ஜெயம் பாடுவேன்
மகிமை ரட்சகா துதி உமக்கென்றும்
சேற்றில் நின் றென்னை நீர் மீட்டெடுத்ததினால்
துதிப்பேன் உம்மை நான் ஆயுள் முழுவதும்
நன்றி யோடடி பணிந்து.

2. சந்தோஷித் தும்மைப் பாடுவேன் சீயோன் யாத்திரையில்
பந்தயப் பொருள் பெற்றிட நான் முந்தி ஏகிறேன்
கிடைக்கும் நிச்சயம் கிரீட மெனக்கு
சத்துருக்க ளதைக் கொண்டு போவதில்லை
கர்த்தன் கையில் நின்று அன்று நான் பெறுவேன்
தூதர் கூட்டத்தின் மத்தியில்.

3 என் பாக்கியம் நினைக்கையில் என் னுள்ளம் துள்ளுதே
பூலோக சுகம் தள்ளினேன் மெய்ப் பாக்கியம் கண்டு
நித்திய நகரில் சேர்ந்து நான் பாடுவேன்
ராஜன் முகங்கண்டு என்றும் சந்தோஷிப்பேன்
இரத்தத்தின் பலனாய் வாழுவேன் சொர்க்கத்தில்
கோடி கோடி யுகங்களாக

4 மனோகரமாம் சீயோனில்—நான் வேகம் சேருவேன்
கிலேசம் முற்றும் நீங்கிப்போம்—அவ்விடமேகவே
நித்திய சந்தோஷம் பெற்றிடுவே னங்கே
சத்துரு வந்ததைக் கொண்டு போவதில்லை
ஆனந்தம் கூடுமே கீதங்கள் பாடுவேன்
ராஜன் யேசுவின் சமுகம்.

---

31 இயேசுவுடன் இருளிலும் ஒளியிலும் (E. 3.)

சரணங்கள்

1 யேசுவே நானும் முடன்
வாழ்விலும் மா தாழ்விலும்
இருளிலும் ஒளியிலும்—ஏகுவேன்
பூவிலும் நீர் மாத்திரம்
வானில் வேறு இல்லையே
இனிமேல் நீரே துணை—என்றைக்கும்

பல்லவி

என்றைக்கும்—என்றைக்கும்
ஈசன் யேசுவோடு நிற்பேன் என்றும் என்றைக்கும்
போர் செய்வேன் ஜெபத்தினால்
பாடுவேன் சந்தோஷத்தில்
போற்றுவேன் என் கஷ்டத்தில்—என்றைக்கும் —என்

2 யேசு பூவில் வந்தாரே
தாழ்மையாய் நடந்தாரே
பாடு பட்டுயிர்த்தாரே—எனக்காய்
ஜெயம் பெற்றெழுந்தாரே
பிதாவின் பக்கம் நிற்கிறார்
பரிந்து பேசுகின்றாரே—எனக்காய் —என்

3 புண்ணியனே பூமியில்
புருஷைப் போலச் சாந்தமும்
சுத்தம் உண்மை தாழ்மையாய்—ஜீவித்து
அன்பிலே அமிழ்ந்து நான்
என்னைப் பலியாக்கியே
மண்ணில் பரன் யேசுபோல்—மாற்றிடும் —என்

4 இத்தரையின் ஓட்டம் பின்
நித்தியர் முகம் கண்டு
சுத்தரோடு அப்போது—போற்றுவேன்
வீணை விளையாடுவேன்.
வெண்மை வஸ்திரத்துடன்
மன்னர் இயேசுவோடு—அரசாளுவேன்

32 ஆசை வேறில்லை

கண்ணிகள்.

1 இயேசுவின் முகம் என்று கண்டு கொண்டாடுவேன்
ஆசை யதேயல்லால் வேறெனக்கில்லையே —இயேசு

2 நீரெனை நேசித்த நேசம் நினைக்கையில்
இதற் கிணையாக நான் என்ன செய்திடலாம்? —இயேசு

3 பரம பிதா வண்டை பரத்தி லுட்கார்ந்திட
பாரில் கழிப்பதின் நாட்களதிகமோ? —இயேசு

4 என்கிரீடம் வேறு யாரும் எடுக்காமல்
உம் சித்தம் போலென்னை ஓடச் செய்திடுமே —இயேசு

5 நல்ல போர் செய் தெந்தன் வேலை முடித்திட
வல்லவனே தினம் சக்தி நீர் நல்கிடும் —இயேசு

6 இவ்வன லோகத்தில் நீரெனக் காறுதல்
தந்தையும் தாயாரும் நீர்தானென் தெய்வமே —இயேசு

7 கண் மணியே எந்தன் கண்ணீர்களெல்லாம் நீர்
பொற் கரத்தால் முகம் தொட்டுத் துடைப்பீரே —இயேசு

---

33 கிறிஸ்தவ பரமானந்தம்

கண்ணிகள்.

1 ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே—அதி
சந்தோஷமே இது சந்தோஷமே
தந்தை தமையோரும் சொந்த மானோர்களும்
தந்திடாத பரமானந்தமே —ஆனந்

2 எப்போதும் சந்தோஷம் சந்தோஷமே—இது
ஒப்பில்லாத பரமானந்தமே
அந்நியர்களையும் ஏகமானோரையும்
ஒன்றாகச் சேர்க்கின்ற தானந்தமே —ஆனந்

3 கிறிஸ்துவின் ரத்தத்தால் மீட்டெடுத்த—மக்கள்
ஆனந்தங் கொண்டிங்கு பாடுகிறார்
இப் பூவி லுள்ளதை ஒப்பிடி லொவ்வாத
ஆனந்தங் கொண்டவர் பாடுகிறார் —ஆனந்

4 இப் பூவி லானந்தம் இவ்வித முண்டெனில்
சொர்க்கத்தின் ஆனந்தம் சொல்லலாமோ
என் ஆத்துமாவே நீ காண்பாயே வேகத்தில்
ஆனந்தக் கூட்டத்தை மோட்சத்திலே —ஆனந்

5 மண்ணான சரீரம் மாறிடும் நேரத்தில்
விண் சரீரம் நமக் கீந்திடுவார்
சற்று நேர மின்னும் தாமதித் திடுகில்
பொன் நேசரை முத்தம் செய்திடலாம் —ஆனந்

6 இப்போது காணாமல் நேசிப்ப தென்றாலும்
சீக்கிரம் சென்று நீ கண்டிடுவாய்
அப்போ தென் நேசரின் காயங்களும் கண்டு
ஒவ்வொன்றாய் முத்தங்கள் செய்திடலாம் —ஆனந்

---

34 இன்ப நாடு

சரணங்கள்

1 சுத்தர் துதிக்கும் வீடே தெய்வமக்களின் ஆறுதலே
ஒளிமினுங்கும் பொற் தள வீதியினில்
அகமகிழ் வோடென்று நான் சேர்ந்திடுவேன்?

பல்லவி

வானவரின் துதிகளெல்லாம் தொனித்திடுமச்சாலேமில்
நானென்று சேர்ந்திடுவேன்?—பரிசுத்தரை
என்று நான் சேர்ந்திடுவேன்?

2 முத்துக்கள் முற்றுமுள்ள வாசல்கள் பன்னிரண்டங்கே [யுண்டு
கர்த்தரின் மகிமை கண்டானந்திக்க
கண்களெல்லாம் எப்போ வென் றுசிக்குதே —வான

3 இருளில்லா இன்ப நாடே தெய்வ அருளுள்ள நல்லவீடே
ஒளி கொடுப்பார் தேவாட்டுக் குட்டி யங்கே
அளவின்றிப் பாடித் துதித்திடுவேன் —வான

4 கஷ்டங்களில்லா நாடே தெய்வ பக்தரின் ஆறுதலே
புகழ் பெருகும் புதிய எருசலேமே
திரு மார்பில் என்று நான் சார்ந்திடுவேன் —வான

5 களங்கமில்லாத் தெளிந்த சுத்த ஜீவ ஜல நதியின்
கரைகளதில் ஜீவ விருட்சக்கனி
பிறைபையுள்ள தெய்வத்தின் தோட்டமது —வான

6 சுத்தர் சிங்காசனத்தை சுற்றிவரச் சுரமண்டலக்காரரே
நதிபோன்ற ஆசை யுண்டாகு தென்னில்
தூதரோடு சேர்ந்தங்கு பாடிடவே. —வான

---

35 ஜீவ பாதையில் நான் போகிறேன்.

1 ஜீவ பாதையில் வீசும் பிரகாசத்தில்
தீவிரம் நடப்பதே எனதாத்திரம்
பாவ உலகத்துடன் நான் சேர்ந்திடேன்
தேவாட்டுக்குட்டி பின்னே போகத்துணிந்தேன்.

பல்லவி

நான் போகிறேன் நான் போகிறேன்
இன்னலெனும் குன்று கண்டு நான் அஞ்சிடேன்
நிந்தை பாடும் சில தேவ மைந்தர்களுடன்
நான் போகிறேன்—யேசுவே நான் போகிறேன்

2 ஓட்டம் தொடங்கின பேர் அதிகம்
மீட்பவருடன் போனார் மெத்த மெதுவாய்
கூட்டம் புதிதென்று சிலர் கூடினார்
நாட்கள் போனதால் பலர் வாட்ட மடைந்தார் —நான்

3 கெட்ட உலகத்தின் கட்டுகளில் நான்
பட்டுப் பரம பாதை விட்டு விலகேன்
கற்களே என் தலையின் அணையாக்கினும்
வெட்க மடையேன் மீட்பர் பின் செல்லுவேன் —நான்

4 நித்திய சந்தோஷங்களின் ராஜ்யம்
நிச்சயம் சேரில் கஷ்ட பாதை நடப்பீர்
அட்சய னழைத்த சிறு மந்தையைச் சேர்ந்து
இரட்சகருடன் போவோம் முற்றுமுடிய —நான்

---

36 எக்காலத்திலும் கர்த்தரை நம்புவேன்

பல்லவி.

இயேசுவே யென் நம்பிக்கை—ஏகிடுவாரென் பக்கம்
நாசமணுகாமலே......நேசமாய் நடத்துவார்

அனுபல்லவி

காசினிமீதெனக்கு—ஆசை வேறு இல்லையே —இயேசுவே

சரணங்கள்

1 கடைசி பரியந்தமும்—கூடயிருப்பேனென்றார்
அதை நான் நம்புவேன்—இடை விடாமலே
பதைக்காமல் நிற்பேன்... ... ...இயேசுவே

2 எந்த வின்பம் விரும்பி—துன்ப துயருற்றாரே
சொந்த ரத்தத்தை—சொரிந்து எந்தனை
தம் சொந்த மாக்கினார்... ... ...இயேசுவே

3 கஷ்டம் என்மேல் வீழ்ந்தாலும் துஷ்ட ரெதிர் நின்றாலும்
நஷ்டமடையேன்—என் ரட்சகனென்னை
கட்டி யணைப்பார்... ... ...இயேசுவே

4 தேகம் மெத்த வருந்தி—சாகும் வேளை வந்தாலும்
ஜெகத்தி னுதவி—இகழ்ச்சி வந்தாலும்
சோர்ந்திட மாட்டேன்... ... ...இயேசுவே

5 வேதனைகள் வந்தாலும்—சோதனைகள் சூழ்ந்தாலும்
காதலன் யேசு—பாதுகாத்தென்னை
ஆதரிப்பாரே... ... ...இயேசுவே

6 துன்பம்துயர் வந்தாலும்—நண்பர் வழிநடப்பேன்
அன்ப ரெந்தனை—இன்ப வீட்டில்
கொண்டு சேர்ப்பாரே... ... ...இயேசுவே

37 என்னை இரட்சிக்க இயேசு மரித்தார்

சரணங்கள்

1 நான் செய்த பாதகம் எப்படிப்போம்?—பாவ
நாசகர் எவ்விட முண்டு?
மா யேசு இரட்சகர் பாவிகட்காய்க்—குருசில்
பிராணனை விட்ட துண்டு

பல்லவி

கொடும் பாவி என்னை இரட்சிக்க இரட்சிக்க (2 தரம்)
திருச் சிரசில் அவர் முள்முடி தரித்தார்
கொடும் பாவி என்னை இரட்சிக்க.

2 உலகத்தின் பாவிகள் மோட்சம் சேர—அவர்
கண்ணின் நீர் விட்டாரல்லோ?
தாகமுள்ளவர்கள் ஜீவ ஆற்றில்—தாகம்
தீர்ப்பதற்காய் வரட்டும். கொடும்

3 பாவியா மென்னுடைய பாவ மேற்று
மனஸ்தாப மோடே வந்த போது
கல் லுள்ளம் நீக்கித் தம் ஆவியினால்
என் உள்ளம் திருப் பாதை சேர்த்தார். கொடும்

4 எந்தப் பாவிகட்கும் இரட்சகர் தான்
அவர் சத்திய கர்த்த னல்லோ?
பாவத்தை வெறுத்து கர்த்தரில் நீ—நம்பு
மோட்சத்தில் சேர்ப்பார் உன்னை. கொடும்

5 இந்தப் பாக்கியம் தந்த யேசுவுக்குப்—பதில்
நான் என்ன கொடுக்க வேண்டும்?
என் பூர்ண கத்தியோ டவர் நாமத்தை
என்றும் வாழ்த்திப் புகழ்ந்திடுவேன். கொடும்

---

38 கிருபை வேண்டும்

பல்லவி

கிருபை வேண்டும் நாதா இயேசுவே உம் திவ்ய
கிருபை வேண்டும் நாதா-இவ் வாராதனேயில்

சரணங்கள்

1 உம் கிருபை தான் வேண்டும் சொர்லோக இராஜாவே
உம் கிருபை யல்லாது எங்களால் ஆகாது —கிருபை

2 ஏழு பிசாசுகள் ஓட்டியே இயேசுவே
மரியாளை நேசித்து அன்பால் நிரப்பிய —கிருபை

3 இருவராம் சீஷரின் சஞ்சலங்கள் நீக்கி
இருதயம் குளிர்ந்திட இனிமையாய்ப் பேசின —கிருபை

4 பாவத்தை இனிமேல் செய்யாதே என்றுமே
பாவியாம் ஸ்திரீக்கு நேசமாய்க் கூறின —கிருபை

5 பெந்தெகொஸ்தின் நாளில் அன்பராம் சீஷர்மேல்
உந்தன் வரங்களை மாரிபோல் பொழிந்த —கிருபை

6 தாசனும் ஸ்தேவானின் சாயலை மாற்றின
நேசமாம் கிருபையை எம்மேலும் ஊற்றிடும் —கிருபை

7 வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்த நேசா
தருகிறேன் என்னையே ஆசீர்வதித்திட —கிருபை

8 அடியாராம் ஏழைகள் உம்மைச் சந்தித்திட
முடிவு வரைக்குமே காத்திடும் கிருபையால் —கிருபை

---

39 எந்நாளும் இயேசுவை துதிப்பேன்

பல்லவி

எந்நாளுமே துதிப்பேன்—என் நேசரேசுவை.

அநுபல்லவி

காலையும் மாலையும் மற்றெல்லா வேளையும்
கையையும் நெஞ்சையும் மேலே யுயர்த்தி நான் —எந்

சரணங்கள்

1 பாவங்கள் நீக்கிவிட்டார் தம் இரத்தத்தைச் சிந்தி
காணமற் போயினேன் கண்டு பிடித்தனர்
தூக்கிச் சுமந்து தம் மந்தையிற் சேர்த்தனர் —எந்

2 அன்பின் சொரூபி அவர்—அவ்வன்பைக் காட்டினார்
மாட்டுத் தொழு முதல் தூக்குமரம் வரை
ஈனக் கோலம் பூண்டு நிந்தையும் சகித்தார் —எந்

3 சாவின் நிழலதிலும்—பிசாசினால் வரும்
நானே உன் பரிகாரி விலக்குவேன் வியாதியை
நோக்கிப் பார் என்னை நீ இரட்சிப்பேன் என்பதால் —எந்

4 அளிக்கிறார் நன்மையெல்லாம்—ஒவ்வொரு நாளிலும்
ஊணும் உடையையும் வேண்டும் பொருளெல்லாம்
குறைவின்றி நிறைவாகத் தந்திடுவதால் நான் —எந்

5 பரிசுத்த ஜீவியத்தை—இப் பார்தலத்திலே
தேவ பயத்தோடு ஊக்கமாய்ச் செய்யவே
ஆவியின் ஈவையும் எனக் களித்ததால் —எந்

6 வந்திடுவாரே அவர்—வெகு சீக்கிரமாக
காண்பேன் அவரை நான் சேர்வேன் அவரிடம்
அல்லேலூயா பாடிப் பாடிப் போற்றியே —எந்

7 வாழுவேன் என்றைக்குமே—என் நேசர் பக்கத்தில்
புதிய எருசலேம் என் சுய தேசமாம்
வானவருடன் நான் ஆனந்தங் கொள்ளுவேன் —எந்

---

40 சபையோரே துதிப்போம்

பல்லவி

துதிப்போம் துதிப்போம் சபையோரே—இந்த
இரட்சிப்பை (கன்வென்ஷன்) தந்த இயேசுவையே.

அநுபல்லவி

நம் வாழ்நாளில் இதுவே கொண்டாட்டம்—பூவில்
எங்கும் கிடையாப் பெரும் பாக்யம்—பாடி —துதி

1 சுத்தப் பரிசுத்தரவரே—எங்கும்
சுத்தமாய் நிற்கும் மெய்ப் பொருளே
தூயதாம் தூதர் பாடிப் போற்ற—அவர்
துதிக்குள்ளே வாசஞ் செய்வதாலே—பாடி —துதி

2 புற ஜாதியாகவே ஜீவித்தோம்—முன்பு
முறை யீனமாகக் கெட்டுப் போனோம்
திறமாக ஏசு வந்துதித்து—தம்
திரு இரத்தம் சிந்தி உயிர் தந்தார்—பாடி —துதி

3 எரிகோவின் கோட்டை விழுந்ததே—இந்த
துதி யாகும் ஆயுத மதிலால்
ஆ ஹா! போற்றிக் களித்துத் துதிப்போமே—தீய
சாத்தானின் கோட்டைகள் விழவே—பாடி —துதி

4 ஆறு இருப தாசாரியர்—துதி
செய்தார் சாலோமோன் ஆலயத்தில்
தேவன் மகிமையாய் வந்திறங்கினாரோ—இன்றும்
மகிமையாய் மத்தியில் வரவே—பாடி —துதி

5 இரண்டாம் வருகையும் சமீபம்—பல
ஆண்டாக எச்சரித்தும் வாரார்
ஆண்டாம் இதிலே ஏசு வந்தால்—நாம்
ஆயத்தமாக இருக்கவே—பாடி —துதி

41 ஆத்தும நேசரின் அன்பு

பல்லவி

ஆனந்தங் கொண் டுள்ளந் தான் பொங்குதே—எந்தன்
ஆத்தும நேசரவர் அன்பினால்

சரணங்கள்

1 பாவங்களில் போன என்னை மேவித் தேடினா ரன்றோ
சாபங்களில் நின்று என்னைத் தூக்கி விடுத்தா ரன்றோ
பாவியில் பெரும் படு பாவியாகுமென்
பாவ தேவ கோபம் யாவும் போக்கியே கை தூக்கியதால்
—ஆனந்த

2 கிறிஸ்துவையும் சேராமலே தூரமே நின்றே னன்றோ
இஸ்ரவேலின் காணியாட்சி தூரமாய் நின்றதன்றோ
வாக்குத் தத்தங்கள் யாவும் போக்கியே நின்றேன்
காணியாட்சி வாக்குத்தத்தம் கிறிஸ்துவுக்குள் எனதாட்சி
—ஆனந்

3 இயேசுவுடன் சுதந்தரமே எந்தன் பங்கு மானதே
இயேசுவின் சரீரத்திலோர் அவயவ மானதால்
தேவ இரகசியம், ஓகோ பெரிய பொக்கிஷம்
தலைமுறை தலைமுறை மறைந்திருந்தும் வெளியானதால்
—ஆனந்

4 காலங்களும் செல்லச் செல்ல இயேசுவும் சமீபமே
மேலானதை நாடி நாடி உள்ளமும் கதறுதே
இயேசுவே வாரும் என்னைப் பாசமாய்ச் சேரும்
ஆசையோடு நேசரையே பார்த்துப் பார்த்து வாஞ்சிக்கிறேன்
—ஆனந்

5 மேகமதில் இயேசு வெகு வேகமாக வருகிறார்
கூட்டுங்கள் என்னிடமாக எந்தன் சுத்தரை என்பார்
மண்ணின் சாயல் போய் மெய் விண்ணின் சாயலாம்
விண் சரீரம் சொந்தமாக்கி விண்டலம் பறந்து போவேன்
—ஆனந்

6 அப்போஸ்தலன் செப்பிய இரகசியமும் இதுவே
எவ்வுலகும் காணக்கிட்டா மேலான இரகசியம்
ஓர் நிமிஷமாம் ஓர் இமைப் பொழுதுமே
எக்காளம் முழங்கிடவே ஜீவன் சாவை விழுங்கிடுமே—ஆனந்

7 ஜெயத்துடனுபத்தமாக மேலே நோக்கிப் பார்த்துமே
ஜெயங்கொண்ட நல் ஜீவியத்தை ஜோதியாகச் செய்துமே
ஜொலித்துமே நிற்கும் தம் மணவாட்டி சபை
ஜோதியாம் சபையாகத் தமக்கு முன் நிறுத்துவாரே—ஆனந்

---

42 காலைத்தியானம்

பல்லவி

வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி வாழ்த்துகிறேன் இக்காலையிலே.

அனுபல்லவி

அற்புதமாய் இராமுழுதும் அடியேனைக் காத்தீரே—வாழ்

சரணங்கள்

1 உமது செட்டை நிழலதிலே படுத்திருந்தேன் இராமுழுதுப்
உமது கரம் அணைத்திடவே ஆறுதலாம் நித்திரையும்—வாழ்

2 நித்திரையை இன்பமாக்கி பத்திரமாய் இருதயத்தை
சுத்தமான இரத்தத்திற்குள் சுத்தமாக வைத்திருந்தீர்—வாழ்

3 பலவிதமாம் சோதனைகள் எமைச்சூழ வந்திருந்தும்
ஒன்றும் எமை அணுகாமல் அன்புடனே பாதுகாத்தீர்-வாழ்

4 சந்திப்பீரே இக்காலதனில் தந்திடவே திருவரங்கள்
சந்தோஷமாய் பகல் முழுதும் ஆவிக்குள் யான்பிழைக்க-வாழ்

5 தந்திடுவீர் அபிஷேகம் புதிதாக இப்புது நாளில்
நடத்திடுவீர் ஆவியினால் உமது திருச்சித்தமதில் —வாழ்

6 பாவமொன்றும் அணுகிடாமல் பரிசுத்தமாய்ப் பாதை செல்ல
தேவையான சர்வாயுதங்கள் தாரும் ஜெப ஆவியுடன்—வாழ்

7 படைக்கிறேன் என் இருதயத்தை பலிபீடத்தில் முற்றுமாக
கண்களுடன் செவியோடு வாயும் கை காலுமாக —வாழ்

8 செய்வேன் யான் எப்போதும் உம்சித்தமே ஆசையுடன்
ஒழித்திடுவேன் வீண்வார்த்தை பேசிடுவேன் உம்வாக்கை
—வாழ்

9 எனைக்காண்போர் உமைக்காண உம் சாயல் எனில்வேண்டும்
தந்திடுவீர் தாழ்மையையும் பொறுமையுடன் அன்புமாக-வாழ்

10 நேசரே உம் திரு வருகை இந்நாளில் இருந்திடினும்
ஆசையுடன் சந்திக்கவே ஆயத்தமாய் வைத்துக்கொள்ளும்
—வாழ்

---

43 பாவியே! இன்றைக்காகிலும் வா

பல்லவி

கிருபைக்காலம் ஓடியே போகுது நரரே
கிருபை பெற்றிட ஓடியே வாரும் நீர் விரைவாய்

சரணங்கள்

1 பகல் சென்று போயிற்று இரவு வந்து கிட்டிற்று
சொந்தமாக இயேசுவை சந்தோஷமாய்ச் சேர்ந்திட.--கிருபை

2 லோக நேசம் வெறுத்து பாவ ஆசை அறுத்துப்
பாவ மன்னிப் படைந்து ஜீவ வழி சேர்ந்திட. —கிருபை

3 சொந்தக் கிரியை முன்னே அந்தகாரம் பின்னே
அந்த வழி செல்வாயோ உன் அந்தம் அக்னிக்கடலில். கிரு

4 நாளை உன் நாளாகுமோ மரிக்கும் வேளை தெரியுமோ
நாதர் இயேசு வேகம் வாரார், வேளை தெரியாதாகையால்.

5 அந்திக் கிறிஸ்து வந்திட மானிடரைச் சேர்த்திட
தேவ சிநேகம் குறைந்து போம் பாவம் ஏராளமாம். —கிருபை

6 கபட பக்தி தள்ளியே கபட்டு வாய் அடைத்துமே
ஆக்கினை அடையுமுன் தண்டனைக்குத் தப்பவே. —கிருபை

7 எந்தத் தூது கேட்டுமே மாறிடாத மானிடர்
ஏழை என்னை இரட்சியும் என்று கெஞ்சிக் கேட்கவே. -கிரு

8 நோவு துன்பம் மரணமோ வேறு எந்தக் கஷ்டமோ
நெருங்கி உன்னைச் சேருமுன் இயேசுவண்டை ஓடிவா. -கிரு

9 கர்த்தர் உன்னைத் தள்ளுமுன் நரகத்தை நீ சேருமுன்
தேவ கிருபை பெற்றிட யேசுவின் பாதம் சேர. —கிருபை

10 ஆதி அன்பு குளிர்ந்து அலைந்தலைந்து ஜீவிக்கும்
மானிடரைப் பாராமல் இயேசுவை நீ பார்த்துவா. —கிருபை

---

44 தேவ கோபம் வருமுன் இரட்சிப்படைந்து கொள்

சரணங்கள்

1 பாவத்தின் பலன் நரகம் நரகம்
ஓ பாவி நடுங்கிடாயோ
கண் காண்பதெல்லாம் அழியும்
காணாததல்லோ நித்தியம்.

பல்லவி

இயேசு ராஜன் வருவார்
இன்னும் கொஞ்சங் காலந்தான்
மோட்ச லோகம் சேர்ந்திடுவோம்.

2 உலக இன்பம் நம்பாதே நம்பாதே
அதின் இச்சை யாவும் அழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே
ஓர் காசும் கூட வராதே. இயேசு

3 உன் காலம் எல்லாம் போகுதே போகுதே
உலக மாய்கையிலே
ஓ தேவ கோபம் வருமுன்
உன் மீட்ப ரண்டை வாராயோ? இயேசு

4 தேவன்பின் வெள்ளம் ஓடுதே ஓடுதே
கல்வாரி மலைதனிலே
உன் பாவம் நீங்கிப் போகுமே
அதில் ஸ்நானம் செய்வதாலே. இயேசு

5 மாபாவியான என்னையும் என்னையும்
என் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா
தேவாசீர்வாதம் பெறுவாய். இயேசு

---

45 உம் சித்தம் செய்வேன்

கண்ணிகள்

1 ஆண்டவனே உமது எண்ணம்
போலச் செய்வ தடியேன் திண்ணம்
ஆதரை மீதில் நின் பாதாரம்
தானே எனக்குமே ஆதாரம்.

2 சொன்னபடியே செய்வேன் நாதா
என் அன்பு நிறைந்த திரு பொற்பாதா
மன்னவா என்ன வந்தாலுமே
மாறேன் ஆணை ஒருக்காலுமே.

3 கூறும் அடியேன் நான் கேட்டிட
பாரி லும்மைத் தினம் போற்றிட
வாரி புவியாவும் படைத்தோனே
வாருதியே எம் கிருபா நிதியே.

4 வாரும் இரண்டாவது முறையே
தருவாய் அருள்மாரி இறையே
கிருபை அன்பு நிறைந்த துரையே
அறச் செய்யும் எமது குறையே.

---

46 கல்வாரி தியானம்

கிண்ணிகள்

1 கல்வாரி மலையில்—எந்தன் பாவங்களைப் போக்க
தாவி உயிர் விடுத்த—கல்வாரி மலையில்
பாவி நானுந்தன் பாதம் குனிந்து
பரிவுடனே இப்போ தாவிப் பணிந்து —கல்வாரி

2 தேடி வந்த மேய்ப்பா திருப்பாதம் குனிந்து வரும்
அலைந்து போன ஆட்டைத்—தேடிவந்த மேய்ப்பா
ஆடுகளுக் குந்தன் உயிர்தனைக் கொடுத்து
நானே நல்ல மேய்ப்பன் என்று உரைத்து —கல்வாரி

3 பாரச் சிலுவை எடுத்து—எந்தன் பாவங்களைத் தொலைக்க
மேவி உயிர் விடுத்து—பாரச் சிலுவை எடுத்து
கோரமாகவே காயங்கள் பட்டு
குருசினிலே நீர்முள் முடி தரித்து —கல்வாரி

4 எத்தனையோ துன்பம்—இந்த ஏழைகளை மீட்க
அத்தனையும் சகித்து—எத்தனையோ துன்பம்
பக்தி நெறியில் என்னை நடத்திட வேதா
பாடுகளை நீர் சகித்த மெய்த்தேவா —கல்வாரி

5 குத்திடச் சேவகனும்—நாதா உந்தன் விலாவிலே
குருதியும் வடிய—குத்திடச் சேவகனும்
வடிந்த உன் உதிரத்தின் வல்லமை தந்த
புண்ணியனே உம்மைப் போற்றியே வந்தேன் —கல்வாரி

6 தோத்திரம் மெய்த்தேவா—என்னைப் பாத்திரமாக மீட்ட
தாவீதின் கோத்திரனே—தோத்திரம் மெய்த் தேவா
குருசினில் தொங்கி நீர் குருதியும் விட்டீர்
பாரினிலே என்னைப் பரிவுடன் வைத்தீர் —கல்வாரி

---

47 கர்த்தாவே எழுந்தருளும்

கண்ணிகள்

1 மகிமையுள்ள பரமஇராஜா மகிமையோடின்று—உந்தன்
மகத்வமுள்ள ஆலயத்தில் எழுந்தருளுமேன்.

2 கறை திரைகள் குறைகள் ஒன்றும் எம்மில் இல்லாதே-நாதா
சபையை முற்றும் சுத்திகரித் தாசீர்வதிப்பீர்.

3 புதிய தூது சபையில் இன்று வெளிப்படுத்துமே—உந்தன்
புதிய சக்தி பேசும் தாசர்க்களித்தருளுமே.

4 ஆதிச்சபையில் நடந்த அற்புதங்களே—இன்று
இச்சபையிலே நடக்க அருள்புரியுமே.

5. சபை கூடும்போதுள்ள வல்ல கிருபை வரங்களே—இன்றே
சபையிலுள்ள தாசர் மேலே ஈந்திடுவீரே.

6 அற்புதங்கள் அடையாளங்கள் ரோக சௌக்கியங்கள்—
பிரத்தியட்சமாய் கண்டிட வாஞ்சிக்கிறோம் நாம். [சபையில்

7 சுத்தர் கூட்டம் சபையிற் கூடி ஐக்கியமாகவே—பரி
சுத்தரோடு ஒன்றாய்க்கூட வாஞ்சிக்கிறோம் நாம்

8 ஸ்தோத்திர சத்தம் சபையிலுள்ளோர் ஆர்ப்பரிக்கவே-தேவா
ஸ்தோத்திரம் செய்யப் பாத்திரராகப் பாதம் வீழ்கிறோம்.

---

48 கிறிஸ்துவின் அன்பு வேண்டும்

கண்ணிகள்

1 ஈயுமையா உம்மேலான அன்பெனக்கு—ஈயுமையா
உள்ள முருகுதே ஆவி தியங்குதே
தேவா நீர் பாராட்டும் மேலான அன்பாலே —ஈயு

2 வாரேனையா கல்வாரியின் அன்பைக்கண்டு—வாரேனையா
ஐயா அறிந்திலேன் வழியும் தெரிந்திலேன்
தேவா நானேழை உம் பாதம் பின்வாரேன் நான் —ஈ

3 வைக்க வையா என் ஜீவனை பலியாக—வைக்கவையா
உலக மழியுதே அன்பு குறையுதே
தேவா உமக்காய் ஜனத்தை நான் காணேனே —ஈயு

4 தாரேனையா என் ஆவியாத்துமா சரீரம்—தாரேனையா
ஐயா நீரேற்றிடும் துய்யா கண்ணோக்கிடும்
பரனே உம்மன்பை இப்பேதைக்கு ஈந்திடும் —ஈயு

5 போகிறாரையா நரக பாதையில் ஜனம்—போகிறாரையா
பாவம் பெருகுதே உலக முயருதே
தேவா உம்மன்பை நரருக்குக் கூறவே —ஈயு

6 இல்லை யென்றீர் உம்மன்புக்குத் தீமையொன்றும் இல்லை
சகலமும் தாங்குமே சகலமும் சகிக்குமே [யென்றீர்
தேவா உம்மன்பை என் உள்ளம் கவருதே —ஈயு

---

49 நியாயத்தீர்ப்பு

பல்லவி

வையகத்தை நடுத்தீர்ப்புச் செய்யவே
வல்லவர் வருகிறார் பக்தர்களோடு.

அனுபல்லவி

வான தூதரோடு அக்கினி மயமாய்
வான மண்டலங்களும் கிடு கிடென்றசைய —வையகந்

சரணங்கள்

1 பாவத்தில் ஜீவித்தோர் பதைத் திடுவாரே
பக்தர்களெல்லோரும் களித்திடுவாரே
இச்சணம் யேசுவின் பாதத்தை நாடு
இனிமேல் வருவது நித்திய கேடு —வையகந்

2 இராஜாதி ராஜனாய் வருகிறாரேசு
இராஜ்ஜியம் வகிப்பாரே பாவிகளின்றி
பூலோக வாசிகள் புலம்பிடுவீரே
புண்ணியரின் ராஜ்யம் இன்றைக்கே தேடு —வையகந்

3 நியாய தினமதில் இரக்கமில்லையே
இராப் பகல் பாவத்தில் ஜீவிக்கும் ஜனமே!
பாவத்தை விட்டிடு இரக்க நாளிதிலே
பரனேசு வோடு சிறக்க நாளதிலே —வையகந்

4 பொய்யுலக மிது போயொழிந்திடுமே
பேய் பிசாசுக ளெல்லாம் தான் நடுங்கிடுமே
இப்போதே பேயுடை சிநேகம் விட்டிடுமே!
இயேசுவின் பாதத்தையே தாவி நாடிடுமே! —வையகந்

5 அல்லேலூயா பாடும் பக்தர்களன்று
ஆர்ப்பரித்திடுவார் ஆண்டவர் சமுகம்
அத்தொனி கேட்டு உன் மனம் வாதித்திடுமே
ஆண்டவரும் மீட்கக் கதிவேறு இல்லையே! —வையகந்

---

50 சிலுவைத் தியானம்

பல்லவி

இயேசு ரட்சகர் சிலுவை எனக்கென்று மாறுதலளிக்கும்
எந்தனை யெடுத்த பந்தனை ஜெயித்த—என்

சரணங்கள்

1 வருத்தப்பட்டு பாரஞ் சுமப்போர் வருவீரே என்று
வலிய பாவமோ கொடிய ரோகமோ [அவருரைத்தார்
வருவீர் தருவீ ரிருதய மென்றுரைத்த —இயேசு

2 கடின இருதயம் மாறும் மனக்கவலை யாவுமே தீரும்
கனவி னினைவோ மனதி னெண்ணமோ
கருவோ டறுப்பேன் முடிவோ டென்றுரைக்க —இயேசு

3 மோசேயின் சர்ப்பமுயர்த்ததுபோல் குருசினிலேசு யுயர்ந்
ஜனத்தை இழுக்க பாவத்தை யெடுக்க [தாரே
இரட்சிப்பும் மீட்பும் தந்திடுவே னென்றுரைத்த —இயேசு

4 குத்தின சேவகனன்று குருதியும் ஜலத்தையும் கண்டு
மரித்தாரென்றுமே சாட்சியும் கூறினன்
மனதில் தினமும் குருதியை நினைத்திட —இயேசு

5 அன்புள்ள என் நேசர் அவனியில் வந்து உயிர் விடுக்க
அடியேன் பாவமோ அத்தனின் சித்தமோ
அன்பே இன்பே அல்லேலூயா பாடிடுவேன் —இயேசு

---

51 பரலோக மகிமை

கண்ணிகள்

1 என்ன சிங்காரமையா என்நேசர் வீட்டில் என்ன சிங்கார [மையா
பிதாவானவர் முன்பில் இருபத்து நான்கு மூப்பர் வணக்கம்.

2 என்ன பேரின்பமது அம்மோட்ச வீட்டில் என்ன பேரின்ப
தேவாட்டின் சாயல் பரிசுத்தர்களணியும் நேரம். [மது

3 நான்கு ஜீவன்களுண்டு விநோதமான நான்கு ஜீவன்களுண்டு
அவர் சுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரென்று போற்றுகின்ற

4 பாட்டுகள் பாடுகிறார் கேள் தேவதூதர் பாட்டுகள் பாடுகிறார்
கனம் மகிமை வல்லமை அவர்க்கென்றுமுரியதென்ற.[கேள்

5 என்ன அதிசயம்பார் நவ எருசலேமில் என்ன அதிசயம்பார்
மணவாட்டியின் சாயலாக வானில் நின்றிலங்கும் நேரம்.

6 நானங்கு சேரும்நேரம் ஆஹா! என்ன இன்பம் நானங்கு சேரும் நேரம்
நேசமணவாளன் என் கண்ணின் நீர் துடைத்திடுவார்.

---

52 எக்காளம் தொனிக்க வருகிறார்

பல்லவி

வருகிறார் காந்தையைச் சேர்த்திடவே
வருகிறார்! எக்காளத் தொனியுடனே —வரு

அனுபல்லவி

பொன் தளவீதியில் உலாவிடும் இயேசு ராஜா —வரு

சரணங்கள்

1 ஆகாய மேகங்களில் எக்காளத் தொனியுடன்
தங்கக் கரங்களினால் மங்கையை அரவணைக்க —வரு

2 உன்னத இராஜன் பொன் மணவாளன்
கன்னியைச் சேர்த்திடவே மன்னவனெழுந்து வாரார்—வரு

3 அன்பின் தயாளன் ஆனந்தப் பூமான்
இன்றும் என்றும் மாறாத அன்பிலே நமை நிறுத்த —வரு

4 மன்னவர் மண்ணிலெமைத் தள்ளிடாமல்
தம்மருளால் எம்மைத் தன்னுடனெடுத்திடவே —வரு

53 கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்

சரணங்கள்

1 வான லோக இராஜா நானிலந் தனில்
கான கலகனை வென் றெழுந்ததால்.

பல்லவி

அல்லேலூயா ஸ்தோத்திரம் என்றும் பாடுவோம்
கிறிஸ்து உயிர்த் தெழுந்தார் சொல் தவறாமல்

2 மரியாள் கண்டேசுவில் அகமகிழ்ந்தாள்
நேசர் பதி செல்வோம் மகிழ் வடைய —அல்லே

3 மூன்றாம் நாளிலேசு மகிமை யுற்று
பெந்தெகொஸ்தே நாளில் அருள் பொழிந்தார் —அல்லே

4 அன்பர் பதினொரு பேருக் களித்த
அவ்வின்ப தரிசனம் என்றும் பெறவே —அல்லே

5 துன்பம் துயர் நீங்க இன்ப வாரியை
காண்பதினால் அன்ப ரின்பம் பெறுவோம் —அல்லே

54 இயேசுவின் வருகை

கண்ணிகள்

1 சாலேமின் நகரதிபதி வருகை—இந்த
பூலோகத் தஞ்சத் தோர்க்கு கவித்கழுகை.

2 கர்த்தராம் இயேசு மேகம் வரும் போது—எல்லா
சுத்தரும் அவரிடம் பறந்திடுவார்.

3 நாதரேசு வருகையின் அடையாளங்கள்—எல்லாம்
நானிலத்தில் நிறைவேறி நெருங்கிட்டதே.

4 எப்போ எப்போ வருவாரென்று ஏங்குதே உள்ளம்—என்
அப்பன் முகம் காண அங்கலாய்க்குதே உள்ளம்.

5 ஆணி பாய்ச்சப் பட்டகரம் கண்டிடுவேன்—என்
அங்கலாய்ப்புத் தீர முத்தம் கொடுத்திடுவேன்.

6 வாரடி பட்ட முதுகைப் பார்த்திடுவேன்—என்
ஆவல் கண்ணீரோடு அக மகிழ்ந்திடுவேன்.

7 முள்ளின் முடி தரித்த ராஜன் தலையில்—நான்
பொன்னின் முடி தரித்துப் போற்றிடுவேன்.

---

55 கிறிஸ்துவின் பாடுகள்

பல்லவி

பூவினில் வந்த விண் தேனே இவ் வேழையை
பாதத்தில் சேர்ப்பதற்காய்.

அனுபல்லவி

இந்தக் காசினி மீதிலே ஞானப் பொன்னரசே
பானமாய்த் தீர்ந்தனீரோ—இராஜா

சரணங்கள்

1 கெத்செமனேயிலே தங்கமே உந்தனின்
அங்கத்தின் வேர்வையாலோ—இராஜா
தேவ சங்கத்தின் மத்தியில் பங்கமில்லாமல் நான்
தங்கவே வாழ்ந்திடவோ—இராஜா பூவினில்

2 சேவகர் இயேசுவைக் கள்ளனைப் போலும்
வதைத்து உதைத்தனரோ—ரோமச்
கன மேலோக மத்தியில் வாதையில்லாமல் நான்
கானங்கள் செய்திடவோ—இராஜா —பூவினில்

3 ஒன்னார்கள் யூதரும் மன்னவா உந்தனின்
கண்களைக் கட்டினரோ—இராஜா
எந்தன் பாவக் கண்களில்லா ஞானக் கண்களினால்
விண் புரு வாகிடவோ—இராஜா —பூவினில்

4 கல்வாரிப் பாதையில் பாரச் சிலுவையை
நொந்து சுமந்தனீரோ—இராஜா
மணப் பந்தரின் மத்தியில் சிந்தைப் பாரம் நீங்கி
சோபை நாடிகிடவோ—இராஜா —பூவினில்

5 தலையோட்டு மேட்டிலே வண்டக் கள்ளர்களின்
மத்தியில் தொங்கினீரோ—இராஜா
நவ ஜோதிப் பிரகாசமாய்த் தங்க மாளிகையில்
நானங் குலாவிடவோ—இராஜா —பூவினில்

---

56 ஜீவனுள்ளோர் தேடும் தேவா

பல்லவி

தேவா ஜீவனுள்ளோர் தேடும்—தேவா

அனுபல்லவி

வாரும் நேசா வானவர் மேலா
வருவீ ரென் மனமே தினம் மகிழ்ந்திடவே —தேவா

சரணங்கள்

1 பூவும் நீரே மனமும் நீரே
ஜீவன் கொடுத்த ஒளியும் நீரே—தான்
ஜீவ னுள்ளோர் தேடும்—தேவா
என் காதலனே உந்தன் சோபையே தான்
சோக மடைந்தேன் உந்தன் நேசத்தினால் —தேவா

2 அன்பும் நீரே அரணும் நீரே
அவனியி லெனக் குயிர் கொடுத்தோனும் நீரே—தான்
ஜீவனுள்ளோர் தேடும்—தேவா
பின் மாரியின் மழை இப்போ தந்திடுமே
இவ்வேழைகள் ஜெபத்துக்கு இரங்கிடுமே —தேவா

3 அல்பாவும் நீரே ஓமேகாவும் நீரே
அடியோர்க்குப் பரி பூரணம் நீரே—தான்
ஜீவ னுள்ளோர் தேடும்—தேவா
உம் மகிமையின் ஆவியால் சுத்தி செய்யும்
நின் வருகையில் பரிசுத்தமாகக் காண —தேவா

57 காலைப்பாட்டு

கண்ணிகள்

1 அதிகாலையில் விழித்தெழும்பி மகிபனேசுவைப் போற்று
ஆவியில் உற்சாகமாக அன்பர் பாதம் வணங்கியே [வோம்
ஆத்தும நல் நேசரையே புகழ்ந்து போற்றுவோம்

2 காலை தோறும் புதியதான கிருபை இன்று பெற்றிட
களித்துமே இம் மேதினியில் ஜீவ பாதை ஓடிட
காட்சியாய் மிக மாட்சியாய் நாம் துதித்துப் போற்றுவோம்

3 மரியாளைப் போல் உள்ளம் கனிந்து அதிகாலையில் தேடினால்
பிரியமாகக் காட்சி தந்து அக மகிழச் செய்வாரே
புகழ்ந்துமே அகமகிழ்ந்துமே எம் நேசரென்போமே

4 கண்டிடுவோம் காலைதனில் கருத்துடனே தேடினால்
கண்டனரே காலையி லெம் முன்னோர்களும் தேடியே
மகிழ்ந்தனர் அவர் புகழ்ந்தனர் பரன் பாதம் பணிந்தனர்.

5 வழி இதுவே நடவும் இதில் எனவே அன்பர் பேசிடும்
இன்பமான வாக்கை கேட்டு இன்பக் கானான் செல்லவே
விழித்துமே உள்ளம் மகிழ்ந்துமே யாம் துதித்துப்
[போற்றுவோம்.

6 தூதர்களாம் கேருபிகளும் சேராபீகளும் சேர்ந்துமே
தூயர் தூயர் தூயர் என்று துதித்துப் புகழ்ந் தேற்றியே
தூயரை நல் நேயமாகப் பணிந்து நிற்கவே.

7 துதித்திடுவோம் நேசரையே துதித்த லின்ப மானதால்
துதியில் அவர் வாசம் செய்து துதியில் பிரியம் கொள்ளவே
ஸ்தோத்திர நற் பாத்திரரை துதித்துப் போற்றுவோம்.

58 துதிப்பேன், மகிழுவேன்

கண்ணிகள்

1 துதிப்பேன் யேசுவின் பாதம் துதிக்கப் பெறு மற்புத
[ரானதால்
வணங்குவேன், வணங்குவேன், வணங்குவேனவர் பாதம்
[வீழ்ந்து நான்—துதி

2 பேயின் தலை மிதித்தவர் நோயின் பெல னழித்தவர்
போற்றுவேன், போற்றுவேன், போற்றுவேனேசு
[தேவசுதனை—துதி

3 வானம் பூமியுமடங்க வல்ல அற்புதரானதால்
அற்புதர், அற்புதர், அற்புதர் அவர் நாமமே அதைத்—துதி

4 ஜே! ஜே! ஜெயகுமாரனும் ஜெயம் பெற்று விளங்கினார்
ஜொலிப்பரே, ஜொலிப்பரே, ஜொலிப்பரே அவர் தாசர்
[என்றைக்கும்—துதி

5 தூதர் கூட்டங்கள் போற்றும் தூய சுந்தரராமிவர்
மகத்வமே, மகத்வமே, மகத்வமே அவர் ராஜ்ய
[மென்றைக்கும்—துதி

6 செல்வேன் யேசுவின் பாதம் சொல்வேன் உள்ளத்தின் பாரம்
மகிழுவேன், மகிழுவேன், மகிழுவேன் அவர் வார்த்தையி
[லென்றும்—துதி

---

59 ஜீவனை தத்தம் செய்தல்

பல்லவி

மற்றோர்க்காய் வைக்கவையா—என் ஜீவனை

சரணங்கள்

1 அற்பன் நான் ஆயினும் சொற்படி செய்யவே
தற்பரா வாரேனையா—இந்நேரமே —என்

2 அங்கம் முழுவதும் தங்கமே உமக்காய்
எங்கும் பலியாகவே—நான் என்னையே — என்

3 உப்பைப்போ லாகவே எப்போதும் சாகவே
தப்பாமல் வைத்திடுமேன்—என் அப்பனே —என்

4 அஞ்சிடு மிந்நேரம் கெஞ்சுதலைக் கேளும்
தஞ்சமும் நீர்தானையா—நின் தாசனின் —என்

5 நன்மையைப் பெறும் நான் தின்மையும் உமக்காய்
அன்பாகத் தாங்கிடேனோ? —என் அன்னையே —என்

6 தியாகா என் பலியே திவ்யா நின் அடியே
மெய்யாய் நான் பின் செல்லவே—மாதுய்யனே —என்

---

60 புதிய எருசலேம்

பல்லவி

பரம ராஜன் தங்கும் மகிமை—பரலோக தூதர்
பாத சேவை செய்யும் மாளிகை.

அனுபல்லவி

பாரினிலே பார்க்கொணாத பண்புடனிலங்கிடுதே
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்றொலியே —பரம

சரணங்கள்

1 சாவு பசி துக்கமுமில்லை—அம் மாளிகையில்
வாழுவோரில் வஞ்சனை யில்லை [றோர்
நாதரேசின் சேவை செய்தோர் நானிலத்தின் இன்பம் அற்
ஆனந்தமாய் ஆர்ப்பரிப்பார் அன்பர்முகம் கண்டிடுவார்-பர

2 பக்தர் பரன் சாய லணிந்து—மகிழ்ந்து பாடி
நற் சுதனின் பின்னே நடந்து
பொன் மயமாய் விளங்கிடும் பொர்தளமாம் வீதி தனில்
போற்றி ஏற்றி ஆர்ப்பரிப்போம் பொன்னின் முடி நாம்
[தரித்து—பர

3 சுற்றிவரச் சிங்காசனங்கள்—சுதந்தரரின்
சாற்றவொண்ணாச் சொர்க்க இன்பங்கள்
ஜோதி லோகம் சேர்ந்திடலாம் ஜோதிமயமாகிடலாம்
ஜெயகீதம் படிடலாம் ஜெயம் பெற்றோர் ஏகிடலாம் —பர

4 ஜீவ நதி ஓடும் நாடது—இரவு பகல்
இரண்டும் மொன்றாய் தோன்றிடு மங்கு
இருளில்லா இன்ப நாடு அருளொளி வீசுமங்கு
இன்பலோகம் இன்பலோகம் இன்னலில்லா இன்பமது—பர

5 முத்து வாசல் பன்னிரண்டங்கே பிரபையுள்ள
இரத்தினப் பொன் மண்டபங்களே
இயேசு நாதர் ஜோதியல்லால் வேறிலங்கும் ஏதுமில்லை
நாமெல்லோரும் ஆர்ப்பரிப்போம் அல்லேலுயா
[அல்லேலூயா—பர

---

61 திகையாதே மனமே

பல்லவி

யோர்தான் நதியோரம் திகையாதே மனமே
யோசனையா லுன்னைக் கலக்காதே உள்ளமே —யோர்

சரணங்கள்

1 வெள்ளம் பெருகினும், வல்லமை குன்றாதே
வல்லவன் வாக் கொன்றும் மாறிப் போகாதே —யோர்

2 வைப்பா யுன் காலடி, தற்பரன் சொற்படி
வானவன் யேசு தம் வாக்கு மாறாரே —யோர்

3 உன்னத மன்னனே, உண்டு முன் னணியில்
துன்ப மணுகாமல் துணை யருள்வாரே —யோர்

4 கானானி னோரமே, காதலன் நாடதே
காணுவேன் தேசம் ஆ! என்ன இன்பமே —யோர்

5 பால் தேனு மோடுதே, பூரண அன்பதே
பாட்டினாலே அதைப் பகர லாகாதே —யோர்

6 ஜெபத்தினால் வல்லமை, ஜெயம் பெற்றோர் நாடதே
ஜோதியின் வஸ்திரம் தரித்திடலாமே —யோர்

---

63 அன்பரைப் பாடுவோம்

பல்லவி

ஆனந்தங் கொண்டு அக மகிழ்வுடனே
அன்பரைப் பாடிடுவோம்.

அனுபல்லவி

அவர் அன்பின் பாதத்தை அனுதினம் தேடி
ஆவியில் நிறைந்திடுவோம் —ஆனந்தங்

சரணங்கள்

1 பாவத்தில் மாண்ட பாவிகளெம்மைப்
பரிவுடன் இரட்சித்தாரே—அவர்
கிருபையை நாடி ஓடிவா இப்போ
உன்னையும் இரட்சிப்பாரே —ஆனந்த

2 சுத்த ஜீவியம் கொடுத்திட இயேசு
சிலுவையில் மரித்தாரே—அவர்
சுத்த ரத்தமே சுத்தி கரிக்கும்
பாவத்தை முற்றுமாக —ஆனந்த

3 தேவன்பில் வளர தேவாவி தந்தார்
தேவன் கிருபையாக—அவர்
கிருபையை நாடி ஓடியே வந்து
ஆவியைப் பெற்றிடுமேன் —ஆனந்த

4 துக்கமு மில்லை துன்பமு மில்லை
இயேசுவின் தொண்டருக்கு—அவர்
எல்லா வற்றிற்கும் எல்லாமா யிருந்து
ஆற்றியே தேற்றிடுவார் —ஆனந்த

---

62 கர்த்தாவே எழுந்தருளும்

பல்லவி

வாரும் தேவா வானவ ராஜா
காருண்ய அதிபதியே—ஸ்தோத்திரம்.

சரணங்கள்

1 வல்லமை ஞானம் நிறைந்தோர்—தேவரீர்
எல்லா மகிமை கனம் துதி பெலனுளோர்
ஸ்தோத்திர பாத்திரர் ஓயாமல் ஆர்ப்பரிக்க ஆண்டவனுர்
—வாரும்

2 வாழ்க நீர் ராஜாதி ராஜா—தேவரீர்
வாழ்க நீர் கர்த்தாதி கர்த்தர் எம்-நேசர்
வாழ்க நீர் என்றுமே தாழ்த்தினோம் எம்மையே உம்
[பாதம் வீழ்ந்து—வாரும்

3 பரிசுத்த நாமத்தில் நாங்கள்—தேவரீர்
தரிசிக்கவே வந்தோம் தயா பரா தந்தையே
கரிசனை யோடும்மை கருத்தோடு ஆவியாலே ஆராதிக்க
—வாரும்

4 தந்தையே வாரும் நீர் தயவாய்—தேவரீர்
மைந்தர்கள் கூடிடும் மத்தியில் விரைவாய்
ஈந்திடும் அருளைத் தந்திடும் ஆசீர்வாதம் ஏராளமாக—வாரும்

5 மகிமையால் மதிலாகச் சூழும்—தேவரீர்
தகித்திடும் அக்கினியால் சத்துருவும் மாளும்
வகித்திடும் ஆசனம் போதித்திடும் வசனம் உம்
[வாக்குடனே—வாரும்

6 அபிஷேகம் செய்திடும் துதை—தேவரீர்
சுவிசேஷம் விளங்கிடத் திறந்திடும் மனதை
தவித்திடும் மனதில் உதித்திட சத்தியமே சாட்சியாக -வாரும்

7 கொண்டிடவே உந்தன் மீட்பை—ஜாதிகள்
வேண்டிட அபிஷேகம் வேகம் உம்மன்பை
அண்டிட உம்மையே ஆதரவாக, பரிகாரியாக —வாரும்

---

64 தூசியை உதறிவிட்டு எழும்பு

பல்லவி.

எழும்பு சீயோனே இயேசு இதோவருகிறார்—வேகம்

1 இயேசுவின் வருகை மிகச் சமீப மாகுதே—இனி
மோசந்தான் அசதியாக ஜீவித்து வந்தால்—பின்பு
அலறிடுவாயே யேசு கைவிடும் போது —வேகம்

2 பூலோக நேசம் உன்னில் சற்றும் வேண்டாமே—நீயும்
மேலோகம் பார்த்துப் பார்த்து லோகத்தை வெறு—இது
மாய லோகமே உன்னை மோசம் போக்குமே —வேகம்

3 பாரங்கள் இருதயத்தில் ஏதேனு முண்டோ—சிறு
பாரங்கள் உன்னைக் கீழே தள்ளிவிடுமே—உந்தன்
இருதயத்தை நீ பரிசுத்த மாக்காயோ —வேகம்

4 லௌகிக கவலையோடு பெருந்தீனியும்—வேறு
மாமிச சுபாவத்தோடு நான் என்பதுமே—உனை
மோசம் போக்குமே உந்தன் ஆசை அழியுமே —வேகம்

5 மேகத்தில் யேசுராஜன் வேகம் வரவே—பரம்
ஏறுவார் பரிசுத்தர் வேறு ரூபமாய்—அன்று
மெக மேறிட நீயும் ஆயத்தந்தானோ வேகம்

6 ஆகாயத்தில் நடக்கும் கலியாணத்திலே—சுத்தர்
பாடுவார் அல்லேலூயா ஆர்ப்பரிப்போடு—அப்போ
அங்கிருப்பாயோ? பூவில் ஓடி ஒளிப்பாயோ? —வேகம்

7 அந்திக் கிறிஸ்து அரசாட்சி செய்யும் வேளையில் —கோர
அக்கினி பூமியில் சொரியும் வேளையில்—நீயும்
அகப்படாமலே இன்று தப்பிக் கொள்ளாயோ —வேகம்

---

65 துதியில் வருவீர்

பல்லவி

துதியில் தேவா வருவாய்—நான்
துதித்துத் துதித்து உம்மைப் பாடி மகிழ்ந்திடவே.

அனுபல்லவி

தூயவர் கோனே துணைபுரி மானே
தூய்மை கிடைக்கு மென்று துதிக்கிறேன் நானே —துதி

சரணங்கள்

1 துன்பம் இந்நேரம்—உம்மைத்
தொடரத் தொடரப் பேயின் கோபம் மிகுந்திடுதே
இன்பம் மிகுமே தம்பிரான் பாதம்
கெம்பீரம் பாடி அம்புவி ஏக —துதி

2 கங்குலே இந்நேரம்—என்
கலமும் துலக்கமின்றி மயங்கித் தியங்குகிறேன்
காடி தான் தேனோ கல்வாரி மலையில்
கருதுவோர் பருகும் காணூர் இரசமே துதி

3 அகமே வரந் தருவாய்—நான்
அல்லும் பகலு மும்மைப் பாடி மகிழ்ந்திடவே
தியாகஞ் செய்யவே யேகோவா பாதம்
தாகம் மிகுந்தேன் ஏழை யிந் நேரம் துதி

4 ஆறு லட்சம் பேரில்—நடு
உதித்து உதித்துச் சென்ற அதிரூப சொரூபா
கூறினீ ரல்லோ கூடி இருக்க
கொற்றவர் சேவை குறை வின்றி ஒழுக துதி

5 மகிபன் இயேசு துரையே—நான
மகிழ்ந்து மகிழ்ந்து தினம் பாடித் துதித்து வரும்
மஙகையர் கானம் மாசில்லா தல்லோ
தங்கப் பொன் னேசு சர்வதிகாரா

---

66 ஆட்கொண்ட அன்பு

பல்லவி

அன்பனே மகா அன்பனே—உந்தன்
அன்பாலே என்னை வென்றாயே

அனுபல்லவி

அன்பாலே முற்றும் நிறைந்தோனே
அன்பே, அன்பே, அன்பனே நீர் —அன்

சரணங்கள்

1 உம்மைக் கண்டநான் விட்டுப் போவேனோ—இந்த
மண்டலம் பின்னால் செல்வேனோ
உம்மாலல்லா திருப்—பேனோ
அருளே, அருளே, அருள் நிறைவே நீர் —அன்

2 விட்டவரே, விண்ணை விட்டவரே—என்னை
மீட்டுக் கொள்ளவே விட்டவரே
மட்டற்ற தூதர்கள் துதித்தோனே
துதியே, துதியே, துதியுமக்கே —அன்

3 வருவீரே இன்னும் வருவீரே—என்னை
அணைத்துக் கொள்ளவே வருவீரே
வான தூதத் தொனியோடே
செல்வேன், செல்வேன், மேகத்திலே —அன்

4 தொல்லைகள் வெகு துக்கங்கள்—எந்தன்
அல்லல்கள் முற்றமறிந்தோனே
அற்புதமா யென்னைச் சுமந்தோனே
அல்லும் பகலும் துதிப்பேனே —அன்

---

67 தாழ்மை

பல்லவி

பாலகன் போல் தன்னைத் தாழ்த்திடுவது யார்?—சிறு

அநுபல்லவி

பார்தனில் தன்னை மறந்தவன் மாட்சியி லுத்தமனேயவன்—பா

சரணங்கள்

1 தந்திடும் தாசனுக்குந்தன் தாழ்மை யிச்சணமே
வந்திடும் எந்தனைக்கேளும் கண்டிடும் கறைகள் தீரும் —பா

2 கொந்தளிப்பாகும் வேளை சொரிந்திடும் கிருபை
உந்தன் ஒத்தாசை ஈந்து உள்ளத்தில் ஊற்றும் தாழ்மை —பா

3 பாதகர் பகடி செய்தும் மௌனமானவா
நாதா உன் வழியில் நடக்க நாள்தோறும் கிருபைதாரும்—பா

4 தாழ்மையால் நீதி யும்மைக் கடந்து போனதே
தாழ்மையி லமிழ்ந்துநிற்க தாகிக்குதென் முழு உள்ளமே—பா

5 ஆயிலெளிமை யுள்ளவன் இராச்சிய மடைவான்
தாவியுன் பாதமடைந்தேன் ஆவியில் நடத்திக் காரும்—பா

---

68 கிருபாதார பலி

கண்ணிகள்

1 தன் ஜீவனைத் தந்தென்னை மீட்டவரே
தாரணியில் நாட்களை நான் கழித்து
பாரமின்றி வாழ்கின்ற மாட்சியிலே
மாசற்ற முகம் காண வாஞ்சிக்கிறேன்

2 சாபம் ரோகம் பாவங்சள் பரிகரிக்க
மானிலத்தில் வந்த என் நற்பரனே
பாவத்தை இரத்தத்தால் தீர்த்ததினால்
மோட்சத்தி லும்மோடு நான் வாழ்ந்திடுவேன்.

3 கஷ்டங்கள் அடிக்கடி அதிகரிக்க
அவபாதம் பழிகளுமே தொனிக்க
அசையாது சீயோனின் அரண்களைப்போல்
தவறாது வாழ்ந்திடத் தயவருள்வாய்

4 பாரினில் பகைவர்கள் பலுகின்றனர்
பக்தர்கள் தேசத்தில் அருகின்றனர்
விசுவாசம் பூவில் நின்றகலு முன்னே
பக்தரை தேசங்களில் பெருகச் செய்யும்.

5 கர்த்தாவே நின் வரவை காத்திருந்து
பார்தலத்தில் எம்மட்டும் பார்த்திருப்பேன்
மா தாகமதால் தண்ணீர் தேடும் மான்போல்
நின் வரவை எண்ணியான் காத்திருப்பேன்.

---

69 இயேசுவண்டை வா

பல்லவி

வந்திடுமே இயேசுவண்டை சேர்ந்திடுமே
பாவப்பாரம் தீர்ந்திடுமே.

அனுபல்லவி

வரும்பாவியை அணைப்பேனென்று
வாக்கு அன்பாய் அளித்தனரே.

சரணங்கள்

1 பாவத்தில் மாண்ட உனைப் பங்கமின்றி
விடுவிப் பேனென்கிறாரே
அன்பரின் சத்தம் கேட்கும் நாளில்
அன்பாய்ப் பாதம் அண்டிக்கொள் —வந்தி

2 செல்வத்தை நாடி ஓடிச் செல்வாயோ
சேர்த்திடுமே நரகில்
எல்லாம் விழல் என்று எண்ணி
நேசர் பாதம் அண்டிக்கொள் —வந்தி

3 மாயமே மண்ணுலகில் யாவதுமே
மனக்கவலை தருமே
மயங்காமலே மனதில் தினம்
மகிப ரன்பில் அமிழ்ந்துநட —வந்தி

4 மரணமே நினையா நேரமதில்
வந்துனைச் சந்திக்குமே
மரண வழி விட்டு பரன்
மாட்சி வழி நடந்திடுமே —வந்தி

5 மறப்பாயோ மாட்சிமைதான் மறந்து
மாணிடர்க்காய் மாண்டவரை
மாறாப் பரிசுத்த மீந்து
மன்னன் மார்பி லணைப்பாரே —வந்தி

---

70 இயேசுவின் வருகை

கண்ணிகள்

1 பிரதான தூதன் தொனிக்க தேவ எக்காளம் ஒலிக்க
மா ஆரவாரத்துடனே மன்னன் கிறிஸ்து வருவார்.

2 மங்களமாயவரில் மரித்தோர் முதலில் எழுவார்
மகிமையாகவே ஜொலித்து மன்னன் கிறிஸ்து வருவார்.

3 சுத்த ஜீவியம் செய்யும் தூயர்கள் பின்னால் எழுந்து
கர்த்தனை மேசுவுடனே ககனத்தில் ஒன்று சேர்வார்.

4 மண்ணின் சாயல்கள் அழிந்து மகிமையின் சாயல் பூண்டு
மா தேவனின் முன் அணியில் மாசற்றோராக நிற்பார்.

5 துக்க துன்பங்கள் நீங்கி பூமியின் பாரங்கள் ஒழிந்து
கர்த்தனும் யேசுவோடு சதாகாலம் ஆளுகை செய்வார்.

6 ஆயத்தமா ஆத்மாவே? உன் அன்பர் வரும் நேரம்
அதி கிட்டி நெருங்கியதால் அசதியாயிராதே.

---

71 மனுக்கோலம் பூண்ட இயேசு

பல்லவி

மனுக்கோலமேனோ, மனுவேலனுக்கே
மனுக்குலம் மீட்பதற்கோ?

அனுபல்லவி

மகிமையும் விடவோ மரிமகவானதோ
மகிமை, மகிமை, மகிமை.

சரணங்கள்

1 பாவியா மென்னையே பரமனு மெண்ணியே
காவினில் கந்தை அணிந்தோ
மகிமையும் தள்ளியே மனுவரானீர் மண்ணிலே
மகிமை, மகிமை, மகிமை —மனு

2 உன்னத மன்னனே இங்கிலம் மீதிலே
முன்னணை தான் தொட்டிலோ
என்னையும் சேர்க்கவோ ஏழையின் கோலமோ
எடுத்தீர், எடுத்தீர், எடுத்தீர் —மனு

3 பூவுலகிறையே பூவினிலுறைய
புகடவிடமும் அரிதோ
மகத்துவமின்றியே மனுவாகத் தோன்றவோ
மகிமை, மகிமை, மகிமை —மனு

4 சுகத்தையும் உரிந்து ஜெகத்தினில் உதித்து
பகைவருக்கு இரங்க
தாகமும் பசியும் தாங்கவும் அன்பினால்
பிறந்தீர், பிறந்தீர், பிறந்தீர் —மனு

5 மகிமையும் கனமும் மகிபருக்கென்றுமே
ஆதி அந்தமும் அவரே
மகத்துவமவர்க்கே மாட்சிமை அன்பர்க்கே
மகிமை, மகிமை, மகிமை —மனு

---

72 அளவிடக் கூடாத அன்பு

பல்லவி

அன்பரின் நேசம் அளவிடலாகுமோ.

அநுபல்லவி

அன்னியரெம்மை அணைத்த பேரன்பே.

சரணங்கள்

1 அதிசயமாகவே ஆதியில் நினைந்து
ஆதிபரனெமை அழைத்ததினாலே —அன்

2 மண்ணினில் மாயக் கன்னலில் மாளா
எண்ணியே என்னைக் கண்ணீர் சொரிந்தீர் —அன்

3 நித்திய மீட்பை நீசருக்கீந்திட
கெத்செமனேயில் கலங்கி வீழ்ந்தீரோ —அன்

4 பிலாத்துவின் முன்னே பிள்ளையெனக்காய்
விலங்குடனேகி தியங்கலானீரோ —அன்

5 கள்வனென் நாமம் வள்ளலணிந்தீர்
உள்ளமுருகுதே உன்னத அன்பே —அன்

6 பூவுலகிறைக்கு முள்முடி தானோ
தூசியெனக்கினி பொன்முடியேனோ —அன்

7 அன்பரைச் சேர்க்க வந்திடும் நேரம்
இன்பமாய் என்னையும் ஏற்றுக்கொள்வீரே —அன்

---

73 கெத்சமெனே பாடுகள்

கண்ணிகள்

1 ஆரிவராரோ காவினில் அலறுவதிவராரோ?
காரிருளதிலே ஆ—ஆ—
மனம் நோகுதே காயம் சாடுதே
அகம் வாடுதே முகம் மாறுதே. —ஆரிவ

2 தேடுவதேனோ யூதரும் தொலைத்திடும் வகையேனோ?
கேதமற்றோரிவர் ஆ—ஆ—
ஜெகதீசனே மெய்தீபனே
என் ஜீவனே ஏக ரூபனே. —தேடுவ

3 வேண்டுதல் கேளீர் பாவிக்காய் வேண்டிடும் தொனி சேளீர்
விண்ணவனே இவர்—ஆ—ஆ
அண்ணலே விண் மன்னனே
கண்ணீர் பெருகுதே கரம் சோருதே —வேண்டுதல்

4 பலியாவோரிவரோ பாவத்தன் பலனிவர்மேல் தானோ!
அலறுயோ மனம் ஆ—ஆ—
பலட் சாரமே வடிந் தேகுதே
பலியாகவோ இவர் பாரிலே. —பலியா

5 தொல்லைகளடைந்தோ கொல்கொதாவில் மரமீதறைந்தோ!
கள்வனன்றோ இவர்—ஆ—ஆ
உதிரமுடன் ஜலமோடுதே
உள்ளம் பாவிக்காய் உருகிடுதே. —தொல்லை

6 பாடுகள் சகித்தோ பகைவரின் பாவங்களை யெடுத்தோ
பரிகரித்திரோ ஆ—ஆ—
மனமாற்றவும் எமை மீட்கவும்
பலியானதால் நிதம் வாழ்த்துவோம். —பாடுகள்

---

74 இயேசுவைப் போற்றுவோம்

பல்லவி

போற்றுவோம்! இயேசுவுக்கே துதி சாற்றுவோம்—சரணம்

சரணங்கள்

1 எற்ற இத்தருணம் ஊற்றுவோம் இதயம்
தேற்றிடற்கு எற்றநாதனை எற்றியே புகழ்வோம் —போற்

2 கருணாகரப்பரமா காதலெம்மில் கொண்டோ
தாரணியில் தாசனாக தாழ்மையானீரோ? —போற்

3 புற ஜாதியானோரைப் புறம் பாக்க எண்ணாதே
உறவாடுதற்கு உன்னதத்தில் உரிமை யீந்திரே —போற்

4 ஆசிர் வாதங்கள் ஆசையோடெம்மில்
கூடிடாமல் ஈசனீந்த நேசமுணர்ந்து —போற்

5 பறக்கும் அம்புகள் எமை வதைத்திடாமலே
உறங்கிடாது ஊக்கமுடன் உகந்தணைத்தாரே —போற்

6 ஆவியின் அருளீந்து தாவி நமைச்சேர்த்து
பாவிகளெமை அன்பிலொன்றாய் ஆகுமருளீந்தார் —போற்

---

75 இயேசுவில் மகிழ்வோம்

பல்லவி

மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம்—பரன்
மகிமை யுற்றுமே மகிழ்வோம்.

அனுபல்லவி

மகிழ்வோம், மகிழ்வோம், மகிழ்வோம், மகிமையில் மகிழ

சரணங்கள்

1 வானில் யாவரும் மகிழ—இயேசு
வாரும் என்றுமே பகர
மாறுவோர்க்கொரு சிகரம்—மன
தாரத் தற்பரனருள
மகிமை, கனமும், மகிமையில், மிகவும் மகிழ —மகிழ்

2 சுத்த ஜீவியமுடைய—தேவ
புத்திரர் துலங்கிடவே
சர்வ சிருஷ்டிகளுடைய—மா
கர்மங்களுமன்றகல
மகிழும், தினமும், மகிபரின் தினமும், வரவே —மகிழ்

3 அடிமையானவர் கூடி—பரன்
அளித்த பொன்முடி சூடி
ஆயிரமாண்டுகளாக—கடம்
மாறியே அரசாள
மயிலும், குயிலும், ஆடும், புலியுடன் வாழ —மகிழ்

4 வானம் பூமியுமகல—நவ
வானம் பூவுமே நிகழ
சாபம் பாவமும் சகல—கடும்
ரோக மோடியே மறைய
சுகமும், ஜெயமும்; சகலரும், சுகித்து, மகிழ —மகிழ்

5 பொன்னால் வீதிகளுடைய—அரும்
சொல்லால் உரைப்பதற்கரிய
மின்னும் வச்சிர வொளியே—நரர்
கண்டு நடந்திடு மருளே
கண்ணீர், கவலையும், நண்ணு, நகரினில், மகிழ —மகிழ்

6 பளிங்குபோல் ஜீவநதியே—இரு
கரையும் ஜீவனின் மரமே
பசியும் தாகமுமிலையே—அங்கு
புசிக்க ஜீவனின் கனியே
புசிப்போம், ருசிப்போம், யேசுவில் நித்தியம், மகிழ —மகிழ்

7 சுத்த ஆவியும் சுதனும்—செய்த
மீட்பின் செயலைப் பரனும்
மற்றும் தூதர் கணமும்—அங்கு
உற்று உள்ளம் மகிழ
போற்றிப், புகழ்வோம், நூதன செயலில் மகிழ —மகிழ்

---

76 கர்த்தாவே எழுந்தருளும்

பல்லவி

தேவா இவ்வேளை இன்றே மேவி எழுந்து வாருமே
தயை செய்வாய் எமது கோவே :

சரணங்கள்

1 மூவர் ஒருவரான தேவா கிறிஸ்து நாதா
பூவில் நீரே எமக்கு நீதா
தூரவகன்றிடாமல் கூடி நடவும் தாதா
குறை தீரும் புண்ணிய நாதா
உரை உண்மை மொழியைப் போதா
தயை பண்ணுவாயே தயவாய் —தேவா

2 வாரும் தருணமதில் பாரும் அடியார்மீதே
வரம் தாரும் தருணமீதே
பாரும் பலர் மகிழ வாரும் பரம சேயே
கரம் நீட்டும் கருணைத் தேவே
பயம் மாற்றும் பணிந்திப் போதே
சிரம் என்றும் இனிமேல் நீரே —தேவா

3 நீரே எமக்குதவும் தீரமுடைய பூமான்
இனி வீணாய் அலைவதேனோ
நீதா இரங்கி என்னை மாளாதணைத்த சீலன்
இன்பம் ஈந்த இனிய நாதன்
இன்னல் ஒங்கா தகர்த்த நேசன்
ஈடேற்றம் அருளும் தேவன் —தேவா

4 அல்லல் அகிலமெங்கும் எல்லாம் அறிந்த தேவா
நல்ல கன்மலை நீயேகோவா
எல்லாம் இருளது போல் பொல்லாவுலகில் பாராய்
வன்மை தந்து தாங்கிட வாவா
அன்னை போல அணைத்து காவா
உம்மை விட்டுவிடேனே மூவா —தேவா

5 மண்ணில் தனிமையாக அண்ணலடி சென்றாலும்
பல வெள்ளங்கள் முன்நின்றாலும்
கண்டு கலங்கிடாது அன்பர் வரவெந்நாளும்
நன்றியோடும் நினைத்துப் பார்ப்பேன்
அன்று நண்பர் யாவரும் காண்பேன்
என்றும் மகிழ்ந்து வாழ்வேன் —தேவா

•77 தீரமாய் முன் செல்வோம்

பல்லவி

செல்வோம் செல்வோம் வீரரே
ஜெய வேந்தன் தீரரே.

அநுபல்லவி

சீரடைந்து பாரில் மக்கள் நேரடைய நேர்மையுடன்
தீவிரமாய்த் தியாகத்துடன் செல்வீர் நீர் சேவைசெய்ய —செல்

சரணங்கள்

1 பாரும் பரன் கைப்பணி—பாதாளத்திலாகுதே
பாதை காட்டும் மேய்ப்பனின்றி—ஆத்துமாக்களலையுதே
பகருமே சுவிசேஷம்—பாய்ந்து செல்லும் வீரரே —செல்

2 நரரின் வினை பெருகுதே—நாசபுரம் நெருங்குதே
நாட்கள் தோறும் செடியில் நில்லா—கொடிகள் யாவும் [உலருதே
நாணுதே சிருஷ்டியும்—நசரேயன் பேரில் செல்லுமே-செல்

3 விருந்துசாலை பாருமே—இருந்துண்போரைக் காணோமே
வீதிகளில் அலைந்து நிற்போர்—வீட்டுள் விரையச்செய்யுமே
நிரம்பவே சாலையும்—தீவிரம் செல்லும் வீரரே —செல்

5 கேட்டின் மகன் கூட்டத்தை—கூட்டுவோமன்பருக்கே
ஆட்டுக்குட்டி யானவரின்—சாட்சியைக் கூறிடுவோம்
கட்டும் அரைக் கச்சையதை-கையிலெடும் பட்டயத்தை-செல்

5 ஆத்துமாக்கள் சேர்க்க இரத்தம்-சிந்திடப் பின்னடையோம்
ஆத்துமா சரீரம் ஆவி—பாத்திரர்க்கு அளித்துமே
தத்தமுடன் இத்தினமே-சத்தியத்தைச் சாற்றிடுவோம்-செ

6 எதிர்க்கும் பேயை நசுக்குவோம்—பதுங்கிட்டாலும் [பயப்படோம்
ஏதேனிலே ஏவைமாதை—ஏய்த்தவனைத் துரத்துவோம்
ஏற்றுவோம் ஜெயக்கொடி—இயேசுவின் நாமத்தில் [செல்லுவோம்—செல்

———

78 தேவாதி தேவனைத் துதிப்போம்.

சரணங்கள்

1 தேவாதி தேவனே மகத்துவா—ஸ்தோத்ரம்
தேசிகர் போதனே ஜீவா—ஸ்தோத்ரம்.

பல்லவி

வந்தனம் தந்துமைச் சொந்தமாய்ப் போற்றுவேன்
இந்த வேளைதனில் வந்தருள் ஈதுவாய்.

2 ஈனப் பாவியெந்தன் மீட்பா—ஸ்தோத்ரம்
ஈனச் சிலுவையை எடுத்தாய்—ஸ்தோத்ரம் —வந்

3 வியாகுல நேரத்தில் நேயனே—ஸ்தோத்ரம்
வியாதிப் படுக்கையில் சகாயனே—ஸ்தோத்ரம் —வந்

4 ஆலோசனை தரும் ஞானமே—ஸ்தோத்ரம்
அல்லல்கள் தீர்த்திடும் வல்லவா—ஸ்தோத்ரம் —வந்

மாலை மயங்கையில் ஜோதியே—ஸ்தோத்ரம்
காலைச் சமயத்திலென் ஜீவனே—ஸ்தோத்ரம் —வந்

6 அன்பர் விட்டோடினும் மாறிடா நண்பனே
கொண்டாயுன் ரத்தத்தால் கொற்றவா—ஸ்தோத்ரம் —வந்

7 துன்ப மகோரமாய்ச் சூழ்ந்திடும் நேரத்தில்
இன்பமாக என்னை ஏற்றவா ஸ்தோத்ரம் —வந்

---

79 கிறிஸ்துவின் அன்பு.

பல்லவி

கோடா கோடி ஸ்தோத்திரம் பாடி
கிறிஸ்துவின் அன்பை ருசிப்போமே —கோடா

அனுபல்லவி

சேற்றிலிருந்து தூக்கி எடுத்துத்
தேற்றி அணைத்துக் காத்துக் கொண்டாரே—தேவசுதன்

சரணங்கள்

1 பாவியை மீட்கப் பரன் சித்தங் கொண்டார்
பரலோகம் துறந்து பாரினில் பிறந்தார்
பரமனிவ் வேழையைத் தேடி வந்தாரோ
பாதம் பணிந்தேன் பதில் ஏதுமுண்டோ—பூவுலகில்-கோடா

2 தேவனின் சித்தம் செய்யும்படியாய்த்
தாசனின் கோலம் தாமெடுத் தணிந்து
தற்பரன் நொறுக்கச் சித்தங் கொண்டாலும்
தம்மைப் பலியாய்த் தத்தம் செய்தாரோ—எந்தனுக்
காய்—கோடா

3 ஆடுகளுக்காய் உயிர்தனைக் கொடுத்து
கேடுவராது காக்கும் நல் மேய்ப்பர்
இன்றுமென் பேலே வைத்த நேசத்தால்
என்றென்றும் நன்றிகூறித் துதிப்பேன்—இறையவனை-கோ

4 தாவீது கோத்திர சிங்கமாய் வந்தும்
சாந்தத்தால் என்னைக் கவர்ந்து கொண்டாரே
தாழ்மையான ஆட்டுக் குட்டியுடனே
தங்கியிருப்பேன் சீயோன் மலையில் நித்தியமாய்—கோடா

5 குயவனின் கையில் களிமண்ணைப் போல
குருவே நீர் என்னை உருவாக்குமையா
மாசற்ற மணவாட்டியாய் என்னைக்
காத்துக்கொள்ளும்படி கருணை கூர் ஐயா-ஏழை
—யென்னை—கோடா

---

80 இயேசுவின் பாடு

பல்லவி

தேவாதி தேவனின் நேச குமாரனிப்
பாடுகள் தாங்குவதேன் – இப்பாரதில்

சரணங்கள்

1 ஆகாயப்பறவைக்கும் ஆறிடக் கூடுமுண்டே
யாவையுந் தான் படைத்த-கர்த்தாவுக்கு
போக்கிடந் தானில்லையோ-இம்மண்ணதில்—தேவாதி

2 மரிப்போமென்ற சீஷரும் மறுத்து விட்டோடினுரோ ?
மாபெரும் பாரத்தினல்-தவிக்கையில்
ஆற்றுவார் தானில்லையோ ? இப்பூவிலே —தேவாதி

3 ஆயிரமாயிரம் பேரினு மழகுள்ளோன்
அந்தக் கேடடைந்திப்போ-பார்ப்பதற்கு
அழகற்றுத்தோன்றுவதேன்-பிலாத்துமுன் —தேவாதி

4 சர்வ ஞானத்தி னூற்றும் தயாபரனுன தேவன்
தாமொன்றும் பேசாதோராய்-தாழ்மைபுருவாய்
தயங்கி நின்றயருவதேன்-போர்வீரர் முன் —தேவாதி

5 பொல்லாத மானிடரின் மூர்க்கமதிகமையோ
தொல்லையில்லாப் பரனே—அ—ஆ—ஆ—ஆ
கொல்வதுதான் நீதியோ ? என் தெய்வமே —தேவாதி

---

81 இயேசுவைப் பணிவோம்

பல்லவி

பாடிடுவோம் ஒன்ருய்க் கூடிடுவோம்
பரன் பாதம் பணிந்து கனிவுடனே —பாடி

சரணங்கள்

1 புண்ணியர் மிகப் புதுமையுடன்
புகலவொண்ணு இரட்சை தந்தார்
போற்றி யேற்றி வாழ்த்திடுவோம்
புனிதனை நாம் பூவினிலே —பாடி

2 பக்தர்கள் நாம் ஆவதற்கு
பரன்தாமே சிலுவை சுமந்தார்
சுத்தராய் நாம் சோபித்திலங்க
சுத்த ஆவி ஈந்ததாலே —பாடி

3 நிந்தை சோதனை அவமானங்கள்
நேரினும் நாம் சோரா தோட
நேயன் தாமே நிந்தை சுமந்தார்
நேயரே நாம் ஆனந்தமாய் —பாடி

4 மாய லோக வாழ்வை வெறுத்து
மாசற்றோராய் ஜீவிப் போர்க்கு
மகிமையான சொர்ண வீட்டை
மகிபன் யேசு ஈந்திடுவார் —பாடி

---

82 கருணையின் தேவனுக்கு ஸ்தோத்திரம்

கல்யாணி கல்

1 கருணையின் தேவா கதிதரும் மூவா
கர்த்தா உமக்கே ஸ்தோத்திரம்
பரலோகனே—பவ நாசனே
பரனே—கரனே—உமைக்
கண்டு மகிழ்ந்திடவே எமக்காசை
கருணை நிதியே காத்திடுவாயே —கருணை

2 வல்லமை ஞானம் நீதி நிறைந்த
வள்ளலே உமக்கே ஸ்தோத்திரம்
வரந்தாருமே—வந்து காருமே
வந்தோம்—தந்தோம்—உந்தன்
சுந்தரக் கரத்தினில் மைந்தர்களெமையே
வருவாய்—தருவாய்—அருள்மாரியை யிப்போ —கருணை

3 பலியாக உமையே பாவிக்கா யீந்த
பரனே உமக்கே ஸ்தோத்திரம்
புறம்பானீரோ—புவிமீதிலே
புகழ்வேன்—மகிழ்வேன்—உந்தன்
பொற்பாதம் பணிந்துமே ஆனந்தக் களிப்புடன்
பொல்லா உலகின் இன்பத்தை வெறுத்து —கருணை

4 நித்ய மணாளா நிர்மல நாதா
நேசரே உமக்கே ஸ்தோத்திரம்
நினையா—நேரம்—வருவீரையா
நிதமே—விழிப்பாய்—உமைச்
சந்திக்க ஆயத்தமா யிருந்திடவே
நேசா ஜெபிக்க ஏவுதல் தாரும் —கருணை

---

83 கர்த்தர் உண்மையுள்ளவர்

பல்லவி

உமை நம்பினோர் மாண்டதில்லை மாண்டதில்லை
யாண்டதில்லை.........உமை

சரணங்கள்

1 துன்பங்கள் பலவாய் நெருங்கி வந்தாலும்
தொல்லைகள் எம்மை அணுகி வந்தாலும்
காக்கவல்லவா, காக்கவல்லவா, காக்கவல்லவா, காக்க
வல்லவா.........உமை

2 சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சியுற்றாலும்
பங்கம் வராதென்னைக் காத்திடுவீரே
ஓங்குமே, பெலன் ஓங்குமே, எமைத்தாங்குமே, துயர்
நீங்குமே.........உமை

3 நிறுத்திடு வீரென்னைக் களங்கமில்லாமல்
பொறுத்தெந்தன் குறைகள் யாவையு மகற்றி
காப்பீரே, என்னைக் காப்பீரே, சுத்தம் செய்வீரே.
முத்தி சேர்ப்பீரே.........உமை

4 தாரகை போல் நின்று இலங்கின சுத்தர்
பாதைவிட்டோடி மறுத்து வீழ்ந்தாலும்
பாதைகாட்டவும், பாதுகாக்கவும், பாதஞ்சேர்க்கவும்
வல்லவா.........உமை

5 மாட்சியிலே இன்னும் வந்திடுவீரே
மகிமையிலே என்னைச் சேர்த்துக்கொள்வீரே
மன்னவர் நீரே, நல்லவர் இன்றும் நல்லவர், என்றும்
நல்லவர்.........உமை

---

84 மீட்க வந்த இயேசு

சரணங்கள்

1 பாவியை மீட்கப்பாரினில் வந்த பரிவு தானிதோ
பாலகனாகி ஆவடை குடிலில் பார்த்திபனே அரசே
ராஜ—கோல மிதுவா மோ ?
தேவ—கோலமிதுவாமோ ? தினம் தோத்திரம்

பல்லவி

தினம் தோத்திரம் தோத்திரம் தோத்திரமே—ஜெய
ராஜனுய் வந்த தேவனுக்கே

2 ஆதியிலே பிதாவுடனிருந்த அற்புத வார்த்தை யிதோ
ஏதுமற்ற ஓர் பாலகனுயிம் மாதிர மீதினிலே
ஐயா—ஏங்கியழுதிடவோ ?
புல்மீ—தேங்கியழுதிடவோ ? —தினம் தோத்திரம்

3 மானிடரெவரும் காணவொண்ணுத மகிமையின் நித்தியரே
கானிடை ஆயரும் கண்டு களிக்கக் காட்சியீந்தீரோ
ஏழை—மானிடர் மீதன்போ ?
பரனே—மானிடர்மீதன்போ ? —தினம் தோத்திரம்

4 மரண பயத்தின் அடிமையிலாகி மாண்டு கிடந்த எனை
அரவணைத்தேயும் ஜீவனையீந்திட அடிமையானீரோ
யேசுவே—அதிசயமீதன்ரே ?
யார்க்கும்—அதிசயமீதன்ரே ? —தினம் தோத்திரம்

5 உழையும் சேற்றினில் அலையும் பாவிமீதன்பு எனையா
துரோகஞ் செய்து தூஷித்த இந்தத் தோஷியை எனையா
குருவே—தேடினதேனையா ?
எனையும்—தேடினதேனையா ? —தினம் தோத்திரம்

6 விண்டலமெல்லாம் தாழ்மையினுலே விடுத்து வந்தாலும்
அண்டசராசரவகிலமுமின்றி அகமகிழ்வதென்ன
ஐயா—ஆனந்தங் கொள்வதென்ன ?
பாவியும்—ஆனந்தங் கொள்வதென்ன ?—தினம் தோத்

---

85 காத்தவர் காப்பார்

பல்லவி

காப்பார், உன்னைக் காப்பார்,
காத்தவர் காப்பார், இன்னும் இனிமேல், காத்திடுவார்
கலங்காதே மனமே—காத்திடுவார்

சரணங்கள்

1 கண்டுனை அழைத்தவர் கரமதைப்பார் அவர் கைவிடா [திருப்பார்
ஆண்டுகள்தோறும் உனக்கவர் அளித்த ஆசிகளை [எண்ணிப்பார்
எண்ணிப்பார், எண்ணிப்பார், எண்ணிப்பார்
என்றுமதை எண்ணிப்பார் —காப்பார்

2 இஸ்ரவேலுக்கு வாக்குப்படி இன்பக் கானான் அளிக்க [வில்லையோ?
இப்போதிவர்களை நீர்மூலம் செய்வதென்று பின்னும் இரங்க [வில்லையே?
இல்லையோ, இல்லையோ, இல்லையோ?
மனஸ்தாபம் கொள்ளவில்லையோ? —காப்பார்

3 வீழ்ச்சியில் விழித்துன்னை மீட்பவரும் இகழ்ந்துவிடாது [சேர்ப்பவரும்
சிற்சில வேளையில், சிட்சையினாலுனைக்கிட்டயிழுப்பவரும்
ஜெயமும், கனமும் சுகமும்
உனக்கென்று மளிப்பவரே — காப்பார்

4 தாயினகட்டில் வருமுன் உனக்காய்த் தாமுயிர் கொடுத் [தவரே
காயீனைப்போலுனைத் தள்ளிவிடாது கைகொடுத்தெடுத் [தவரே
அவரே, அவரே, அவரே
அன்புகொண்டு மணந்தவரே —காப்பார்

5 ஆதரவாய்ப் பல ஆண்டுகளில் பரனடைக்கலமாயிருந்தார்
காதலுடனவர் கைப்பணி செய்திட, கனிவுடனாதரித்தார்
தரித்தார், தரித்தார், தரித்தார்
பரிசுத்தத்தில் அலங்கரித்தார் —காப்பார்

---

86 இயேசுவின் மணவாட்டி

கண்ணிகள்

1 சீயோன் மலையதிலே சிங்காரக் குன்றதிலே
சிறப்புடன் நிற்கிறவளாரோ?—தன்
மீட்பரைச் சாற்றுபவள் யாரோ?
ஆட்டுக் குட்டிக்குமாய் அன்பர் செய்கைக்குமாய்
ஓயாமல் போற்றுபவள்தானே —சீயோன்

2 களங்கமில்லாதவளாம் கன்னிகை தானவளாம்
கர்த்தனுக் கேற்றவளவளாம்—அவள்
காதல் எந்நாளும் அவர்மேலே
காந்தன் வரவுக்காய்க் காத்திருந்தவளே
கற்புடையவளே—பாரில் —சீயோன்

3 ஆட்டுக்குட்டியின் பின்னே சென்றவள்தானவளே
அண்ணல் இயேசுவின் சித்தம்தானே—எல்
லாநாளும் செய்தவளவளே
அழகவள் பாதமே, மலைய தன்மீதிலே
ஆ! ஆ! அதின்பமே—வானில் —சீயோன்

4 வாயிற் கபடமில்லை வஞ்சனை தானுமில்லை
ஆடை பிரகாசமாயணிந்தாள்—தன்
காதலன் இரத்தத்திலே தோய்த்தாள்
தன் தேவநாமமே நெற்றியில் தோணுதே
ஆ! அலங்காரமே—ஆ! ஆ! ஆ! —சீயோன்

5 மணவறைதானதிலே, மறைந்திடுவாளவளே
மன்னன் அழைக்கும் தொனியோடே—மிக
மாண்புடன் வாழுவாளவளே
வா என் மணாளியே, என்பாரந்நாளிலே
செல்லுவேன் நானுமே—ஆ, ஆமேன் —சீயோன்

---

87 இயேசுவே ஆசி கூறும்

பல்லவி

இயேசுவே கருணாகரா! நின்
ஆசிகூறுமே யிந்நேரம் —இயேசுவே

சரணங்கள்

1 தாசர்களின் ஆறுதலே, தாழ்மையுள்ளோர் தாரகமே!
தாவிவந்து பாதம் பணிந்தோம்
தயாபரா கிருபைதாரும் —இயேசுவே

2 தேசமெல்லாம் புலம்பிடுதே—நாசமெங்கும் பரம்பிடுதே
நேசரேயும் பாசகரத்தை
நீட்டி எம்மை ஆதரிப்பீர் —இயேசுவே

3 ஆதி அன்பு குறைந்தோரெல்லாம் ஆவலாய் முன்னேறிச் [செல்ல
ஆவிமழையை யூற்றிடுமிப்போ
அன்பிலே நிறைந்துமகிழ —இயேசுவே

4 விசுவாச துரோகமெங்கும் வேகமாகத் தோன்றிடுதே
வேதனே மெய்விசுவாசமோங்க
வேண்டுமே ஞானத்தினுவி —இயேசுவே

5 வாக்குமாருத் தேவா வாரும் வல்லமையால் நிறைக்கவே [நீரும்
வெல்லவே பொல்லாத பிசாசை
வீரமா யெதிர்த்து நின்று —இயேசுவே

---

88 ஆண்டுகள்தோறும் இயேசுவைப் போற்றுவோம்

பல்லவி

இயேசுநாதனைப் போற்றிடுவோம்—புகழ்ந்து
நாதனைப் போற்றிடுவோம்—புகழ்வோமே

சரணங்கள்

1 ஆ, ஆ, ஆனந்தம் அன்பர் சந்நிதியில்
ஆசீர்வாதமென்றும் பெருகிறதே
அதை நினைந்தக மகிழ்ந்துமே
அடிபணிந் தடியவருமை —இயேசு

2 கருணையினுலமை அலங்கரித்திடவும்,
கனிந்து துணை தினமும் புரிந்திடவும்,
வரும்பெரும் வினைகளனைத்தும்
அறும்படி அருளினதினுல் —இயேசு

3 வருடம் முழுவதிலும் வழுவவிடாது
வாழும் வழிகளிலே வளரச்செய்து
பலமுடைய புயமுடனே
பரன் பராமரித்திடவே —இயேசு

4 பாதையில் பாடுகள் பலுகிவந்திடினும்
வாதை பிணி எமை வருத்திடினும்
அதைரியம் அணுகிவரினும்
அநுதினமும் துதித்திடுவேன் —இயேசு

5 அன்பில் அநுதினம் அடியவர் நிலைத்திட
அண்டி நடத்திடும் ஆண்டிதிலும்
அநாதியும் அந்தமும் நீரே
அனுதையின் சொந்தமும் நீரே —இயேசு

---

89 இயேசுவின் இன்ப நாமம்

பல்லவி.

இயேசென்னும் நாமம் என் நாவுக்குச் சுகிர்தம்
நானிலம் தனில் என் அரணே— ஆ

அநுபல்லவி

தீருமென் குறைவும் தீதுகள் குறையும்
தீருமென் திகிலும் உரைக்கவும் பெயரும்

சரணங்கள்

1 சிந்தையின் பாரங்கள் யாவையும் நீக்கிடும்
சஞ்சலம் யாவுமே அகற்றும்— ஆ
பந்தனை ஜெயித்து வந்தெனை அணைக்கும்
பந்தனை அழித்துச் சந்தோஷம் அளிக்கும் —இயேசு

2 வெவ்வேறு பாஷையைப் பேசிடச் செய்திடும்
வெவ்வேறு நாவினால் துதிக்க— ஆ
வேந்தனே நமக்கு ஈந்ததும் இதுவே
வேந்தனை அண்டினோர்க்காறுதல் இதுவே —இயேசு

3 பேய்களும் நீங்கும் பொல்லாவியும் அகன்றிடும்
நோய்பிணி யாவுமே தொலையும்— ஆ
அதிசயம் நடக்கும் அற்புதம் பெருகும்
அதிசயர் பெயரும் என்றென்றும் ஜெயிக்கும் —இயேசு

4 பயங்கர சர்ப்பத்தைப் பயமின்றி எடுக்கவும்
மயக்கிடும் நஞ்சை ஜெயிக்கவும்— ஆ
தயங்கி நிற்பவரைத் தாங்கிடும் பெலனே
தயங்கி வந்தவரை ஆற்றிடும் பெயரே —இயேசு

5 ஆ! என்ன இன்பம் என் ஆண்டவர் பெயரில்
ஆனந்தமே அதன் நினைவில்— ஆ
தேனிலும் இனிமை பேதைக்கு மகிமை
தேனிலும் இனிமை ஏழைக்கும் உரிமை —இயே

6 வணங்குவார் யாவரும் வானிலும் பூவிலும்
தொனித்திட இயேசுவின் நாமம்— ஆ
மடங்குமே முழங்கால் அடங்குமே துடுக்கும்
மடங்கு மெய்ப்பெயரும் நடுங்குமே அவர்க்கு —இயேசு

---

90 இயேசுவைப் பணிவோம்

கண்ணிகள்

1 ஜீவஞான ஏசுநாதனின் சேவடி பணிவோமே—நாம்
ஜீவனை ஈந்த ஜீவாதிபதியை
ஜீவிய நாளெல்லாம் பணிவுடனே நாம் —ஜீவ

2 வெள்ளம்போல வந்திட்ட அலையை விலக்கியே மீட்டீரே—மா
உள்ளம் போல நேசித்தார் எமை
கள்ளம் நிறைந்த இப்பார்தல மீதில் —ஜீவ

3 போஷிக்கும் கரம் ஆசிக்கும் கரம் புனிதா நீர் ஈந்திடுமே-ஆ ஆ
நேசிக்கும் எம்மில் உம் ஆனந்தமாரியை
பாசமா யித்தினம் தந்து அளித்திடும் —ஜீவ

4 காதலனே நானிலம் தனிலேயும் தாசர்கள் ஓங்கிடவே-ஆ ஆ
ஆர்வலனே உம் நன்மைகள் ஈந்து
சீர்பாலனம் செய்திடுவாய் எம்மில் —ஜீவ

5 திங்களொளியே மங்கிடா மதியே தினமுமைத் துதித்
[திடவே-ஆ
பங்கமில்லா உம் பாதத்தைத் தேட
பாதகர் எமையே பரிசுத்தம் செய்தீர் —ஜீவ

6 காத்திராத தினமதில் நீரே கர்த்தரே வருவீரே—ஆ ஆ
ஆவி ஆத்துமா எம் மாமிச முற்றும்
மாசற்றதாக மகிமையில் சேர்க்க —ஜீவ

---

91 அரசே வருவீர்

பல்லவி

அரசே வருவீர்—எங்கள் மனது மகிமையிலே நிதமும் மகிழ்ந்திட
அரசே

சரணங்கள்

1 அரசர்க் கோர் குமாரனும் இவரே
அம்புவிய டர்ந்த திராட்சையும் இவரே
வெம்பிடு வோர்க்கு வேருற விவரே
விந்தை யாதாரமே சுந்தரக்கரமே —அரசே

2 துன்பம் துயரம் தொடர்ந்திடும் நேரம்
தோன்றிடும் தபனக் கிருபை ப்ரகாசம்
இன்பம் தருமென் எசுவின் நேசம்
இறை யாரருளே வரையா டுறையே —அரசே

3 பாதகர் பகடி செய்திடும் வேளை
பக்தருக்காகக் கொடுத்தீரோ தோளை
பரிசுத்தராகத் தொலைத்தீரோ அலகை
பரலோக சுகம் பாரி லெமக்கீய —அரசே

4 சங்கீத மேளம் எங்கும் முழங்க
சாலேமின் ராஜ்யம் நீடூழி வாழ்க!
பொங்கும் வதன பூமியில் யாம் மகிழ
புவியாரணமே எமக்காருயிரே —அரசே

5 அல்லல் தொலைக்கும் செல்லக் குமாரா
அலகை அடக்கும் அற்புத வீரா
அல்லேலூயா துதி ஆண்டவ ருமக்கே
அடியாருமையே அடிபணிந் தோமே —அரசே

---

92 இயேசுவை சேவை செய்வேன்

பல்லவி

இயேசுவை முழுமனதாலே
சேவை செய்வேனென் நேசரன்பாலே.

அனுபல்லவி

தேடியென் பாவங்கள் காணவு மரிதே
தேவகுமாரன் தன் தோளதன் மீதே
நேசமுடனே சுமந்தளித்தாரே —இயேசு

சரணங்கள்

1 காரிருள் மூடின வேளை
கருணையின் கதிர்கள் வீசினதாலே
பாருலகதிலே பகைவரினெதிரே
மாளவிடாதே மகிமையினாலே
பாலகரெமையே அலங்கரித்தாரே —இயேசு

2 கனிவுடன் கரமளித்தாரே
மானில மீதே மகிழ்ந்தழைத்தாரே
தனிமை யென்றுணரத்தாமே விடாது
வலிமை யளித்து வழியில் முன் நடந்து
தாங்கினாரே சாய்ந்து விடாது —இயேசு

3 அற்புதம் அவரது நேசம்
உற்றதில்லை யிங்கிவ்வித பாசம்
சுற்றிலும் சத்துரு சூழ்ந்து எழும்ப
முற்றிலும் முறித்திடப் பல்முறை முயல
உற்றவர் அன்பாய் முன்னின்று பேச —இயேசு

4 இயேசுவென் சகலமுழுலகில்
தேக சுகமும் பேசிடும் பெலமும்
ஏக துணையும் ஏழையினணையும்
மேகங்கள் போன்ற துன்பத்திலரணும்
சோரும் வேளை சாரும் பர்வதமும் —இயேசு

5 புண்ணியனைப் புகழ்வேனே
புவிதனிலுமவர் பேரன்பினாலே
பூதலமீதினுள் புதைத்திடாமல்நான்
சுவிசேஷமதைக் கூறிடுவேனே
தூயனைப்பாடித் துதித்திடுவேனே. —இயேசு

---

93 இயேசு என்னை மீட்டார் (E. 28)

கண்ணிகள்

1 ஆழத்தினின்று அருள் மகிமை
ஆச்சரிய அன்பாலடைந்து கொண்டேன்
அடிமையாக்கிடுவ தொன்றுமில்லை
இயேசுவென்னை மீட்டார் (மும்முறை)
அடிமையாக்கிடுவதொன்றுமில்லை
இயேசுவென்னை மீட்டார் —ஆழ

2 மண்ணுலகினின்று உன்னதத்தில்
மீட்கப்பட்டவரின் மண்டலத்தில்
விண்ணிலிருப்பேனென் இயேசுவுடன்
நேசரென்னை மீட்டார் (மும்முறை)
விண்ணிலிருப்பேனென் இயேசுவுடன்
நேசரென்னை மீட்டார் —ஆழ

3 என்னை மறந்து என் இயேசுவினுள்
அன்பில் நிலைத்திட என்றென்றைக்கும்
என்றுமவர் மகிமை கண்டிட
இயேசுவென்னை மீட்டார் (மும்முறை)
என்றுமவர் மகிமை கண்டிட
இயேசுவென்னை மீட்டார் —ஆழ

4 மங்கா மகிமையிற் பங்கு பெற்று
நீங்குமுலகினில் இன்பம் விட்டு
நீதியும் வல்லமையும் தரித்தால்
மறு ரூபமாகிடும் (மும்முறை)
நீதியும் வல்லமையும் தரித்தால்
மறு ரூபமாகிவிடும் —ஆழ

5 என்னை சிநேகித்துத் தன் ஜீவன்விட்ட
மன்னன் இயேசுவின் மகிமை கண்டு
என்றென்றுமே ஆனந்தம் கொண்டிட
உன்னத பெலனீந்தார் (மும்முறை)
என்றென்றுமே ஆனந்தம் கொண்டிட
உன்னத பெலனீந்தார் —ஆழ

---

94 சீயோனின் சிகரம்

பல்லவி

சீயோனின் சிகரம் மீதினிலே
சீக்கிரம் கீதம் பாடிடலாம்

சரணங்கள்

1 இன்னல்களின்றியே இன்பமுடன்
மண்ணினின்று மீட்கப்பட்டோருடன்
என்றென்றும் மகிழ் கொண்டிடுவோம் —சீயோ

2 தேவாட்டுக் குட்டியின் அண்டையிலே
ஏராளமான அக்கூட்டத்திலே
ஏழைகள் நாமும் சேர்ந்திடவோ —சீயோ

3 இச்சையினால் கறை பட்டிடாமல்
அச்சத்தினாலன்பை விட்டிடாமல்
உச்சிதமாக உள்ளவர்க்கு —சீயோ

4 கற்ற கவிகளைக் கேட்பதில்லை
பற்றறுத்திடாதோ ரங்கேயில்லை
கபட முள்ளவர் நிற்பதில்லை —சீயோ

5 ஆட்டுக்குட்டியோடு நாட்டமுடன்
பாட்டுகள்பாடிக் கொண்டாட்டமுடன்
வாட்டமின்றியே வாழ்ந்திடலாம் —சீயோ

---

95 நாதனேசுவே வாரும்

பல்லவி

நாதனேசுவே இங்கு வருவீர்
ஆதாரம் நீரே ஆசிகள் தருவீர் —நாதன்

சரணங்கள்

1 பாதத்தில் வந்தோம் பணிவுடனே
காதலித் தெம்மைக் கனிவுடனே
ஆதரிப்பீரே ஆ, அன்பின் அகமே —நாதன்

2 நித்திய பரனே நின் சித்தமதை
இத்தினமுமெங்கள் இதயமதில்
சித்தம் வைத்தெமக்கு விள் தரிப்பீரே —நாதன்

3 ஐங்காய ஊற்றிலிவ் வடியவரை
அங்கம் ஆத்துமா ஆவியிலும்
துங்கமதாக்க முற்றிலும் தோயும் —நாதன்

4 சத்திய ஆவி ஆனவரை
சித்தங் கொண்டெமது மத்தியிலே
சத்திய மதனை சாற்றிடவருளும் —நாதன்

5 குத்து விளக்கின் மத்தியிலே
சுற்றி உலாவும் உத்தமனே
அற்புதங்கள் வழங்கிடச் செய்யும் —நாதன்

---

96 வழி நடத்த வல்லவர்

பல்லவி

பலமளித் தெம்மைப் புது வழிகளில் நடத்திட
தாரகம் நீரல்லவோ —பல

அநுபல்லவி

தாரணியிலெமக்குத் தயைபுரிந்திடும் இயேசு
நாயகன் நீரல்லவோ —பல

சரணங்கள்

1 இருவரொருமித் தென்னை வரவழைத்திடில் திரு
சமுக மளிப்பே னென்றீரே
நீரன்றி எமக்கேது வீரமுலகிலுண்டு
விரைந்து எழுந்திடு வீரே —பல

2 அதிசயமானவர் என்பதுமது பெயர்
அதிசயம் வழங்கச் செய்யுமே
இது சமயமுமது இதயம் விரும்புவதை
இறையே வழங்கச் செய்வீரே —ப

3 பாவிகளுமதண்டை பாவ உணர்வடைந்து
தாகமுடனடைந்திட
நாவினறிக்கையினுல் நவீன இதயம்பெற்று
நசரேயனைப் பின் சென்றிட —பல

4 கலங்காதே சிறு மந்தையே என்று நல்லுரை
பலமாயுரைக்க வேணுமே
நலமெனக்காண்பதை நமது மத்தியில் செய்து
அலகை அடக்க வேணுமே —பல

5 வழி நடத்திட எம்மை வல்லமை யுள்ளவரே
ஒளியாக முன் நடவுமே
விழிப்புடனேயிருந்து திரும்பி நீர் வரும்போது
களித்திட எம்மைக் காருமே

---

97 இயேசுவின் பிறப்பு

பல்லவி

வானத்தில் தூதர்கள் கூடுவதேனே?
வானவ ரொருமித்துப் பாடுவதேனே?

அனுபல்லவி

வானது மகிமையாய்த் தோணுவதேனே?
வான தூதன் செய்தி பகருவதேனே? —வான

சரணங்கள்

1 பாவிகள் நேசரும் பகை யென்று மகல
தாவீதின் ஊர்தனில் ஜெனித்தவன் செயலை
காசினியில் வாசம் செய்திடும் சகல
ஜாதிகளுமறிந் தானந்த முறவே. —வான

2 மந்தையைக் காத்தவர் மனமகிழ்வோடே
விந்தையைப் பார்க்க விரைந்துமே நாட
கந்தையில் சுற்றின காட்சியைக் காண
சுந்தர மைந்தனைக் குனிந்து கும்பிட —வான

3 மாளிகை மீதுள்ளோர் மனமது வாட
தாழ்மை யுள்ளோரகம் மகிழ்ந்து கொண்டாட
வாழ்ந்திடுவோர் தொனி வானிலெட்டிடவே
மலினமற்றோர் மனுவடிவில் வந்திடவே. —வான

4 அந்நிய ஜாதியை அரவணைத்திடவே
அந்நியன் போல் பரன் அவதரித்தாரே
இந்நில மீதினில் இன்னலுற்றிடவே
விண்ணதின் சுகமதை விலக்கி விட்டாரே. —வான

5 மண்ணதிலே சமாதான முண்டாக
உன்னத தேவனுக்கு மகிமை யுண்டாக
மனிதரின் மீதிலே பிரியமுண்டாக
கனிவுடன் பார்தனிலே மகவானார். —வான

---

98 அல்லேலூயா இயேசு நாதனுக்கு.

பல்லவி

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா
இயேசு நாதனுக்கே.

சரணங்கள்

1 அல்பகல் ஆர்ப்பரித்து, எமதாண்டவ ரடிபணிந்து
எல்லையில்லாத் துதி என்றைக்கும் சாற்றியே
ஏகனையே துதிப்பேரம். —அல்லே

2 பாவங்கள் பரிகரித்து, ஆவலோடெம்மை அரவணைத்து
தாபரமான இம்மானுவேலனையே
தயவுடன் ஸ்தோத்திரிப்போம் —அல்லே

3 நடுச்சுவரைத் தகர்த்து, அன்பிலெடுத்தெமையே பிடித்து
நடத்திட நமக்கொரு நாயகனான
நாதனை ஸ்தோத்திரிப்போம். —அல்லே

4 நித்திய பாக்கியமே, நின்மலன் நமக்கீந்ததுமே
நித்திய அன்பதை நீசரில் வைத்ததால்
நித்தியம் ஸ்தோத்திரிப்போம். —அல்லே

5 அசையாத ராஜ்ஜியமே, நமக்கன்புடனுபத்தமாய்
நசரேயனுரைப்படி நாமுமடைந்துமே
ராசனை ஸ்தோத்திரிப்போம் —அல்லே

6 மகிமையின் சாயலுடன், நாமனைவரும் வாழ்ந்திடுவோம்
அகமகிழ் வோடங்கு ஆராப்பரிப்போமே
மகிபனை ஸ்தோத்திரிப்போம் —அல்லே

7 பொற்தள வீதிதனில் உள்ள சுத்த மகிமைதனை
சுற்றி நடந்துமே உற்றிடும் வேளை
கொற்றவனைத் துதிப்போம். —அல்லே

---

99 புண்ணியனைப் புகழ்வோம்.

பல்லவி

பூதலத்தில் புண்ணியனைப் புகழ்வோம்
பாது காத்த தயவிலகமகிழ்வோம்—இவ்வருடம்

அநுபல்லவி

சூதுகட் கிரையாகி விடாயலே
சூட்சி செய்தாரே
காதலித்தெமைக் கண்மணி போலவே —பூத

சரணங்கள்

1 மேதினியில் மேன்மை கனமவர்க்கே
பேதைகட்குப் பேருதவி அவரே—எந்நாளும்
சோதனைகளிற் சோர்ந்து விடாமலே
ஆதரவானார்
நாதனேசு அடைக்கலமாயினார் —பூத

2 மாநிலத்தில் மகிமையவர்க் குரிமை
மனமுவந்து சாற்றுதலே இனிமை—என்றுமே
பாதகர்க் கருள் பரமனளித்திட
பாக்கியம் பெற்றோம்
காதல் கொண்டது மற்புதமானது —பூத

3 நானிலத்தில் நவ வருடமிதிலும்
சாதித்தியம் தந்து நடத்திடுவார்—சந்ததம்
வான மண்டல மீதிலிருந்திடும்
வல்லமையான
வான சேனைகள் சேவை புரிந்திடும் —பூத

4 மன்னவனே முன்னணியில் நின்று
அன்னவர் உமதடி பின் சென்று—அன்பினால்
இன்னமுமுப தீவுகள் பெற்றுமே
இன்பமுற்றுமே
பின்னிடாது பிழைத்திடச் செய்யுமே —பூத

5 கன்மலையும் கோட்டையு மாகினீர்
கண்மணிபோல் காத்திடுவதும் நீர்—கருத்தாய்
வன்மை வானிலும் பூவிலும் நீரன்றி
அடியவர்க்கேது
அண்டி வந்திடும் வல்லவர் வேறில்லை —பூத

---

100 நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்

பல்லவி

நேற்று மின்று மென்றும் மாறிடாத நல்ல
இயேசு மகேசனே வாரும்

அனுபல்லவி

வேற்றுமைக ளொன்றும் வேந்தனும்மிலில்லை
தேற்றியாதரித்துத் தேவையான வரம் தாரும் —நேற்று

சரணங்கள்

1 கல்வாரியின் பலன் கள்வன் பெற்றதுபோல்
பல்லாயிரம் பேருக் கருள்வீர்
நல்லவர் நீரன்றி இல்லை இவ்வுலகில்
கல்லிதயங்களும் கரைந்து கண்ணீர்விட வருவீர் —நேற்று

2 தீமையான கொடும் ரோகம் யாவதுமே
இமைப் பொழுதிலே யிங்குதீர
ஈசனே யுமது வீசும் புயமுடனே
நீசரெமதண்டை நீண்ட கரமுடன் வருவீர் —நேற்று

3 இயேசுவென்னும் நாமம் நீசரெங்கள் மூலம்
தேசமெங்கும் ஜெயம் பெறவே
பேய் பிசாசுகளும் நோய்கள் சாபங்களும்
இயேசு வென்னும் நாமம் கேட்டமாத்திரத்திலறவே—நேற்று

4 வான உலகத்தின் சேனைகளனைத்தும்
தாமே கண்டதிசயிக்க
வானவனே யுமது ஞானங்கள் முழுதும்
தானமாக நமக்கீந்து ஆதரித்து பெருக்க —நேற்று

5 நித்தியத்திலுள்ள நித்திய தனங்கள்
நிச்சயம் நமக்கருள
புத்திரருமானல் சுதந்தாருமென்று
சத்திய வசனம் கர்த்தரும் மலர்ந்தருள —நேற்று

---

101 மணமக்களை ஆசீர்வதியும்

பல்லவி

இயேசு மணவாளனே நேசமணர்க்கியுமே
ஆசிகளிந்நேர மிதிலே—தாசரின் புகலிடமே

அனுபல்லவி

காசினியின் மீதிலே வாசம் செய்யும் காலமே
நேசமுடன் வாழ்ந்திடவே —இயேசு

சரணங்கள்

1 வாருமிந்த நேரமே வல்லமையின் நாதனே
மாறாத பரம்பொருளே—ஆருயிரிவர்க்கு நீரே
பாருமிந்த நேரமே பட்சமுடனப்பனே
ஆறாக அருள் பாயவே இயேசு

2 கானாவி னூரிலே கலியாண வீட்டிலே
தானங்களைத் தந்தருளியே—விந்தை விளங்கச் செய்தீரே
வானவனே யிந்த மணம் மீதினிலே வந்துமே
ஞானவும் அருள் தாருமே இயேசு

3 இன்பப் பெருக்கிலும் துன்ப துக்கத்திலும்
ஒன்றாக வாழ்ந்திடவே—இன்றே யாசீர்வதியுமே
அன்பின் பெருக்கமே என்றும் விளங்கவே
அன்பே அருள் புரிவீரே இயேசு

4 சத்தியமும் ஜீவனும் உத்தமத்தின் வழியும்
பக்தியுடனே தொடர்ந்து—சத்தியம் நிலை நிறுத்த
சுத்த ஜீவியத்தில் சித்தமுமே நடந்து
துத்தியம் பாடிடவே. இயேசு

5 பலமாய் படர்ந்திடும் உலகில் சுடர்களாய்
வாழ்நாளில் வாழ்ந்திடவே—நாதா அருள் புரியுமே
சகலமு முமக்கே சதா காலங்களிலும்
ஜெகமதில் தந்து போற்றவே இயேசு

102 ஆயுள் முழுவதும் துதிப்பேன்

பல்லவி

என் ஆயுள் முழுவதும் நானே
என் தேவனை துதிப்பேனே

சரணங்கள்

1 ஏழையை நினைத்து ஜெபமதைக் கேட்டு அழிவின்றி மீட்டதி[னால்
எழுந்த எல்லா பயங்களு மகற்றி எளிதாகக் காத்ததினால் —என்

2 திடமுள்ள மனதாய் திருமுகம் பார்த்தோர் பிரபை[யடைந்திடுவார்
தினமுமவர் முகங்களை வெட்கமடையாது காத்திடுவார் —என்

3 பரிசுத்த தூதன் பாளைய மிறங்கி பயமின்றிக் காத்திடவே
பாரிலெம்மை அணுகிடும் இடுக்கண் இடமின்றி ஓடிடவே—என்

4 சிங்கத்தின் குட்டிகள் தாழ்ச்சியடைந்து ஜீவனற்றிருந்திடுமே
ஜீவனுள்ள தேவ தாசர்க்கு நன்மைகள் நிறைந்திடுமே —என்

5 நொறுங்குண்ட இருதயமுள்ள வரண்டை இடையின்றி
[வசித்திடுவார்
நருங்குண்ட இதயங்களுள்ளோரை ரட்சித்துக் காத்திடுவார்-என்

6 நீதிமானின் துன்பங்களதிகம் நிலையில்லா உலகத்திலே
நீதிபரர் அவைகளிலவனை அழியாது விடுவிப்பாரே —என்

7 எலும்புகள் ஒன்றும் முறிய விடாது ஏந்தியே காத்திடுவார்
நம்புமடியாரில் குற்றம் சுமராது காத்திடுவார் —என்

---

103 இயேசுவின் சிந்தை

பல்லவி

இயேசுவின் சிந்தையைத் தரிப்போம்
நேசமோட வரன்பில் களிப்போம்

சரணங்கள்

1 சுத்த இதயத்தை சுதந்தர மாக்கி
நித்திய வாழ்வதை நினைவதிலாக்கி
சத்தியவேதம் சர் வாயுத மாக்கி
கர்த்தரைப் பார்த்து நடப்போம் —இயேசுவின்

2 கஷ்டங் களெல்லாம் கர்த்தருக்காக
நஷ்டமென்றே யுணராதவராக
கனமகிமை உண்டு பண்ணுதற்காக
மனமடிவின்றி நடப்போம் —இயேசுவின்

3 பொறுமையில்லாதவர் முறுமுறுத்தாலும்
உரிமை யில்லை யென வெறுத்து விட்டாலும்
சிலுவையின் பாடுகள் சகித்தவர் போல
சினமடையாது நடப்போம் —இயேசுவின்

4 கள்ளச் சகோதரர் கலக்கிடும் போதும்
சொல்லாதவைகளைச் சுமத்திடும் போதும்
அல்லலின் மேல் அல்லல் அணுகிடும் போதும்
சொல் தவறுது நடப்போம் —இயேசுவின்

5 பதிலுக்குப் பதில் செய்யாமலிருந்து
நிந்திப்பவர்க்காய் நிதமும் ஜெபித்து
சபித் திடும் சத்துருக்களை ஆசீர் வதித்து
பிதாவைப் போலாகக் கடவோம் —இயேசுவின்

6 மூல உபதேசங்களைக் கடந்து
உலகத்தின் வேஷத்தை மனமுவந்தறுத்து
நலமெனக்காண் பதை நாடோறுமுணர்ந்து
பூரணராகக் கடவோம் —இயேசுவின்

---

104 கிறிஸ்துவின் தாழ்மை

பல்லவி

தூதர்கள் பாடுவதேனோ?—இந்த
வேளையில் நாதங்கள் ஏனோ? தேவ

அனுபல்லவி

புவியெங்கும் மகிமை காட்சியிதருமை
மாட்சிமையாமிது வானோர்க்கும் இனிமை —தூதர்

சரணங்கள்

1 பூமியிலே சமாதானம்—இந்த
புல்லரின் மீதினில் பிரியம்—என்றும்
உதித்தனர் இன்றும் புதியதோர் பாலன்
ஜெனித்தனர் தீர்த்திட தேசத்தின் சாபம் —தூதர்

2 கந்தைத் துணியிலே தூங்கும்—மாட்டு
மந்தையின் மத்தியில் தங்கும்—சுதன்
சுந்தரப்பாலன் ஏங்குவ தேனோ
விந்தையாம் இவர்க் கிந்தப் பாட்டுகள் ஏனோ —தூதர்

3 உலகத்தின் மீட்பருக் கிடமோ—குடில்
வல்ல தேவனுக் கிது தகுமோ—இந்த
சொல்லுதற்கரிய அன்பிது வலிதே
பொல்லாங்கராம் நம்மில் அன்புதான்—பெரிதே —தூதர்

4 அடிமையின் ரூபமிதேனோ—எமை
ஆட்கொள்ள வந்ததினாலோ—இந்த
படிமிசை எவரும் பகருதற்கரிதே
பாதகரா மெமக் காயிந்தப் பாடோ —தூதர்

5 அதிசய மானவர்தானோ—எமக்
காலோசனைக் கர்த்தராமோ—இவர்
வல்லமைத் தேவனோ புல்லணை மீதிலோ
சொல்லரும் சமாதானமீய வந்தாரோ —தூதர்

---

105 துதிக்குப் பாத்திரர்

பல்லவி

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்

அனுபல்லவி

காத்தீரே என்னைக் கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் எனையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக —ஸ்தோ

சரணங்கள்

1 வல்ல வான ஞான விநோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறைவும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலைந்த எனையும் மீட்டீரே! —ஸ்தோ

2 நம்பினோரைக் காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவியாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க்குந்தன் தயவாலே! —ஸ்தோ

3 கண்ணின் மணிபோல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே
மன்னு எமக்கும் நீர்தானே
எந்நாளும் எங்கள் துணை நீரே! —ஸ்தோ

4 தீயோன் அம்புகள் தாக்காதே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன்
தேவே நீர் உந்தன் சிறகாலே
தினமும் மூடிக்காத்தீரே
தீதணுகாதும் மறைவினிலே
தேடியுமதடி தங்கிடுவேன் —ஸ்தோ

5 அல்லேலூயா தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியா திருப்பேனோ?
அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையே துதித்திடுவேன் —ஸ்தோ

---

106 நேசரைப் பார்ப்பேன்

பல்லவி

பார்ப் பேனே என் நேசரை நான்
ஆர்ப்பரிப்பேன் நானு மந்நாள்

அனுபல்லவி

தீர்த்தார் என் கண்ணீர்கள் யாவும்
சாற்றுவேன் நான் துதியே துதியே —பார்

சரணங்கள்

1 பாரில் எந்தன் பாவம் தீர்த்தார்
பரத்தில் எந்தன் ஆவல் தீர்ப்பார்
அகத்திலே சந்தோஷ மளித்தார்
இகத்தி லென்றும் துதியே துதியே —பார்

2 ஆயிரங்களிற் சிறந்தோர்
ஆத்துமாவின் நேசரவர்
ஆபத்திலென் தோழனவர்
நாமத்திற்கே துதியே துதியே —பார்

3 எண்ணிறந்த தூதர் கூட்டம்
விண்ணினின்று போற்றும் நாளில்
அண்ணல் யேசின் அடிபணிந்து
பணிந்து செல்வேன் துதியே துதியே —பார்

4 மண்ணின் சாயல் மாறியானும்
மகிமை யேறி மாசற்றோனாய்
மன்னனோடு மணவறையில்
மகிழ்வேன் என்றும் துதியே துதியே —பார்

107 அளவற்ற அன்பு

பல்லவி

அன்பே, அன்பே, அன்பே
ஆருயிர் உறவே,
ஆனந்தம் ஆனந்தமே!

சரணங்கள்

1 ஒரு நாளுந் தயை கண்டேனையா
அந்நாளென வெறுத்தேனையா
உம்தயை பெரிதையா—என்மேல்
உம்தயை பெரிதையா! —அன்பே

2 பரலோகத்தின் அருமைப் பொருளே!
நரலோகரி லன்பேனையா?
ஆழம் அறிவேனோ—அன்பின்
ஆழம் அறிவேனோ? —அன்பே

3 அலைந்தேன் பலநாள் உமையு மறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே—எனையும்
அணைத்தீர் அன்பாலே —அன்பே

4 பூலோகத்தின் பொருளின் மகிமை
அழியும் புல்லின் பூவைப்போல்
வாடாதே ஐயா—அன்பு
வாடாதே ஐயா —அன்பே

5 இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற் கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ—பரத்தில்
இசைக்கவும் எளிதாமோ? —அன்பே

---

108 வானில் திருநாள்

பல்லவி

வானிலோர் திருநாள் உண்டே
வானிலோர் திருநாள்

சரணங்கள்

1 வான்முடி மன்னன் தான் வருவாரே அன்றும், அன்றும்
வருவாரே எமக்காறுத லவரே
விரைவோடு செல்லுவோம் ஓரிமைப்பொழுதில்
அரசன் இயேசுடனே—ஆ, ஆ— —வானில்

2 வானம் முழங்குமே புவியதிசயிக்குமே அன்றும், அன்றும்
வருவாரே வெகு சேனைகளுடனே
ஆர்ப்பரித்திடுவோம், ஆனந்தமுறுவோம்
ஆகாயமீதிலே—ஆ, ஆ— —வானில்

3 தூதர்கள் தொனியுடன் நாதங்கள் கேட்குமே
அன்றும், அன்றும்
துதிப்போமே எங்கள் ஆவல்கள் தீர்ந்திட
தூயனைப் போற்றியே கீதங்கள் பாடுவோம்
நேயனைச் சேருவோம்—ஆ, ஆ— —வானில்

4 முண்முடி நமக்காய் அணிந்தவர் திருமுகம்
காண்போம், காண்போம்
காண்போமே நம் நேசரை விரைவில்
கொடிதனில் செல்லுவோம் அவரடி பணிவோம்
அவரையே சேவிப்போம்—ஆ, ஆ— —வானில்

5 ஆனந்தம் முழங்கும் ஆனந்தபுரியில் எங்கும், எங்கும்
துலங்கும் அவர் ஜோதியே அங்கும்
அவர் பெயர் ஓங்குமே அவர் துதி தங்குமே
அன்பரின் நாவிலே - ஆ, ஆ— —வானில்

109 பரிசுத்தமில்லாமல் தரிசிப்பதில்லை

பல்லவி

பரிசுத்தர், பரிசுத்தரே!—பரன்
ஏசுக் கிறிஸ்துவே, ஜீவாதிபதியே!—பரி

அநுபல்லவி

பரிசுத்தமில்லாமல் பராபரனே உமை
தரிசிக்கமாட்டார் ஓர் போதும் ஒருவரும்

சரணங்கள்

1 கிருபாசனப்பதியே-திரு
அருள் தனை ஈந்தெம்மைத் தேற்றியே காத்திடும்
கிருபையினலடியார் உம்மில் நிலைத்திட
கேதமில்லாத நின் தாழ்மையை ஈந்திடும்— —பரி

2 பரிசுத்தர், பரிசுத்தரே!—நீர்
பரிசுத்தரேயெனச் சேராபீன் பாடிடும்
மகிமையால் நிறைந்த இப்பரிசுத்தமாமிதை
மானிடரா மெமக்கீந்திட விரும்பிய— —பரி

3 பாடுகள் சகித்ததினல்—பர
லோகத்தில் சேர நற் பாதையைத் திறந்தீர்
பரிசுத்தமா மலங்கார நல் வஸ்திரம்
பாடுகள் சகித்து நாம் அணிந்திட விரும்பிய— —பரி

4 சமாதான காரணரே!—நம்மில்
ஆவியை யூற்றியே சமாதானமீந்திட்ட
சமாதான நிறைவினல்பரிசுத்தராகிய
கறைதிரையிலா மணவாட்டியை விரும்பிய— —பரி

5 தோத்திரம் தோத்திரமே—தூய
ரூபம் ரமணிய எம் சாயல் நீர் ஏற்றதால்
தோத்திர பாத்திரனே அதிகாலையில்
தூய உம் சமூகத்தில் நான் மகிழ்ந்திடுவேன்— —பரி

110 ஸ்தோத்திரம் பாடிப்போற்றுவேன்

1 தோத்திரம் பாடிப் போற்றவேன்
தோத்திரம் எசு ராஜனுக்கே
ஆதியு மந்தமுமில் லோனே
அரூபனே உமக்கென்றும் ஸ்தோத்திரம்

அல்லேலூயா, அல்—லேலூயா
பொற்கரனே, ஓமேகாவே

2 பொன்னகர் மன்னன் பூவில் வந்தாரே
புல்லணை மீதிலே ஸ்தோத்திரம்
பட்சமுற்று எந்தன் பாரம் தீர்த்த
பெத்தலே வாசனே ஸ்தோத்திரம்
—அல்லே

3 மாயமாம் உலகை மறந்து நானும்
மன்னவா உம்மன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் தாரணியில்
மனுவான அன்புக்காய் ஸ்தோத்திரம்
—அல்லே

4 மங்களமே சீயோன் மணாளா
மாறாத பூரண சீராளா
மங்கிடா நித்ய வாசனே
மாசற்ற அன்புக்காய் ஸ்தோத்திரம்
—அல்லே

5 அமரர் போற்றும் அழகுள்ளோனே
அரூபியே சொரூபியே ஸ்தோத்திரம்
அளியும் ஆதி அன்பையே
வழியில் விரைந்து செல்லவே
—அல்லே

---

111 கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்

பல்லவி

தூயா தூயாவே ஸ்தோத்திரம்
உமக்கென்றும் ஸ்தோத்திரம்
இன்றும் என்றும் ஸ்தோத்திரம்

சரணங்கள்

1 அந்நியனாய் இருந்து,
அன்னையுமை வெறுத்த,
என்னையும் மீட்டீரோ ?
என்னையும் மீட்டீரோ ? -விந்தையாம் விந்தையிதே!- தூயா

2 சுத்திகரித்து என்னை,
தூயனாய் ஆசரிக்க,
சுத்த ஆவி ஈந்தீரோ ?
சுத்த ஆவி ஈந்தீரோ?—அற்புதம், அற்புதமே! —தூயா

3 நோய் பிணி யாவுந்தீர
நேயா உம் ஆதரவாய்
காயங்கள் சகித்தீரோ [வேன் !
காயங்கள் சகித்தீரோ—என் சொல்வேன் நான் என் சொல்

4 ஏன் தான் இவ்வன் பெனக்கோ,
ஏதுமில்லாத என்னில்
என்னதான் கண்டனீரோ ?
என்ன தான் கண்டனீரோ?-அண்ணலே, என் அண்ணலே !

5 வருவீர் எம்மை எடுக்க,
துரையே உம் தாசர்களும்
தரிசிக்க தேவன் முகம்
தரிசிக்க தேவன் முகம்—ஆனந்தம், ஆனந்தமே! —தூயா

6 தோத்திரம் ஏறெடுப்பேன்,
பொங்குதென் பாத்திரமே,
துதியே, துதியுமக்கே
துதியே, துதியுமக்கே—என்றுமே,என்றென்றுமே —தூயா

---

112 இன்பங்கமழ்ந்திட எழுந்திடும்

பல்லவி

அன்பர்கள் ஆ! ஆனந்தங்கொண்டாடவே—இம்மானுவேலே,
இன்பங் கமழ்ந்திட எழுந்திடும்

சரணங்கள்

1 அன்பின் மரு தோன்றியே, எங்குமே கமழ்ந்திட,
மங்கை சீயோன் மகள் வாழ்ந்திட, ஆ, ஆ !
கிறிஸ்துவின் வாசனை ஓங்கிட —அன்பர்

2 யேகோவா ஷாலேமே, இஸ்ரவேலதிபனே,
இஸ்ரவேல் காணியின் பங்கிலே—ஆ, ஆ!
எம்மையுஞ் சேர்த்திட்ட தங்கமே —அன்பர்

3 ஒத்திடத்திரு இரத்தம், மங்கிடத்திரு முகம்
பாதாளத்தை வென்ற வேந்தனே—ஆ, ஆ!
பரிசுத்தவான்களின் சாந்தனே —அன்பர்

4 சாலேம் நகர் வாசனே, கீதங்களின் ராஜனே,
சாட்சிக்கூடாரத்தின் ஆசனே—ஆ, ஆ!
மோட்சத்தில் எங்களைச் சேர்ப்போனே —அன்பர்

5 அல்லேலூயா தோத்திரம் ஆனந்தத்தின் தூபமே
அன்பருக்கென்றென்றும் சாற்றுவோம்—ஆ, ஆ!
அற்புத சீயோனில் வாழ்ந்து நாம் —அன்பர்

113 கிறிஸ்துவின் பிறப்பு

பல்லவி

மா, மகத்வம் தேவனுக்கே,
மண்ணிலே சமாதானமே,
மனுஷரில் என்றும் பிரியமே.

சரணங்கள்

1 ஆதியுமானவர், அரும்பெரும் தேவனும்
மனுவுருவாகவே வந்தாரே
ஆதி ஜோதியான மாமணி —மா

2 உதித்தாரே பாலனுய், உரைத்த முன் சொல்படி
சிறியதோர் பெத்லகேம் ஊரிலே.
உண்மை வாய்ந்த தேவனவர் —மா

3 கந்தைத் துணியுமாய், ஆதரவற்றோராய்
ஆகுடில் வாடியில் தங்கினர்.
சொந்தமான யாருமற்றோராய் —மா

4 நல்லதோர் செய்தியாம், பாரினில் யாவர்க்கும்
வல்லதோர் மீட்பரே தோன்றினர்
எல்லையில்லா நல்ல செய்தியாம் —மா

...ESWARA PUBLIC LIBRA...

5 ஜெயஞ் சிறந்தோங்குமே, இயேசுவின் நாமத்தில்
பேயையும் வென்றாரே வேந்தனார்
ஜே, ஜே, ஜெயம், எங்குமே —மா

---

114 இளைப்பாறுதல்

1 நான் ப்ரமித்து நின்று, பேரன்பின்
ப்ரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்;
என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்.

பல்லவி

மா தூய உதிரத்தால்,
என்பாவம் நீங்கக் கண்டேன்;
இயேசையரின் ரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்.

2 முள்ளுளில் இவ்வாறுதல் காண,
ஓயாமல் ப்ரயாசப்பட்டேன்;
வீண் முயற்சி நீங்கினபோதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன் —மா தூய

3 தம் கரத்தை என் மீதில் வைத்து
'நீ சொஸ்தமாவாய், என்றனர்;
நான் அவரின் வஸ்திரம் தொட
ஆரோக்கியம் அருளினர் —மா தூய

4 எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்;
தம் முகத்தின் அருள் ப்ரகாசம்
என் பேரிலே வீசச் செய்வார் —மா தூய

---

115 ஜோதி தோன்றும் தேசம்

1 ஜோதி தோன்றும் ஓர் தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும் பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்.

பல்லவி

இன்பராய், ஏற்றிலே, மோட்சகரையில் சந்திப்போம்
இன்பராய், ஏற்றிலே, மோட்சகரையில் சந்திப்போம்.

2 அந்தவான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம் ;
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரின் ஆறுதல் அடைவோம் — இன்ப

3 நம்பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம் — இன்ப

4 அந்த மோட்ச கரை அடைந்து
வான் சேனையுடன் நாம் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண்கிரீடத்தை நாம் தரிப்போம் — இன்ப

5 சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம், பாடுவோம், ஆளுவோம்
துக்கம் நோவழிந்த ஸ்தலத்தில்
க்ஷேமமாய் நாம் இளைப்பாறுவோம் — இன்ப

6 அங்கே நம் ரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார் — இன்ப

7 தூதர் சூழ்ந்து நின்று பாடுவார்
கேட்டு நாம் யாவரும் மகிழ்வோம்
பக்தர் அங்கே முடி சூடுவார்
ஓர் முடி அங்குண்டு எனக்கும் — இன்ப

8 என் உற்றோர் போய்விட்டார் முன் அங்கே
ஆயின் நான் மீளவும் சந்திப்பேன்
அவர் கூட்டத்தில் நான் விண்ணிலே
ஒய்வற்ற பேரின்பம் கொள்ளுவேன் — இன்ப

9 ஏழைக்கும் மாளிகை இங்குண்டு
என்று நல் மீட்பர் அழைக்கிறார்;
மாந்தர் யாவர்க்கும் இடமுண்டு,
எல்லோரும் வாருங்கள் என்கிறார் —இன்ப

116 துன்பப் பெருக்கில் இயேசு

1 அன்பராம் இயேசுவைப் பார்த்துக்கொண்டு
இன்பமாக அவர் பாதை யோட
தாமே, வழியும், சத்தியமும் ஜீவனுமே.

2 துன்பப் பெருக்கிலே சோர்ந்திடாதே
அன்பரறியாமல் வந்திடாதே;
'கண்விழிபோல் நான் காத்திடுவேன்' என்றனரே.

3 முட்செடிபோலப் பற்றிடுமே,
மோசமடையாய் நீ முற்றிலுமே
ஏங்கிடாதே நீ—நேசர் அதில் தோன்றுவாரே.

4 சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடினும்
வியாகுலம் உன்னை விரட்டிடினும்
ஆ! நேசரே தம் இன்ப சத்தம் ஈந்திடுவார்

5 ஈனச்சிலுவையில் ஏறிட்டாரே
உந்தனுக்காய் கஷ்டம் பட்டிட்டாரே
துன்ப மூலமாய் எய்திடுவாய் இன்பக்கானான்.

6 தாழ்மையின் மேன்மை நீ கண்டிடவே
பன்னிரு சீஷர் பாதம் கழுவி;
பாவ உலகில் இஷ்டமில்லை சாய்ந்திடவே.

7 சொந்த ஜீவனை உன்னிலீந்து,
அன்பில் இணைத்தாரே வல்லமையால்
உந்தன் ஜீவனை மற்றோருக்காய் ஈந்திடவே.

8 மாயையான ஈலோக மதில்
மாய்ந்தழியும் இம்மாந்தரன்பு
நேற்று மின்றென்றும் மாறாதவர் நேசர்தானே.

9 வஞ்சனையான இப்பார்தலமே
வஞ்சிக்குமே உனைத் தந்திரமாய் ;—
வாஞ்சித்திடாதே மோசமான இப்பார்தலத்தை.

---

117 சீயோனே விழித்தெழும்பு

பல்லவி

சீயோனே நீ விழித்தெழும்பிடுவாய்
சாலேமின் ராஜனிதோ வருவதால்

அநுபல்லவி

சீலகுணமுள்ள அன்பின் தயாளன்
ஆகாய மீதில் எழுந்திதோ வாரார்! —சீயோனே

சரணங்கள்

1 பூமண்டலங்கள் கிடுகலங்கிடுதே
வான மண்டலங்களும் நடுங்கிடுதே
காலம் இனிஇல்லை யேசுவின் வருகை
கிட்டி நெருங்கி வருவதினாலே —சீயோனே

2 கொலுமண்டபங்கள் திகிலடைந்திடுதே
கொடிய செயல்களும் தோன்றிடுதே
உலகில் சமாதானம் ஒழிந்திடுதே பார்
தேவ சமாதானம் பெற்றிடுவாயே —சீயோனே

3 மாய உலகத்தை வெறுத்துவிட்டால் நீ
மாட்சிதங்கும் நகர் சேரலாமே
மகிமையின் சாயல் அணிந்தவராய் நாம்
மணவாளனோடு ஏகிடுவோமே —சீயோனே

4 பலவித துன்பங்கள் நிறைந்துமே வருதே
காரிருள் நாட்களும் நெருங்கிடுதே
அந்தகாரப்பிரவு வெளியாகுமுன்னே
சந்தோஷ ராஜ்யத்தில் சேர்ந்திடலாம் நாம் —சீயோனே

5 திருச்சபையே உன் தீபங்களெல்லாம்
சூர்யப் பிரபையாய்த் திலங்கட்டுமே
மகிமையின் இரதத்துடன் உதித்திடும்போது
மணவாளனோடு நாம் மறுரூபமாவோம் —சீயோனே

---

118 பரலோக வாஞ்சை

பல்லவி

பரலோக நாடெந்தன் இன்பநாடாமெனக்கு
என்று நான் கண்டு களிப்பேனோ?

அநுபல்லவி

ஆ! மகிமையே! ஆ! பேரின்பமே!
என்று நான் கண்டானந்திப்பேனோ —பரலோக

சரணங்கள்

1 சேவை செய்திடுவார் தூதர்கள்—நானங்கு
சேவிப்பேன் நித்தியம் நேசரை
ஆ! என் இன்பமே! ஆனந்த பாக்கியமே
நாவினாலியம்ப வுமேலாதே —பரலோக

2 சொர்க்கத்தில் ஆ! எந்தன் நம்பிக்கை—அழியாத
சொர்ணமயமான வேலைகள்
சோபனக் கீதமே சுந்தர நாடதே
சுத்தரொருமித்து வாழ்வரே —பரலோக

3 தெய்வ சித்தம் செய்யும் பிள்ளைகள்—ஜீவிப்பார்
மாதா பிதா மற்றும் சோதராய்
உத்தம ஜீவிகள் சொர்க்கத்தின் வாசிகள்
கஷ்டம் சகித்திட்ட சுத்தர்கள் —பரலோக

4 ஏசுவே என் சம்பத்தல்லவோ—நிச்சயம்
என்று மழியா சுதந்தரம்
ஈலோக இன்பத்தைக்குப்பை யென்றெண்ணினேன்
ஏசுவே எந்தனின் இன்பமே —பரலோக

5 வெறுத்திடுவேன் எந்தன் ஜீவனை—லோகத்தில்
செல்லுவேன் கஷ்டத்தின் பாதையில்
மாயை, மாயையே, லோகத்தின் இன்பமே,
வாடா முடி சூட ஏகுவேன் —பரலோக

---

119 ஜெகத்தின் ஜோதி

பல்லவி

ஜெகமதில் உதித்த ஜெயஜோதியே—தேவ
சேயர்கள் துதித்திடும் திருவடியே !

அநுபல்லவி

பாரில் பரனாக நீயே, பாவிகட்காய் பரிவானாய்
அன்பால் என்னை ஆட்கொண்டோனே, அதிரூபசுந்தரனே !

சரணங்கள்

1 பாவயிருள் நீக்கப் பாரினிலே—பரன்
பாவிகள் பாவம் போக்கப் பலியானாரோ ? [திட்டீரோ ?
சாபத்தை முற்றும் தொலைத்திடவே, சக்தியாக உயிர்த்
அரூபா,சொரூபா,அற்புதனே, ஆனந்த பொற்பரனே—ஜெக

2 எந்தனின் நீதியெல்லாம் கந்தையல்லோ—நீர்
எந்தனின் சிறப்பான தாரகமே —[பரனே
அன்பே, ஆனந்தப்பேரொளியே, ஆதியந்தம் இல்லாப்
கதியே, நிதியே, கருணாகரா, காத்திடும் புகலிடமே !—ஜெக

3 ஏழையென்னில் தாகங்கொண்டதாலே—பர
லோகத்தை வெறுத்தெனைத் தேடினீரே
தாக மிஞ்சி வாடுறேனையா, சோகமானேன் இத்தாரணியில்
காசினியில் நேசரைப்போல் காணுவேனோ? கன்னியரின்
காதலரே—ஜெக

4 எப்போ உம்மைக் கண்டு மகிழ்ந்திடுவேன் — அண்ணல்
ஏசுவே இன்பமான மணாளனே [கும்.சத்தம்
கன்மலை வெடிப்பில் தங்குமென் உத்தமியே, யென்றழைக்
கேட்கும்கீதம் ஆ! இன்பமே கூறிடாயோ அன்பரே?—ஜெக

---

120 கிறிஸ்துவின் பாடுகள்

பல்லவி

உமக்கேன் பாடோ, உமக்கேன் பாடோ,
எம்மில் பாசம் வைத்ததினாலோ?

சரணங்கள்

1 பகைவன் எனையே பரனே உமக்காய்
பலியால் வெல்லவுமோ?
பலியால் வெல்லவும் தானோ? —உமக்கேன்

2 ஜனனம் முதலாய் மரணம் வரையும்
கஸ்தி சகித்தீரோ?
கஸ்தி சகித்தீரோ அன்பால்? —உமக்கேன்

3 குரூரவதைகள் அறிந்தும் பரனே
உருகிச் சுமந்தீரோ ?
உருகிச சுமந்தீரோ எனக்காய்? —உமக்கேன்

4 கன்னத்தறையும், காடியுறையும்
கருதி எற்றதேன்?
கருதி எற்றதேனோ ? —உமக்கேன்

5 நேசர் தள்ளவும் நீசர் கொல்லவும்
கொடுத்தீரே உமையே
கொடுத்தீரே உமைத்தானே —உமக்கேன்

6 சுகத்தை யுரிந்தென் அகத்தை வென்ற
ஜெயத்தை மறப்பேனோ?
ஜெயத்தை மறந்திடுவேனோ ? —உமக்கேன்

7 கிரயம் கொடுத்த துரையே கோனே,
உரிமையுமக் கன்றோ ?
உரிமையுமக் கன்றோயான் ? —உமக்கேன்

---

121 கிறிஸ்துவின் தியாகம்

பல்லவி

தியாக மெனக்கோ நாதா ?—என்
ஜீவனின் நாயகா,
ஏழையென் தாரகா, —தியாக

1 அன்பினு லெமைமீட்ப தற்காய்
அன்னை உமை வெறுத்தீர்—என்னையும்
விண்ணில் சேர்க்க எண்ணிக் கொண்டோ
மண்ணு எனைக் கண்டீர் —தியாக

2 பாதகர் பலர் பரிகசிக்க
மௌனமானீரோ?—வீணாய்
வாதினாலே மாறுவோரை
வெல்லும் தயையிதோ? —தியாக

3 சோதனை உம்மைச் சூழும் வேளை
வெறுத்தாரோ சீஷர்?—பாவிக்காய்
கொல்கொதாவில் செல்லும் வேளை
தனிமையானீரோ? —தியாக

4 சாய்க்கவும், தலை வைக்கவுமிடம்
வாய்க்கா தலைவானேன்—தயங்கி
மாயையில் அமிழ்வோரையும்
மார்பில் அணைக்கவோ? —தியாக

5 என்றும் நீர் எம்மைச் சேர்ப்பதற்கோ?
எதுமற்றீரோ?—எந்தையே
இப்பேரன் பிற்கென்ன செய்வேன்?
பேசும் எதும் செய்வேன். —தியாக

---

122 உம்சரண் புகுந்தேன்

பல்லவி

ஏழையை மீட்ட ஏசுவே சுவாமி!
அடிமை சரண் புகுந்தேன்

அனுபல்லவி

நீசனு மென்னைத் தேடினீரோ
காசினியி லன்பு கூர்ந்து

சரணங்கள்

1 எப்பாவம் போக்க எடுத்தீர் இறைவா
ஈனக் கோலமதை
என்ன தானிதற்கிடு செய்குவேன்?
அன்னையே விளம்புவீரே ஏழை

2 தூரமாய்க் கிடந்தே, தொல்லைகளடைந்தேன்,
தூயா உமை மறந்தேன்
தூக்கினீர் என்னைச் சேற்றினின்றே
தேற்றினீரும் மாவியாலே ஏழை

3 விண்ணை நீர் மறந்தீர், விரோதியாமெனையே
விண்ணில் சேர்த்திடவே
வேண்டுதல் கேளும் வேந்தனே
அருள் தேவனே சகாயனே —ஏழை

4 பாவத்தின் கூலி மரணமாம் பயத்தை
ஜெயித்தவர் இயேசு கோமான்
ஜீவனும் சமாதான மீந்து
தேவனின் சமுக மீந்தார் —ஏழை

5 மாயமாம் உலகின் வேஷத்தை வெறுத்தேன்
மன்னு உன் அன்பினாலே
சொன்னீரே மகிமையில் சேர்ப்பதாய்
உன்னதா உம் வாக்கை நம்பி =ஏழை

---

123 தேவனை எக்காலத்திலும் துதிப்பேன்

பல்லவி.

தேவ தயாபரனைத்—துதிப்பதில்
ஓய்வதில்லை இனிமேல்

சரணங்கள்

1 அற்புத கரத்தைக் கொண்டடியாரைக் காத்தணைத்தார்
அனுதினம் சாற்றிடுவேன் அன்பருக்குத் தோத்திரமே-தேவ

2 அண்டி நெருங்கினோரை—இன்று வரையும் தாங்கி
அன்றன்று வேண்டியதை அன்புடன் அளித்து வைத்தார்

3 கண்ணிகளுக்குத் தப்பி கண்மணிபோல என்னை
எண்ணியே ஆதரித்த ஏகனையே தோத்தரிப்பேன் —தேவ

4 அன்னை தந்தையின் மேலாய் ஆதரித்தாரே தாங்கி
என்னைத்'தன் சொந்தமாக ஏற்றுக்கொண்டார்ஸ்தோத்திரமே

5 மன்னவன் இயேசுதாமே மகிமையில் தோன்றுகையில்
மணவாட்டியாக நானும் வானத்திலே சேர்ந்திடுவேன்-தேவ

6 எப்படிப் போற்றுவேனோ என்னரும் நேசரையே
ஏத்தியேஎப்பொழுதும்ஸ்தோத்திரங்கள் ஏறெடுப்பேன்-தேவ

---

124 உமக்கு பதில் என்ன செய்வேன்?

சரணங்கள்

1 என்மேலுள்ள நின் சர்வ நன்மைகட்காக நான்
என்ன செய்வேன் உமக்கென் ஏசுபரா? இப்போ

2 நன்றியால் என்தன் உள்ளம் பொங்கி வழியுதே
இன்று வரையுமெனைக் காத்ததாலே—தேவா

3 பாவத்தினின்று என்தன் ஆவி உயிர்ப்பிக்க
சாப சிக்ஷை சகித்த தேவசுதா—மகா

4 என்னை அனுதினம் அன்போடு நடத்திடும்
பொன்னேசுவே அனந்தம் ஸ்தோத்திரமே—என்தன்

5 முற்று முடிய எனைக்காத்து நடத்திடச்
சத்துவமீந்திடும் நல் நண்பன் நீரே—திருச்

6 தாதன் வலப்புறத்தில் நாதன் நீர் ஏழைக்காய்
பாதம் வேண்டியே நிற்கும் பாக்கியனே—பொன்னின்

7 குற்றம் குறைகளின்றிக் கோதில்லா ஜோதியில்
முற்றும் எனை நிறுத்த வல்லவனே—தேவா

8 இன்னிலம் தன்னிலேழை தங்கிடும் நாளெல்லாம்
எத்துவேனே உன் திருநாமமதை—ஏழை

125 ஸ்தோத்திர பலி

பல்லவி

ஸ்தோத்திரப் பலியதைச் செலுத்துவோம்
ஆத்துமாவின் நேசரைப்புகழ்த்துவோம்.

அநுபல்லவி

புனிதமாய்—புனிதமாய்
கனிவுடன் கரமுயர்த்திக் கர்த்தனே உயர்த்துவோம் —ஸ்தோ

சரணங்கள்

1 உதட்டின் காளை உன்னதர்க் களிக்கிறோம்
உத்தம இருதயம் படைக்கிறோம்
முற்றுமே—முற்றுமே
குற்ற மற்ற தாக்க எம்மைச் சுத்தமாக்க வைக்கிறோம்-ஸ்தோ

2 பங்கமின்றி தாசரெம்மைக்காத்ததால்
துங்கனேசு தூய்மை நமக் கீந்ததால்
மகிமையே — மகிமையே
நீங்கிடாதிருந்து நம்மைத் தீங்கினின்று மீட்டதால் -ஸ்தோ

3 பரிசுத்தம் செய்யும் பலி ஆயினர்
தரிசிக்கத் தம்மை வழி காட்டினர்
கனிவுடன்—கனிவுடன்
பாரிசத்திருந் தெமக்காய்ப் பரிந்து பேசுகிறார் —ஸ்தோ

4 சீயோனில் துதிகளைத் திரட்டுவோம்
தீயோனின் மதில்களைப் புரட்டுவோம்
தீரமுடன்—தீரமுடன்
லேகியோன் படைகளை எதிர்த்து நின்று வாட்டுவோம்-ஸ்தோ

5 ஓய்விலாத ஸ்தோத்திரங்கள் சாற்றியே
பொய் பிசாசின் ஆஸ்திரங்களழித்துமே
தூயனே— தூயனே
தூய்மையுடன் போற்றிச் சுவிசேஷமதைச் சாற்றுவோம் -ஸ

126 ஆதிச்சபையின் எழுப்புதல்

கண்ணிகள்

1 ஆதிச் சபையின் ஆவியினெழுப்புதலருளிடுமே
ஆதியந்தமில்லா நாதனே யிவ்வேளை
மாரியாக அருள் சொரிந்திடுமே
காதலுடனே பாரினிலும்மை
பேதங்களின்றிப் பின் செல்ல —அப்போஸ்தல

2 அற்புதங்கள் அடையாளங்களுமே நடக்க
நற்பரனே யுந்தன் புத்திரர்களிடை
கற்புத் தவறுமலே துலங்க
அற்புதமான நற்சுதன் நாமத்தில்
கற்பிக்கும் யாவும் நிகழ —அப்போஸ்தல

3 தன்னயமான துன்மார்க்க மனைத்துமிச் சணமகற்றி
கன்மலையே யும்மில் நல்ல நீர் பருகி
வன்மையுடனே நாம் வாழ்ந்திடவே
உன்னத தேவா இந்நேரம் இரங்கி
உள்ளங்கள் உய்திடுமே —அப்போஸ்தல

4 பாரிலெங்கும் பரிசுத்தரொன்ருய்க் கூடி மகிழ்வுடனே
கூறியும் மகிமை தூயனைப் புவியே
ஆதியன்ப கத்தில் அனல் கொள்ளவே
போதனைகளைச் சாதனை செய்ய
சூதுகளகற்றும் சுடரே —அப்போஸ்தல

5 இறையே யுமது மறையைத் துலக்கவே வருக
நீருளும் ஞானம் வீரமுள்ள ஆவி
சீரடைந்து தேவ சபை ஓங்கிட
திரை கறை யின்றி வரவில் முன் நிற்க
குறைகளகற்றி விடுக —அப்போஸ்தல

127 எங்கேயும் எப்போதும் பின்செல்வேன் (E. 44)

1 பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்,
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்,
இயேசுநாதர் பின்சென்றேகி மோட்சம் நாடுவேன்,
விண்ணில் சூடும் க்ரீடம் நோக்கி ஓடுவேன்.

பல்லவி

பின்செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே!
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்;
பின்செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே!
இயேசு காட்டும் பாதையெல்லாம் செல்லுவேன்.

2 கார்மேகம் மேலே மூடும் பள்ளமென்கிலும்,
காற்றகோரமாக மோதும் ஸ்தானத்திலும்,
இயேசு பாதை காட்டச் சற்றும், அஞ்சவேமாட்டேன்;
ரட்சகர் கை தாங்கத் தைரியம் கொள்ளுவேன்.

3 நாள்தோறும் இயேசுநாதர் கிட்டச் சேருவேன்,
மேடானாலும் காடானாலும் பின்னே செல்லுவேன்;
மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்
விண்ணில் தாசரோடு சேர்த்து வாழ்விப்பார்.

---

128 அருளின் மாமழை (E. 45)

1 "அருளின் மாமழை பெய்யும்"! என்று வாக்களித்தோரே!
மாரியாய்ப் பெய்திடச் செய்யும். லோகத்தின் ரக்ஷகரே!

பல்லவி

தேவன்பின் வெள்ளம், தேவன்பின் வெள்ளந் தேவை
கொஞ்சம் ருசித்த என்னுள்ளம், கெஞ்சுதே இன்னுந் தேவை.

2 கற்பாறைபோல் பாவி உள்ளம், கடினப்பட்டதய்யோ!
பரிசுத்தாவியின் வெள்ளம், கரைக்க வல்லதையே!

3 "வெட்டாந்தரை நிலந்தானும், ஏதேன்போல்மாறும்" என்றீர்
சாபத்துள்ளான முட்பூண்டும், கேதுருவாகும்" என்றீர்

4 தேசத்தின் இருளைப்பாரும், லோகத்தின் மெய்த்தீபமே
ஆவியின் அருளைத்தாரும், மனம் மாற்ற வல்லவரே.

5 ஏழை என்குறைகள் யாவும், தீர்த்திடும் வல்லவரே
யுத்தத்தில் முன்செல்ல ஏவும் சேனைத் தளகர்த்தரே!

---

129 இயேசு என் நேசர் (E. 46)

1 அன்புள்ள நேசர் இயேசு, எனக்கெல்லாம் அவரே,
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்.
அவர் பள்ளத்தாக்கின் லீலி எனக்கெல்லாம் அவரே,
என் ஆத்துமத்தின் பிராணநாயகர்,
துக்கத்தில் என் ஆறுதல் துன்பத்தில் எனதின்பம்.
என் கவலையை யெல்லாம் தாங்குவார்.

பல்லவி

அவர் பள்ளத்தாக்கின் லீலி!
அவர் காலை விடி வெள்ளி!
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்!

2 என் சஞ்சலங்கள் நீங்க என்பாவம் மா அன்பாய்,
சுமந்து, அவர் ஜீவனை விட்டார்,
நான் யாவையும் வெறுத்தேன் என்நேச மீட்பருக்காய்,
அவர் ஒருபோதும் கைவிடமாட்டார்;
லோகம் என்னை வெறுத்து சாத்தான் சோதித்தாலும்,
மீட்பர் எனக்கு ஜெயந் தருவார்.

3 கர்த்தாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படிவேனானல்,
எல்லாத் துன்பத்தையும் சகிப்பேன்
எனக்குப் பயமென்ன? அவர் என்பங்கானால்
என் ஆத்துமத்தின் மன்னா இவரே!
ஜீவ நதிகள் பாயும், சொர்க்கத்தைச் சேர்ந்திட
அவர் திருமுகத்தை நான் காண்பேன்.—

---

130 வெட்கப்பட்டுப் போவேனே? (E. 47)

1 கரை ஏறி உமதண்டை—நிற்கும்போது, ரக்ஷகா!
உதவாமல் பலனற்று, வெட்கப்பட்டுப் போவேனே?

பல்லவி

ஆத்மா ஒன்றும் ரக்ஷிக்காமல், வெட்கத்தோடே ஆண்டவா!
வெறுங் கையனாக உம்மைக் கண்டுகொள்ளல் ஆகுமா?

2 ஆத்துமாக்கள் பேரில்வாஞ்சை—வைத்திராமல் சோம்பலாய்க்
காலங்கழித்தோர் அந்நாளில்—துக்கிப்பார் நிர்ப்பந்தராய்.

3 தேவரீர் கைதாங்க, சற்றும்—சாவுக்கஞ்சிக் கலங்கேன்;
ஆயினும் நான் பலன் காண—உழைக்காமற் போயினேன்!

4 வாணாள் எல்லாம் வீணாளாக சென்று போயிற்றே! ஐயோ
மோசம் போனேன்! விட்டநன்மை அழுதாலும் வருமோ?

---

131 தீரமாய்ச் செல்வோம் (E. 48)

1 வீர தீரமாய், நேரும் சீருமாய்
நின்று ஏகமாய் போர் செய்வோம்;
பயமின்றியும், பின்வாங்காமலும்,
கீதம் பாடியும், முன் செல்லுவோம்.

சோம்பும் சோர்வும் நீக்கி வீரராக
யாரும், வாரும், யுத்தம் பண்ணுவோம்;
செல்லும், வெல்லும், ஆரவாரமாக
இயேசுநாதர் நம்பிப் போகிறோம்.

2 கொடி ஏற்றுவோம், எக்காளம் ஊதுவோம்,
வாளும் வீசுவோம், போர்க்கோலமாய்;
கர்த்தர் தாங்குவார், கூடப்போகிறார்
வெற்றி சிறப்பார் கெம்பீரமாய்.

3 சேனைகர்த்தரே! இயேசுநாதரே!
தேவரீரையே ஸ்தோத்திரிப்போம்;
உம்மால் வல்லமை உம்மால் மகிமை,
உம்மால் வெற்றியும், கண்டடைவோம்.

132 தேவனைத் துதியுங்கள்

பல்லவி

தேவனைத் துதியுங்கள்—எப்பொழுதும்
தேவனைத் துதியுங்கள்—ஆ—ஆ

சரணங்கள்

1 அவர் வல்லமை விளங்கும் ஆகாய விரிவை
பார்த்துத் துதித்திடுங்கள்—ஆ—ஆ —எப்

2 அவர் வல்லமையாயுள்ள கிரியைகட்காக
அவரைத் துதித்திடுங்கள்—ஆ—ஆ —எப்

3 மாட்சிமையான மகத்வத்திற்காக
அவரைத் துதித்திடுங்கள்—ஆ—ஆ —எப்

4 எக்காளத் தொனியுடன் அவரைத் துதியுங்கள்
வீணை சுரத்துடனே—ஆ—ஆ —எப்

5 தம்புரு நடனத்தோடும் துதியுங்கள்,
யாழும் தீங்குழலோடும்—ஆ—ஆ —எப்

6 ஓசை கைத்தாளங்களோடும் துதியுங்கள்
பேரோசை கைத்தாளத்தோடும் ஆ—ஆ —எப்

7 சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதியுங்கள்
அல்லேலூயா ஆமேன் ஆ—ஆ —எப்

---

133 உம் சேவையே என் ஆசை

1 புண்ணியர் புதுமையைத் தேடி, எண்ணி நான் கவிகளைப் பாடி
மண்ணில் வந்தோனை நாடி, விண்ணை விடுத்தோனைக் கூடி
அண்ணலை தோத்தரிப் பேனே, கண்ணியால் மீட்டு
விட்டாரே.

பல்லவி

மகிமை மகிமை மா அருமை
மனுவேலனை என்றும் நானே
மனப்பூர்வமாய்த் துதிப்பேனே.

2 உளையும் சேற்றினிலிறங்கி, அலையும் பாவிகட்கிரங்கி
மலையான பாவங்கள் போக்கி, தொலையாது கரங்களில் தூக்கி
நிலையாக நிறுத்தின தேவா, அனுதினம் துதித்திடுவேனே
—மகிமை

3 பொங்கு தென் பாத்திரமே, மங்களம் சாற்றுவேனே
பங்கம் வராது தெனைக் காத்தீர், எங்கும் புகழ்வேனே சாற்றி
மங்காது தெரிவதால் தீபம், துங்கனைப் பாடுவேன் கீதம்
—மகிமை

4 மேசையா சேவை தானே, ஆசை எந்நாளும் கோனே
நேச வெள்ளம் பெருகுதே, பாச உள்ளம் விரியுதே
தூசி எதைச் செய்குவேனே, நேசரின் பின் செல்வேனே
—மகிமை

5 நித்தம் நித்தம் நித்தியம், உத்தமர் யாவரும் போற்ற
சுத்த தூதருடன் சேர்ந்து, சுத்தர், சுத்தர் என்று சாற்ற
கர்த்தனைப் பாடுவதெவ்விதம், எத்தனை நாவினால் துதிப்பேன்
— மகிமை

---

134 தேவனை உயர்த்தித் துதிப்போம்

பல்லவி

தேவனை உயர்த்தித் துதியுங்கள்
அவர் நாமத்தைப் போற்றியே —தேவனை

அனுபல்லவி

தேவனின் செயல் அதிசயமென்று
அதிசயமென்று சொல்லி —தேவனை

சரணங்கள்

1 கொடியவரின் சீறல் கடுமையாய் வரினும்
திடபலனும் எழைக் கடைக்கலமு மானார்
படும் பலவந்தர் ஆரவாரமென்றும்
ஆரவாரமென்றமே —தேவனை

2 இவரே நம்தேவன் இவர் நம்மை இரட்சித்தார்
இவரின் இரட்சிப்பினால் களி கூர்ந்திடுவோம்
இவர் பகைவனை வென்று கீழ்ப்படுத்தி
வென்று கீழ்ப்படுத்தினார் —தேவனை

3 கர்த்தரையே நம்பி சத்தியம் கைக்கொண்ட
உத்தம ஜாதியே உட் பிரவேசியுங்கள்
பக்தருக்கென்று பலத்த நகரம்
பலத்த நகர முண்டு —தேவனே

4 அந்நியர் ஆள்வதில்லை இந்நிலம் தன்னில் நம்மை
மன்னாதி மன்னனே நம் மன்னனாயிருப்பார்
மன்னரும் தேவ சமாதானம் தங்கும்
சமாதானம் தங்கிடுமே —தேவனே

5 புனிதராய் மரித்தோர் பூரித்தெழும்புவார்
பனிபோல் கிருபையை பக்தரின்மேல் பொழிவார்
இனி உலகத்தில் இன்னல் பெருகிடும்
இன்னல் பெருகிடுமே —தேவனே

6 மறைவிடமு முண்டு மன்னனின் ஜனத்திற்கே
குறை விசாரிக்கும் கோபத்தின் நாளில்லை
அறைக்குள் மறைந்து ஆனந்திக்கும் சபை
ஆனந்திக்கும் சபையே —தேவனே

7 சிறந்த விருந்தொன்று சீயோன் மலையின் மீது
அருந்த யாவருக்கும் ஆயத்தமாக்குவார்
நிந்தையை நீக்கிக் கண்ணீரைத் துடைத்து
கண்ணீரைத் துடைத்திடுவார் —தேவனே

---

135 ப்ராண சிநேகிதர் (E. 49)

1 பாவ சஞ்சலத்தை நீக்க
ப்ராண ஸ்நேகிதருண்டே
பாவ பாரம் தீர்ந்து போக
மீட்பர் பாதம் தஞ்சமே
சாவு துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்.

2 கஷ்ட நஷ்ட முண்டானாலும்,
இயேசுவண்டை சேருவோம்.
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபங் காட்டுவோம்.
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பெலவீனம் தாங்குவார்.
நீக்குவாரே மனச்சோர்வை;
தீயகுணம் மாற்றுவார்.

3 பெலவீன மானபோதும்
கிருபாசன முண்டே.
பந்து ஜனம் சாகும்போதும்
புகலிடம் இதுவே.
ஒப்பில்லாத ப்ராணநேசா!
உம்மை நம்பி நேசிப்போம்.
அளவற்ற அருள் நாதா
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.

---

136 இயேசுவின் ஐங்காயம் (E. 50)

1 இயேசுநாதர் ஐங்காயத்தை நோக்கிப் பார்த்தால்
நித்ய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்;
பாவி! ப்ராணனைத் தந்துன்னை மீட்டவரை
நம்பிவந்து அண்ணாந்து பார்ப்பாய்.

பல்லவி

பார்! பார்! நோக்கிப்பார்!
யேசுநாதர் ஐங்காயத்தை நோக்கியே பார்
நித்ய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்.

2 பாவப்பாரத்தை தாங்கின ரட்சகரால்
உந்தன் குற்றங்கள் நீங்கினதே!
ஜீவியநாயகர் சிந்தின ரத்தத்தினால்
பாவக்கடனும் தீர்ந்தாயிற்றே! — பார்

3 எந்தக்கிரியைகள் ஜெபங்கள் கண்ணீர்களும்
உன்னை ரட்சிக்கமாட்டாதே! பார்!
திரு ரத்தமே தஞ்சம் என்றேடிவந்தால்
வல்லமீட்பர் கடாட்சஞ் செய்வார். — பார்

4 ப்ராயச்சித்தத்தின் க்ரியைகள் முடிந்ததே
என்று ஆண்டவர் வாக்களித்தார்;
சர்வ லோகத்தின் மீறுதல் பாவங்களைச்
சிலுவையில் நிவர்த்தி செய்தார். — பார்

5 பாவநாசகர் ஈயும்மா ரட்சிப்பையே
இந்நேரமே பற்றிக்சொள்வாய்;
உன் நீதியாம் இயேசுவின் புண்ணியத்தால்
பேரின்பம் பெற்றே வாழுவாய். — பார்

---

137 மாசில்லா சுத்தமா? (E. 51)

1 பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லாத் திரு ஸ்நானத்தினுல்?
பாவதோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுச் குட்டியின் ரத்தத்தினுல்?

பல்லவி

மாசில்லா சுத்தமா?
திருப்புண்ணிய தீர்த்தத்தினுல்
குற்றம் நீங்கிவிட குணம் மாறிற்று
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினுல்?

2 பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்ல மீட்பர் தயாளத்தினுல்?
மறு ஜன்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினுல்?

3 மணவாளன் வரக்களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினுல்?
மோட்ச கரை ஏறிச் சுகிப்பீர்களா?
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினுல்?

4 மாசு கறை நீங்கும், நீசப் பாவியே!
சுத்த ரத்தத்தின் சக்தியினால்,
முத்திப் பேருண்டாகும், குற்றவாளியே!
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்.

---

138 ஆராய்ந்து பாரும் (E. 52)

1 ஆராய்ந்து பாரும், கர்த்தரே; என் கிரியை யாவையும்
நீர் காணுமாறு காணவே, என்னில் ப்ரகாசியும்.

2 ஆராயும்! எந்தன் உள்ளத்தை, நீர் சோதித்தறிவீர்,
என் அந்தரங்க பாவத்தை மா தெளிவாக்குவீர்.

3 ஆராயும் திவ்ய ஒளியால், துராசை நீங்கவும்
மெய் மனஸ்தாபம் அதினால், உண்டாக்கியருளும்.

4 ஆராயும் சிந்தை, யோசனை, எத்திய நோக்கமும்
அசுத்த மனோபாவனை, உள்ளிந்த்ரியங்களும்.

5 ஆராயும் மறைவிடத்தை, மா தூய கண்ணினால்;
அரோசிப்பேன் என் பாவத்தை, தேவானுக்ரகத்தால்.

---

139 இயேசு உயிர்த்தார்

பல்லவி

கீதம், கீதம், ஜெய ஜெய கீதம்-கை கொட்டிப் பாடிடுவோம்

அனுபல்லவி

இயேசு ராஜன் உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம்—ஆ ஆ —கீதம்

சரணங்கள்

1 பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்-
புரண்டுருண்டோடுது பார்
அங்கு போட்ட முத்திரை காவல் நிற்குமோ?
தேவ புத்திரர் சந்நிதிமுன்—ஆ ஆ —கீதம்

2 வேண்டாம், வேண்டாம் அழுதிடவேண்டாம்-
ஓடி உரைத்திடுங்கள்
தாம் கூறின மாமறை விட்டனர் கல்லறை-
போங்கள் கலிலேயாவுக்கு—ஆ ஆ —கீதம்

3 அன்னாய்பா, ஆரியர் சங்கம்-
அதிரடிகொள்ளுகின்றார்
இன்னா பூதகணங்கள் இடி ஒலி கண்டு-
பயந்து நடுங்குகின்றார்—ஆ ஆ —கீதம்

4 வாசல் நிலைகளை உயர்த்தி நடப்போம்-
வருகிறார் ஜெயவீரன்
நம் மேள வாத்தியம் கை மணி பூரிகை
எடுத்து முழக்கிடுவோம்—ஆ ஆ —கீதம்

---

140 ஆயிர வருட அரசாட்சி

பல்லவி

இராஜாதி இராஜாவாக வருகின்றார் மேகத்தேரில்
இராஜ்ஜியத்தை ஈந்திடுவார் பரிசுத்தர்கட்கன்று

சரணங்கள்

1 ஆனந்தம், பரமானந்தம், பாரில்
வாழ்ந்திடும் பரிசுத்தர்கட்கெல்லாம்
ஆனந்த கீதங்கள் பாடிடும் சுத்தர்
ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தமே —இராஜாதி

2 கஷ்டமும், பசிதாகமும் பீடை
கண்ணீர் நிந்தை என்றும் மாறிப்போம்
துஷ்டரின் தொல்லையன் றகன்றிடுமே தீய
துஷ்ட சுபாவமதும் தொலைந்திடவே —இராஜாதி

3 குற்றம் பேசிடும் சத்துரு இல்லை
குற்றம் சாற்றிடும் துஷ்டனு மில்லை
முற்றிலும் சுத்தர்கள் வாசமதே அங்கு-
சுற்றிலும் தூதர்கள் சூழ்ந்திடவே —இராஜாதி

4 கறை, திரை யில்லா கன்னிகை யன்று-
களிப்புடனக மகிழ்ந்திடும் வேளை
காதலனளிக்கும் பொன் முடியுடனே நித்ப-
காலா காலமாய் வாழ்ந்திடவே —இராஜாதி

5 மண்ணின் சாயல் போய் விண்ணின் சாயலாய்-
அண்ணலை என்றும் விண்ணவரோடு
கண்டிடும் வேளை, ஆ! என்ன பாக்யம் வானில்
காதலிக் கந்தநாள் ஆ! ஆனந்தம் —இராஜாதி

---

141 மானிடர்மீது அன்பு

பல்லவி

சொந்தக்குமாரன், சொந்தக்குமாரன்,
சொந்தக்குமாரனைத் தந்தாய்—உந்தன்
சொந்தக்குமாரனைத் தந்தாய்

சரணங்கள்

1

இம்மானு வேலென பேருமிட்டீரே-எம்மோடிருக்கவும் செய்தீரே
தம்ஜனப் பாவங்கள் தீர்ப்பதினாலே-
சம்பூரணன் இயேசு வென்றீர் -சொந்

2

வல்லமை தேவன் நித்தியபிதா-நல்ல ஆலோசனைக் கர்த்தரே
சொல்லரும் சமாதானப் பிரபுவுமானோரே-
எல்லார்க்கும் அதிசயமானோன் -சொந்

3

மானிடர் மீது கொண்ட நின் அன்பு-தேனிலு மினிய தானவனை
ஆணிகடாவச் செய்ததோஐயோ-நானினிக்கைமாறென்செய்வேன்-

4

ஏகசுதன் என்று எண்ணாது எம்மை மேகநாதன் வரும் நாளதிலே
தேகம் விட்டேக ஜீவபாதைக்கு-ஏகனின் மாமிசம் கிழித்தீர்-சொந்

5

எத்தனை இயேசுவின் விசுவாசிகளோ-அத்தனையும் நின்பிள்ளைகளே
இத்தனை யோடுமுன் நித்திய மீந்த-அத்தனே! அன்புதான் என்ன-
—சொந்

6

நித்திய இராஜ்ஜியம் நிலைபெறும் போது-சத்தியசுதன்
[முடியணிவாரே
கர்த்தனுடன் சுத்தர் நித்திய மெய்வார்-பக்தர்பரவசம்
[கொள்வார்-சொந்

142 ஸ்தோத்திரப்பா

பல்லவி

ஸ்தோத்திரம் தேவா—காத்திட வா வா
நேத்திரம் போல் நேசித்திப் புது நாளில்
தீங்கொன்றும் அணுகாமல்—எமை
தாங்கி நடத்தும் தேவா—எமக்
கீந்த இப்புது நாளில்

சரணங்கள்

1 மானில மீதிலே—கானக வழியில்
மானிடரும்மை விரும்பியே பணிந்து வந்தோம்
முந்தின காலங்களில்—எம்
அன்னைபோல் அன்புடனே—நின்று
தந்தைபோல் தாங்கினீரே
—தோத்

2 ஜெபமதைக் கேட்கும் ஜீவனின் தேவா
ஏழைகளெம் ஜீவனைக் காத்தனைத்தீர்
ஜீவிக்க செய்தீரெமை—எத்
தீமையும் தீண்டிடாமல்—இங்கு
தீயோன் மேல் ஜெய மளித்தே
—தோத்

3 தினமும் நீர்நடத்தும் திருவழிதனிலே
தேவா உமையே நம்பிப் பின்பற்றுவேனே
வேதனை அணுகிடாமல்—இந்
நாளிலும் நடத்துவீரே இங்கு
வேறொரு துணையில்லையே
—தோத்

4 பார்தல மீதிலே பரிசுத்த ஜீவியம்
பரமனுமையே பார்த்து நான் செய்திடவே
என்றும் கிருபையருள்வாய்—மா
தூய்மையின் சாயலுடன்—உமை
மகிமையில் தரிசிக்கவே —தோத்

5 கர்த்தனும் வருகை களிப்புடன் காண
காத்து காத்தெம் கண்களும் களைத்திடுதே
இன்றையத்தின மிதிலே—நீர்
வந்தாலோ எம் துரையே—உம்
மந்தையும் மகிழ்ந்திடுமே —தோத்

---

143 ஆனந்தப் பாடல்கள்

பல்லவி

ஆனந்தப் பாடல்கள் பாடிடுவேன்...எந்தன்
ஆத்தும நேசரைப் புகழ்ந்திடுவேன்.

அனுபல்லவி

அலைச்சல்கள் யாவையும் அகலச்செய்தே—நல்
மேய்ச்சலில் எந்தனை மகிழச்செய்தே.

சரணங்கள்

1 மேலோக நாடெந்தென் சொந்தமதே—இந்த
பூலோக நாட்டமும் குறைகின்றதே
மாயையில் மனம் இனி வைத்திடாமல்—நேசர்
காயமதை எண்ணி வாழ்ந்திடுவேன். —ஆனந்த

2 நம்பிக்கை அற்றோனாய் அலைந்த வேளை—இயேசு
நாதன்என் பக்கமாய் வந்தனரே
பாவங்கள் பாரங்கள் பறக்கச்செய்தே—இந்த
பாரதில் எனை வெற்றி சிறக்கச் செய்தே. —ஆனந்த

3 அற்புதமாம் அவர் நேசமது—எந்தன்
பொற்பரன் சேவையே என் சோகமது
பற்பல கிருபைகள் பகருகின்றார்—ஏழை
கற்புடன் அவர் பணி செய்திடவே. —ஆனந்த

4 கானானின் கரையிதோ காண்கின்றதே—எந்தன்
காதலன் தொனி காதில் கேட்கின்றதே
காலம் இனி இல்லை உணர்ந்திடுவோம்—விரை
வாக நம் ஓட்டத்தை முடித்திடுவோம். —ஆனந்த

5 அழைத்தவரே அவர் உண்மையுள்ளோர்—தம்
அழைப்பதில் விழிப்புடன் நிறுத்த வல்லோர்
உழைத்திடுவோம் மிக ஊக்கமுடன்—அங்கு
பிழைத்திடவே அன்பர் சமுகமதில் —ஆனந்த

6 ஜெபமதைக் கேட்டிடும் ஜீவனுள்ள தேவன்
எம்பிதா ஆனதால் ஆனந்தமே
ஏறெடுப்போம் நம் இதயமதை—இன்றும்
மாறாமல் பதில் தரும் மன்னனிடம் —ஆனந்த

---

144 இயேசுவைப் பின்பற்றுவோம்

பல்லவி

ஜீவனுள்ள தேவனை நாம்
நம்பி என்றும் பின் பற்றுவோமே

சரணங்கள்

1 இப்பாரின் மீதினில்—எத்தீங்கு மின்றியே
எப்போதுமே—ஜெய மளித்திடுவார் —இயேசுவை

2 நிந்தை சோதனை—மிக ஏறிவந்தாலும்
சந்தோஷமாய்—தாங்கி நின்றிடுவோம் —இயேசுவை

3 தீமைக்குத் தீமை—நாம் செய்திடாமலே
நன்மை செய்து—ஜெயம் எடுத்திடுவோம் —இயேசுவை

4 சாந்தமுள்ளோராய்—மனத் தாழ்மை அணிந்துமே
சாத் மீகத்தின்—போர் புரிவோமே —இயேசுவை

5 சுய வெறுப்பதாம்—எம் ஆயுதமாகுமே
கிறிஸ்து சிந்தை—தரித்து நிற்போமே —இயேசுவை

6 பரம அழைப்பதில்—நாம் பங்கு பெற்றோமே
பரம நேசுவை—பார்த்து நடப்போமே —இயேசுவை

7 மேகம் மீதிலே—இயேசு வேகம் வாறாரே
மாறிடுவோம்—அவரைப் போலவே —இயேசுவை

---

145 பரிசுத்தரைத் துதிப்போம்

பல்லவி

பரிசுத்தர் பரிசுத்தரே—துதிப்பேன்
உமைத் துதித்துப் புகழ்ந்திடுவேன்

சரணங்கள்

1 வானம் விட்டுப் பூவினில் வந்த என் அன்பே
பாதக ரெமக்காய் ஜீவனை விடுத்த
நாதனைப் போற்றுவேனே —பரிசுத்தர்

2 கானக மிதில் கண்மணி போலெனைக் கண்டீர்
கனிவுடன் இனிய கவிகளைப் பாடி
பணிவுடன் துதித்திடுவேன் —பரிசுத்தர்

3 நேசர் நீரன்றி வேறொருவர் எனக்கிலையே
நேச மணாளா பாசமும் பெருக
நேசமாய்ப் புகழ்ந்திடுவேன் —பரிசுத்தர்

4 காப்பீர் என்னைக் கருணையுடன் அந்தம் வரைக்கும்
தப்பித மின்றி இப்புவி மீதே
செப்பின மறைப்படியே —பரிசுத்தர்

5 கன்னியர்கள் கனிவுடன் தேடிடும் நேசர்
தேனிலும் இனிமை நேசத்தின் மகிமை
ஆசித்து மகிழ்ந்திடுவேன் —பரிசுத்தர்

6 நேசத்தாலென் இருதயம் களித்திடச் செய்தீர்
அருமை என் நேசர் அழகில் சிறந்தோர்
அன்பினால் அகமகிழ்வேன் —பரிசுத்தர்

146 ஜெபம் கேளும்

பல்லவி

ஜெபம் கேளுமே கிருபை தாருமே

சரணங்கள்

1 கண்களில் காண்பவை யாவும் அநித்தியம்
காணப்படாதவை யாவுமோ நித்தியம்
கருத்துடனுணர்ந்து கர்த்தனைப் பணிய-உணர்வு-உணர்வு-தாரு

2 என் பெலன் யாவும் என்னை விட்டகலும்
நின் பெலனில் யான் நிலைபெறச் செய்யும்
வன்மைநீர் தாரும் வல்லமை தேவா-வன்மை-வன்மை-தாரு

3 கையின் காசும் கண்டிடும் கனுபோல்
வையக மீதினில் கைவிட்டோடிடும்
மெய்ப்பொருளாம் நின் அருளில் மகிழ-அருளை-அருளை-தாரு

4 துன்பங்கள் சூழ ஞானமும் மூழ்க
இன்பங்கள் மாற கண்ணீரும் ஊற
நின் பரலோக ஞானம் பெற்றுறவே-ஞானம்-ஞானம் -தாரு

5 அழகின் பெருமை அழிவைத்தான் பெறுமே
அணிந்திடும் அழகும் ஆக்கினையாமே
தேவபக்தியாம் தேக சிங்காரம்-பக்தி-பக்தி -தாரு

6 கர்த்தனே உம்மில் கனிவுடன் மகிழ
கர்த்தன் நீரேற்ற சிலுவையைப் புகழ
கற்புடன் உய்துன் தொண்டு யான் புரிய-கற்பு-கற்பு -தாரு

7 ஈகிறேனையா என்னையே மெய்யாய்
ஆத்துமா ஆவி தேகமும் உமக்காய்
ஏற்றுக் கொள் ஐயா அன்புடன் உய்ய-அன்பு-அன்பு -தாரு

8 மாம்ச சுபாவத்தை மனதார அழிக்க
திவ்ய சுபாவத்தை தீர்க்கமாய் தரிக்க
தூய! நின் வருகையில் தூய்மையாய் காண—தூய்மை
தூய்மை தாருமே

147 தோத்திரம் செய்குவேன்

பல்லவி

ஸ்தோத்திரம் செய்குவேனே தேவனுக்கு
மகிமையாய் கிருபை பெருகவே

சரணங்கள்

1 நேத்திரம்போல் காத்தணைத்தார் வாக்குமாறு தேவன்
சாற்றுவேன் துதிகளை—சாற்றுவேன் துதிகளை
ஏழை எந்தன் நாவினால் என்றுமவருக்கே. —தோத்

2 காத்திருந்து புதிய கிருபை பெற்று நாட்கள்தோறும்
போற்றுவேன் புனிதனை—போற்றுவேன் புனிதனை
பூதலத்தில் என்றுமே புதுமையாகவே —தோத்

3 ஊக்கமான அன்புடனே நேசர்சேவை செய்வேன்
நீக்குவார் குறைகளை—நீக்குவார் குறைகளை
அன்பரே தம் நிறைவினால் ஆசியருளுவார். —தோத்

4 காத்திடுவார் கபடற்றோரைக் கைவிடாமலென்றும்
மாசற்ற அன்பினால்—மாசற்ற அன்பினால்
மானிடரை நேசிக்கும் மகிமை தேவனே. —தோத்

5 கானுனக்குப் போதித்து நடக்கும் வழிகாட்டி
யோசனை சொல்லுவேன்—யோசனை சொல்லுவேன்
என்றுரைத்த தேவனோடென்றும் ஜீவிப்பேன். —தோத்

148 வானிலும் பூவிலும் சிறந்தவர்

பல்லவி

என்றும் புகழ்வேனே என்னேசனை நான்
எங்கும் புகழ்வேனே

அனுபல்லவி

இன்றுமவரைப் போற்றிப்புகழ்வேனே உள்ளம் கனிந்தே

சரணங்கள்

1 வானிலுமவர் பூதலத்திலும் மகிமையில் சிறந்தோரே—திவ்ய
கானகமீதில் கனிவுடன் காத்தணைத்தார்-தன் நேசத்தாலே-என்

2 ஒன்றிலுமவர்குன்றிடாது வென்று ஜெயித்தாரேதான்-எனக்காய்
நன்றியுடனவர் பாதம் சரணடைவேன்-அன்பால் நிறைந்தே

3 இம்மையிதினில் இன்றுவரையும் அன்னைபோல் முன்னிற்றே-
செம்மையாகவே தாங்கிநடத்திடுமென்-தயாளதேவா [எந்தன்

4 மேலுலகின் மகிமையான பூரண சந்தோஷம்-மீட்பின்
கருணையுடனே பரனெனக்கருளுகிறார்-நித்தம் நித்தமுமே

5 உண்மையுடனே உறுதியாக மண்ணையே வெறுத்தோலுய்-முழு
வெண்மையாகிட உன்னதநோக்கமுடன்-உள்ளம் முற்றாக [தும்

6 தேனைவிட நல்மதுரமே என் நாவுக்குமதுநாமம்-அன்பே
என்மணாளா ஆசை என்நேசரே நீர்-அன்பின் சொரூபா. —என்

---

149 ஒப்பற்ற அன்பு

பல்லவி

மறப்பேனோ நான்
எனக்காயுயிர் கொடுத்தீர் மகிமைதேவா

அனுபல்லவி

நாதனுமையே ஜீவதேவா
கருத்துடன் துதிப்பேன் அரசே

சரணங்கள்

1 அடிமையானீர்—பாவ
அடிமைத் தனத்தில் மடிந்த எனக்காய்
விடுவித்தீரே கிரயம் கொடுத்து
துதிப்பேனே உமையே தேவா. —மறப்

2 அன்னியனானீர்—உமக்
கன்னிய னெனையே சொந்தமதாக்க
கன்னிமரியில் காயமெடுத்த
மன்னவா உமையே துதிக்க. —மறப்

3 நிந்தை சகித்தீர்—நான்
தந்தை உமைப்போல் ஆகிடவே மா!
சிந்தினீரே உதிரம் எனக்காய்
சொந்தம் நான் உமக்கே தேவா —மற

4 தாழ்த்தினீரே—மிகத்
தாழ்ந்த எனைநீர் உயர்த்திட உமையே
வாழ்த்துவேனும் பாதம் பணிந்து
கர்த்தனே உமையே தேவா. —மறப்

5 துதிப்பேனே நான்—என்
அதிபன் உமையே அகமகிழ்வுடனே
கதியே தருவாய் இதுவே தருணம்
துதிக்கவே உமையே தேவா.

---

150 ஆவியின் அருள்

சரணங்கள்

1 ஆவியின் அருள்தர வா கல்வாரியின் நாயகனே
தோத்திரம் துதியுடனே உம்மை போற்றியே வாழ்த்துகிறேன்
ஆனந்தமுறவே ஆவியினலெமை ஆண்டிடவாருமையா. ஆவி

2 கானகத்தின் ஒளியே இங்கு கனிவுடன் இறங்கிடுமே
இங்கெழும் இருள் அனைத்தும் உமதுன்னத அருளதினல்
தூரவகற்ற தூய்மையின் கரத்தை நீட்டிடும் விரைவுடனே. ஆவி

3 ஆயிரத்தில் சிறந்தோர் என் ஆத்தும நேசரே நீர்
பாவிகட்கு பரனின் திருச்சாயலை அருளிடவே
தேவாதி தேவா அடிமையின்ரூபம் அன்புடனெடுத்தாயோ. ஆவி

4 நித்திய ராஜ்யமதில் இனிவெளிப்படும் மகிமையதை
நாயகனே சுடனே நான் சுதந்திரமாக்கிடவே
ஈலோகமேன்மை இன்பம்யாவும் அடியோடு வெறுத்திடுவேன்

5 ஐங்காய ஊற்றதிலே எனை அன்புடன் தோய்த்திடுமே
ஆத்தும ஆவியுடன் சரீரமும் பரிசுத்தமாய்
ஆகாயமீதில் அன்பரைச்சந்திக்க ஆயத்தமாகிடவே. ஆவி

---

151 கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தமா?

பல்லவி

மன்னன் கிறிஸ்து மணவாள ராஜனே
மின்னல் ஒளியாய்வரும் வேளையிலே

அனுபல்லவி

போரில் ஜெயங் கொண்டோர் எக்காளம் முழங்கையில் (2)
நாலா தேசமிருந்தும் கூடிடுவார்

1 அட்டதிக்கு மாளும் அதிசயமேரு
அம்பரர் விழுந்தொழும் எம்பிரானே
வட்டமிட்டா காயத்தில் வச்சிரப்பிரகாசத்தோடு (2)
வரும் நாளுக்கு நீ ஆயத்தமோ. —மன்னன்

2 பணத்தைச் செலவிட்டாலும் பரமகதி கிட்டுமோ?
பழையகுணம் விட்டாலல்லோ அழைப்பார் மேகத்தில்
இருமனமாயிருந்த லோத்தின் மனைவியைப்போல் (2)
எக்காளம் முழங்கும்போது ஏங்கிடாதே. —மன்னன்

3 ஜென்ம குணம் நீங்காமல் திகைத்துநின்று விழியாதே
திருக்கு நெஞ்சை நீக்கிடாமல் நாட்கழியாதே
பரமராஜன் பவனி காலமிதோ வருதல்லோ (2)
பாவமற்ற தூயோரை சேர்ப்பா ரல்லவோ. —மன்னன்

4 தியானநிலை குறையுதோ சிந்தைஎங்கும் சிதறுதோ,
மாய உலகம் வெறுக்க மனமில்லையோ?
மேகரதமேறும் நாளும் விரைந்திட்டதே (2)
ஏகமனம் பொருந்து உணர்ந்திடாயோ? —மன்னன்

5 உத்தம பயத்தோடு பக்தி விசுவாசமாய்
உத்தம கற்புள்ள மணவாட்டியே;
நித்தம் நித்தம் எதிர் நோக்கி நிற்கும்தாசரை (2)
நிமிஷத்தில் மறுரூப மாக்கிடுவார். —மன்னன்

6 கன்மலையின் வெடிப்பினில் தங்கும் என்உத்தமியே
என்று உன்னை அழைத்திடும் சத்தம் கேளாயோ?
நேசமென்னும் கொடியால் சோகமடைந்தால் உன்னை (2)
ஆசையோடணைக்குங் காலம் வருதல்லோ. —மன்னன்

152 வாருர் இயேசு ராஜன்

பல்லவி

வாருர் இயேசு ராஜன் அவர் மேகத்தில் பக்தரை
வேகத்தில் சேர்ப்பாரே. —வாருர்

சரணங்கள்

1 சுவிசேஷ மூலமாய் புறஜாதி வந்தனர்
அபிஷேகத்தைப் பெற்று இயேசுவோ டொன்ருக
ஒன்ருய் சரீரத்தில் நன்ருய்ப் பங்காளிகள் வென்ருர் சுதந்தரம்.

2 பரம அழைப்பதில் பங்கதைப் பெற்றுமே
பந்தயப் பொருளதைப் பெற்றிட ஓடுவோம் [மாம் லோகத்தை.
மறப்போம் பின்னுனதை வெறுப்போமே குப்பையாய் அற்ப

3 விட்டார் அப்போஸ்தலன் குப்பையாய் யாவையும்
அடைந்திட உயிர்ப்பதில் எப்படியாயினும்
ஓட்டத்தை ஓடியே நாடினுர் க்ரீடம் நல்போராட்டம் போராடி

5 தேவாட்டின் பின்னுலே எங்குமே செல்பவர்
லட்சத்து நாற்பத்தி நாலாயிரந்தானே
இயேசுவைப் போலவர் வாசமும் செய்தனர் காசினி மீதினில்;

6 முந்தின ஆளுகை வந்திடும் சீயோனே
சந்தோஷமாய் உந்தன் கர்த்தரை ஸ்தோத்தரி
இராஜாதி இராஜாவின் சிங்காசனம் உந்தன் பத்தியிலாகவே

7 புதிய சாலேம் முக்குப் போவோமே வாருங்கள்
முந்தின உயிர்ப்பதில் பங்கதைப் பெற்றுமே [வோம்
பளிங்காம் நதியங்கே ஒளியாம் ஆட்டுக்குட்டி இன்பமாய் மகிழு

---

153 இரண்டாம் வருகை

கண்ணிகள்

1 இயேசு ராஜன் வாரார் தூதரோடும் வாரார்
பக்தரை வானத்தில் சேர்த்திடவே.
ஜோதி மிகும் முகம் கண்டிடவே-ஆஹா
வேகம் நம்மை அங்கு சேர்த்திடவே. —இயேசு

2 மீட்கப்பட்ட கூட்டத்தில் வேகம்நீயும் சேரவே
கர்த்தாதி கர்த்தனுனே அழைக்கிறூர்
சொந்த நீதிதன்னில் சார்ந்து நின்றால்-ஐயோ
அந்தம் உன் இரட்சிப்பை காணுவாயோ. —இயேசு

3 நியாயத் தீர்ப்பு நாளில் நீ வெந்திடவே போகின்றாய்
வேகம் உன் முடிவையே சிந்தைசெய்
சூளைபோல் எரிகின்ற நாட்களதில்-மகா
இரட்சிப்பை நாடுயோடி தேடுவாயோ. —இயேசு

4 அந்திக்கிறிஸ்து வாரான் முத்திரையோடு வாரான்
ஆபத்துக் காலமதைச் சிந்தை செய்
அக்கினிமழை கல்மழை பெய்திடுமே-பூவில்
மூன்றி லொன்றாகவே எரிந்திடுமே. —இயேசு

5 கோப பாத்திரம் குடிக்க பாபிலோனின் சபைக்கு
காலம் மிகவும் கிட்டி நெருங்கிடுதே
திராட்சக்குலே அறுத்தாட்டிடுவார்-ஐயோ
பின்வாங்கினோரன்று அலறிடுவார். —இயேசு

6 மணவாளனோடு மணவாட்டியாம் சபை
மங்களமாய்க் கவி சாற்றிடுமே
மாட்சிமையோடு நாம் பாடிடுவோம்-அன்பர்
நேசத்தின் ஆழத்தை ருசித்திடுவோம்: —இயேசு

7 காதலித்தேன் நான் காசினியின்பம் விட்டு
கர்த்தரோ டென்று முறவாடிடவே
கனக மணவறை ஜொலித்திடுமே-அங்கு
கர்த்தராம் இயேசுவில் சுகிப்போமே. —இயேசு

---

154 அல்லேலூயா துதி

சரணங்கள்

1 துதி அல்லேலூயா துதி துதி என்றுமே
நிதி கர்த்தன் எங்கள் அதிபதி என்றுமே
கதி ஜீவ நதியவர் கருணை கடாட்சிப்பதால்
துதி அல்லேலூயா துதி துதி என்றுமே

2 அலைநிறை உலகிதில் அடியார் நமை
தொலையாது துங்கவன் தம்துணையு மீந்தார்
விலையுயர் உதிரங் கொண்டுலகை மீட்டதினாலே
துதி அல்லேலூயா துதி துதி என்றுமே

3 நித்தம் நித்தம் பக்தர் பரிசுத்த மடைய
கர்த்தன் வாக்குத்தத்தம் கொண்ட சத்திய மீந்தார்
வித்தகனின் சித்தப்படி இத்தரையில் யுத்தம் செய்ய
வேண்டி நின்று அல்லேலூயா துதி என்றுமே

4 பல பல பாடுகள் பலுகி வரினும்
நிலை பெற நிமலன் தம் ஆவியுமீந்தார்
சில காலம் சிதையுங்கால் சீர்திருந்தும்படி நமை
செய்பவனுக் கல்லேலூயா துதி என்றுமே

5 கறை திரை குறை நீங்கி கற்புமுள்ள
நிறையுள்ள மணவாட்டி ஆக்கிக் கொள்ள
மறையவன் அறைதனில் அழைத் தேக வருவதால்
இறைவனுக் கல்லேலூயா துதி என்றுமே

155 இயேசு வேகம் வருவார்

பல்லவி

வேகம் இயேசு வானில்
ஈதோ இளம் வேனில்

சரணங்கள்

1 அத்தி மரங்கள் துளிர்ப்பதைப் பாரீர்
புத்திரன் வருகை கிட்டிற்றென் றறிவீர்
சத்திய வழிதெரியாது தான் அலையும் மக்கள்
நிலை குலையும் லோக இன்பம் தொலையும்
வருவீர் சத்திய வழியில் வருவீர். —வேகம்

2 இரவில் திருடன் வருகிற விதமாய்
விரைவில் இயேசு வேகமே வருவார்
விசுவாசியே உன் ஜீவியம் சீரோ உன் பாதையும்
நேரோ ஏற்றுக் கொள்ளுவாரோ
நினையா நேரம் வருவார் கவனம் —வேகம்

3 தூதர்களோடு அவர் வரும் போது
பூதங்கள் யாவும் வெந்துமே உருகும்
வேதனையால் பூமி அடையுமே நாசம்
பக்தர்க்கின்ப வாசம் பாடல் பெருங்கோஷம்
நித்திய பாக்கியம் பெற ஆயத்தம் தானு —வேகம்

4 கர்த்தருக்குள் மரித்தோர் முதலுயிர்த் திடுவார்
சத்தியத்தில் நிற்போர் மறுரூப மடைவார்
வித்தகனேடவர் என்றுமே ஆள்வார்
சுத்தர் குழாம் சூழ்வார் நித்தியமாக வாழ்வார்
சந்திக்க நீ இன்று ஆயத்தந்தானு —வேகம்

5 பருதி முதலாய் யாவுமே ஒழியும்
சுருதியில் சிறிதும் ஒழியாது நிலைக்கும்
இறுதியாக அது உரைப்பது தானே
ஏசு வருவார் மெய்தான் இதை உணர்வாய் நீ தானே
வருவார் வருவார் விரைவில் வருவார். —வேகம்

---

156 ஒப்பில்லாத தேவசுதனை துதிப்போம்

பல்லவி

பரனின் சுதனாய் பாரினில் உதித்த நம்
இயேசுவை துதித்திடுவோம்—அன்பாய்

சரணங்கள்

1 பூரண தூயன் புகழ்பெறும் நேயன்
புவியவர் தேடும் புண்ணிய பூமான்
ஆதியோடந்தமும் அகிலமெங்கும் இவரே தான்
இயேசுவை துதித்திடுவோம்—அன்பாய் —பர

2 வேறொரு நாமம் இவர்க்கிணை இல்லை
பேயது நடுங்கும் தூதர்கள் வணங்கும்
பக்தருக்கானந்த மளித்திடும் நாமமிதே புவியில்
இயேசுவை துதித்திடுவோம்—அன்பாய் —பர

3 தாழ்மையை எடுத்து தாசனுயுறைந்து
தாமுயிர் சத்யம் பாதை என்றுரைத்து
அம்பரமேகிட ஆசிகள் எமக்களித்தோர் இவரே
இயேசுவை துதித்திடுவோம்—அன்பாய் —பர

4 பாவிகள் எமையே பரிவுடன் அழைத்து
பாவங்கள் போக்கி பரிசுத்தமளிக்க
பாவக்கறைகளதை உதிரமதால் துடைத்தோர் இவரே
இயேசுவை துதித்திடுவோம்—அன்பாய் —பர

5 தாதனிடத்தில் தாசர்கள் எமக்காய்
பரிவுடன் ஜெபித்து பூரணமளித்து
மகிமையில் சேர்த்திட திரும்பவும் வருவாரே இவரே
இவரையே துதித்திடுவோம்—அன்பாய் —பர

---

157 கர்த்தர் சமீபமாயிருக்கிறார்

தீபதை—கண்ணிகள்

1 வந்திடும் வேளை நெருங்கினதாலே-மகிழ் கொண்டாடுவோம்
தந்தைப் பராபரன் சுந்தரனாய்
சந்திக்குங் காலம் விந்தையல்லோ
சொந்தக்குமாரனாய்—தூயாவி தந்தவராய்
அற்புதம் ஆமென், அன்னவர் கானம்
இந்திலம் தேனே, நிம்மிடம் தோண—விந்தையில் விந்தையே —வந்

2 மருதோன்றி ரோஜா, மணக்கும் வாசனே—மகிழ்ந்து வாறாரே
மணக்கும் லீபனோன் வாசனைபோல்
மங்கையர் மா, பரிசுத்தராய்
மணக்கும் சேயனே—மா, கமழ் சந்தனரே
மாசில்லா தூயர் மதுரம் மா வாயர்,
மங்கையர் காயர், இங்கித நேயர்—மங்கிடா ஜோதியே—வந்

3 துள்ளிடும் மான்போல் துலங்கி வாறாரே—தோன்றிடும் தபனன்போல்
தூயர், தூயர் என்று சாற்றிடவே
தூய்மை துலங்கும் கோட்டைக்குள்ளே
தூயரோடென்றும்—சோபனக் கீதத்தால்
ஆஹா எந்நாளும் ஆட்டுக்குட்டிக்கு
அல்பகல் துதி, சீயோனின் பதி-சாற்றியே போற்றுவோம்-வந்

4 மகிமை பொருந்தும் கிருபை வாசனே-மங்களசாந்தனே
மறுரூப சாயல் ஈந்திடுவார்,
மன்னர் தம் மகிமை கண்டிடவே,
மாசற்ற ஜோதியரே—மண்மயம் நீக்கிடுவார்
மகா ஜெயமே மகா ஜெயமே,
மங்கள ராசன், மகிமை வாசன்-மணக்கும் கந்தமே-வர

---

158 பரம பாக்கியம்

கண்ணிகள்

1 ஆ எந்தன் பாக்கியத்தை எண்ணிடவே—எனக்
கானந்தமே பரமானந்தமே
மேதினி கஷ்டங்கள் மறந்து வேகம்—எந்தன்
பாக்கிய தேசமதில் சேர்ந்திடுவேன்—அதின்
மகிமையைக் காண உள்ளம் கொதித்திடுதே—அன்று
மகிபரை என்றும் வாழ்த்தி துதித்திடுவேன் —ஆ

2 பூலோக மேன்மைகள் ஒன்றும் வேண்டாம்—இப்
பூவின் சம் பாத்தியங்கள் ஒன்றும் வேண்டாம்
லோகம் எனக்கும் நான் லோகத்திற்கும்—முற்றும்
யாகமாய் அர்ப்பணம் செய்கிறேன் நான்—நாச
லோகமே உன் நேசம் வெறும் கிலேசமல்லவோ—சொர்க
லோக வாசம் எண்ண உள்ளம் வாஞ்சித்திடுதே —ஆ

3 இமைப்பொழு நேரிடும் கஷ்டமெல்லாம்—என்
எண்ணிடா மகிமையின் பதவிதானே
சடுதியில் வரும் நேசர் அரை கொடியில்—நான்
அடைந்திடும் மணவறை மகிழ்வாசமே—எந்தன்
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்-அவர்
அடிதொழு புகழ்பாடி ஆர்ப்பரிப்பேன் —ஆ

4 கோடா கோடி தூதர் போற்றிடவே-கவி
பாடும் மனோகர கீதங்களும்
வீணைகள் கைகளில் ஏந்திநின்று—என்றும்
வீண்டவர் சங்கீதம் பாடிடுவார்—அன்று
விண்ணில் நின்று அண்ணலையே போற்றிடுவேன்—அங்கு
விண்ணவர் சயலாய் வாழ்த்திப் பாடிடுவேன் —ஆ

5 சிலுவை சுமந்து நான் ஏகிடுவேன்—அவர்
சிலுவையை எங்கும் கூறி உயர்த்திடுவேன்
சிலுவையின் பாடுகள் பெருகிடவே—நான்
சிலுவையால் ஜெயகீதம் பாடிடுவேன்-அப்போ
சிலுவையின் மேன்மையால் களித்திடுவேன்-நான்
